விலை : 20.00
பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 15 செவ்வாய்க்கிழமை (01.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# நம்பகத்தன்மை குறித்து ஆராய கமரூன் இலங்கைக்கு விஜயம்



(கொழும்பு)

விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மை குறித்து ஆராய பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க

## ஆளும் கட்சியில் எதிர்க்கட்சி இணையாது

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேம

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

### நாணயக்கார எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிஷ முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து

23ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை இராணுவத்தை தரமுயர்த்த இந்தியா உறுதி



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர்சிங் சுஹக், நேற்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா மற்றும், உயர்மட்ட அதிகாரிகளுடன்

23ஆம் பக்கம் பார்க்க

## சிறு பிரச்சினையை தீர்க்காத அரசு

பின் அனுராதபுர மாவட்ட பாராளு
மன்ற உறுப்பினர் செஹான் சேம

23ஆம் பக்கம் பார்க்க

தமிழ் அரசியல் கைதிகள் விடு
தலை செய்யப்பட வேண்டும் என
நாடாளுமன்ற உறுப்பினர் வாசு

செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு
கொழும்பில் நேற்று இடம்பெற்றது.
இதில் கலந்து கொண்டு கருத்து

23ஆம் பக்கம் பார்க்க

(கொழும்பு)
இலங்கைக்குப் பயணம் மேற்
கொண்டுள்ள இந்திய இராணுவத்
தளபதி ஜெனரல் தல்பீர்சிங் சுஹாக்,
நேற்று இராணுவத் தளபதி லெப்.
ஜெனரல் கிரிசாந்த டி சில்வா மற்
றும், உயர்மட்ட அதிகாரிகளுடன்

23ஆம் பக்கம் பார்க்க

## சிறு பிரச்சினையை தீர்க்காத அரசு தமிழர் பிரச்சினையை தீர்க்குமா?

### சித்தார்த்தன் எம்.பி சபையில் கேள்வி



(கொழும்பு)
புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களினால் செய்ய முடியாததை, சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளினால் செய்து விட முடியாது என

23ஆம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு பணம் வழங்கிய மகிந்த; விசாரணைக்கு பிரதமர் இணக்கம்

(கொழும்பு)
2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது வடக்கு மக்களின் ஆணையை மாற்றியமைப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கப்பட்

24ஆம் பக்கம் பார்க்க

## தமிழருக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் என்னவாகும்!

### ராவணா பலய அச்சம்

(கொழும்பு)
தமிழ் மாணவன் உயிர்த் தியாகம் செய்ததை வைத்துக் கொண்டு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வடக்கிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில், பொலிஸ் அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்கிவிட்டால் என்னவாகும் என்பதை ஜீரணிக்க முடியாது என்று ராவணா பலய அமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதல்லயை நிறுத்துமாறு கோரி ஜனாதிபதி செயலாளரை ராவணா பலய அமைப்பின் இணைப்பாளர்

24ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்-முஸ்லிம் முறுகலை தீர்த்து வைக்க நடவடிக்கை

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)
கல்முனை பிரதேசத்தில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்னர் அப்பிரதேசத்திலுள்ள தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் காணப்படும் முறுகலை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என நகர் திட்டமிடல்

24ஆம் பக்கம் பார்க்க

## பாக்.போர்க்கப்பல் இலங்கையில்!

(கொழும்பு)
இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹாக் இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில், பாகிஸ்தானின் பாரிய போர்க்கப்பல் ஒன்று கொழும்பு வந்தடைந்துள்ளது.

நான்கு நாள் நல்லெண்ணப் பயணமாக, பிஎன்எஸ் சம்சீர் என்ற இந்தப் போர்க்கப்பல், நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாக பாகிஸ்தான் தூதரகம் தெரி

24ஆம் பக்கம் பார்க்க

## இந்தியத் தளபதி பிரதமருடன் பேச்சு

(கொழும்பு)
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹாக், நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். நாடாளுமன்ற வளாகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

பிரதமருடன், சட்டம், ஒழுங்கு

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு இனி விடுதலை கிடைக்காது!

### அரசு கூறியதாக ராவணா பலய தெரிவிப்பு

(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மேலும் விடுதலை செய்யப்போவதில்லை என்று அரசாங்கம் உறுதிப்படத் தெரிவித்துள்ளதாக ராவணா பலய அமைப்பு நேற்று தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை பெறும் நிலையில் அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட புலனாய்வுப் பிரிவினரும், படை அதிகாரிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கத்திடம் ராவணா பலய அமைப்பு முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி செயலாளரை சந்திப்பதற்காக ராவணா பலய நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்றது. இந்த சந்திப்பில்

24ஆம் பக்கம் பார்க்க

## அஞ்சலி செலுத்தியோர் விசாரிக்கப்பட்டனர்?

(யாழ்ப்பாணம்)
மாவீரர்கள் தினத்திற்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தியவர்கள் தொடர்பில் பொலிஸாரினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாவீரர்கள் தினத்தன்று இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அது குறித்து அன்றைய தினம்

23ஆம் பக்கம் பார்க்க

## கவிஞர் ஜெயபாலனுக்கு விசா வழங்க மறுப்பு



(கொழும்பு)

நோர்வேயில் வசிக்கும் ஈழத்துக் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலனுக்கு இலங்கை வருவதற்கு நுழைவு விசா வழங்க அரசாங்கம் மறுத்துள்ளது.

கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் எழுதிய மூன்று படைப்புகளின் சிங்கள மொழியாக்கத் தொகுப்பான 'செக்கு கோண' நூல் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ். பொது நூலக மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்கேற்க கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனுக்கு அரசாங்கம் நுழைவு விசா வழங்க மறுத்துள்ளது.

அரசாங்கம் தனக்கு நுழைவுவிசா விண்ணப்பத்தை நிராகரித்து விட்டதால் இந்த நிகழ்வில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் தனது முகநூலில் தெரிவித்துள்ளார். (எ-11)

## தப்பிச் சென்ற கைதியை மீள ஒப்படைத்த உறவுகள்

(கொழும்பு)

சிறை அதிகாரிகளிடம் இருந்து தப்பிச் சென்ற கைதி ஒருவரை, அவரது உறவினர்களை மீண்டும் சிறைக்கு அழைத்து வந்து ஒப்படைத்த சம்பவம் ஒன்று கண்டியில் நடந்துள்ளது.

கண்டி மேல் நீதிமன்றத்தில் நடந்து வரும வழக்கு விசாரணை ஒன்றில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி விட்டு பல்லேகலையில் உள்ள சிறைக்கு மீண்டும் அழைத்து வரும் போது சிறை அதிகாரிகளின் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கைதி தப்பிச் சென்று சில மணி நேரத்தில் அவரை அவரது உறவினர்கள் மீண்டும் அழைத்து வந்து சிறையில் ஒப்படைத்தனர்.

கண்டி பிரதேசத்தை சேர்ந்த இந்த சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருள் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

தமது பாதுகாப்பில் இருந்த கைதி தப்பிச் சென்ற சம்பவம் காரணமாக இரண்டு சிறை அதிகாரிகள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

## நாடு தழுவிய போராட்டம் தொழில் சங்கங்கள் தீர்மானம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக பாரிய தொழிற்சங்க போராட்டம் ஒன்றினை மேற்கொள்ள அரச, அரச சார்பான மற்றும் தனியார் தரப்புக்கள் தீர்மானித்துள்ளன.

தொழில் சங்கங்களின் ஒன்றியத்தின இணைப்பாளர் சமன் தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் சலுகைகள் நீக்கப்பட்டமைக்கு எதிராக இந்த நாடு தழுவிய போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பல தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கொழும்பில் நேற்று கூடி இந்த தீர்மானத்தை மேற்கொண்டனர்.

இதனிடையே இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் அரச சேவையாளர்களுக்கு வேதனம் அதிகரிக்கப்படாமை தொடர்பில் தாம் எதிர வரும் வாரத்தில் நாடளாவிய ரீதியாக தொழிற சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-11)

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

## வழிபடுநர் பேரவை உறுப்புரிமை விண்ணப்பம் கோரல் - 2016

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாகவோ செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:-2015.12.01 தொடக்கம் 2015.12.31 பிற்பகல் 5 மணிவரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய காசுக்கட்டளை, தபாற்கட்டளை விபரங்கள் தேவைப்படும் இடத்தில் 021 321 3024, 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாகத் தயாரித்துக் கொள்ளலாம்.

2015 ஆம் ஆண்டு வழிபடுநர் பேரவை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணபத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிபடுநர் பேரவையின் புதுப்பிப்பதற்கான விண்ணபத்திலும் (2ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் பேரவை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம். (முதலாவது அட்டவணை) விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பு:- விண்ணப்பங்கள் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

★ சமாதான நீதவான் ★இந்து மத குரு
★ இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் ★கிராம சேவை உத்தியோகத்தர்
★ அரசாங்க பாடசாலை அதிபர்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை பொறிக்கப்பட வேண்டும்

ஆ.தியாகராசா -தலைவர், அறங்காவலர் சபை.

முதலாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :
2. பிறந்தநாள் :
3. இந்துசமயத்தவரா ?
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா?
5. நீங்கள் உறுப்புரிமை 3(2)(ஏ) அல்லது 3(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விவரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :

7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/ தபாற் கட்டளையின் விபரம்:

காசுக்கட்டளை / த.க. எண் அலுவலகமும் வழங்கிய நாளும் தொகை

8. நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் எதிலாவது எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.

9. இக் கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துகின்றேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..................................................

விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணபத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .......... ஆம் ஆண்டு .............மாதம் .......................நாளன்று ...................................எனுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார்.

..................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு : விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான "றபர் ஸ்டாம்ப்" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2015.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இரண்டாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

நயினாதீவு
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலின்
அறங்காவலர் சபைச் செயலாளருக்கு,

அன்பார்ந்த ஐயா,

### வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்

........... ஆம் ஆண்டு சனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவைக்கான எனது சந்தாவை புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன். ........................அஞ்சலகத்தால் .................ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட .............. ஆம் இலக்கங் கொண்ட காசுக் கட்டளை/ தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று வெளிப்படுத்துகின்றேன்.

..................................................

உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணபத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில்..................ஆம் ஆண்டு........................மாதம் .............. நாளன்று ........................................எனுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார்.

..................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு : விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான "றபர் ஸ்டாம்ப்" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2015.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(C-2835)

## போரால் வடக்கில் 10 பேரில் ஒருவர் முள்ளந்தண்டு உபாதையால் பாதிப்பு

### ஜேர்மனிய தூதரகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

போரின் காரணமாக வடக்கில் 10 பேருக்கு ஒருவர் விசேட தேவை கொண்டவராக வாழ்வதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

போரின் பின்னர் பலர் முள்ளந்தண்டு காயங்கள் உட்பட்ட அதற்கு சமமான இயலாமைகளை கொண்டுள்ளனர் என்று ஜேர்மனிய தூதரகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அண்மையில் 50 சக்கர நாற்காலிகளை வழங்கும் நிகழ்வின்போது இந்த விடயம் வெளியானது.

தமது ஆய்வின்படி வடக்கில் 200பேர் வரை முள்ளந்தண்டு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களால் சக்கரநாற்காலிகளை சுமார் 5 வருடங்களுக்கு பயன்படுத்தமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## அதிபர்களுக்கான அனைத்து விடுமுறைகளும் இன்று முதல் 4 ஆம் திகதி வரை இரத்து

### கல்வி அமைச்சர் காரியவசம் அறிவிப்பு

இன்று முதல் 4 ஆம் திகதி வரையில் அதிபர்களுக்கான சகல விடுமுறைகளும் இரத்து செய்யப்படுவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.

டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அதிபர்கள் விடுமுறை பெற்றுக் கொள்ளக் கூடாது.

பாடசாலை சீருடைகளுக்கு பதிலாக இம்முறை வவுச்சர் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த வவுச்சர்கள் பாடசாலை அதிபர்களின் பூரண கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

வவுச்சர் வழங்கும் நடவடிக்கைகளில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுவதனை தடுக்க இவ்வாறு அதிபர்களின் விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்களின் விடுமுறை இரத்து குறித்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுச்சர்களின் செல்லுபடித் தன்மையை அறிந்து கொள்ள 071439 0000 என்ற இலக்கத்திற்கு வர்த்தகர்கள் குறுஞ்செய்தி அனுப்பி வைக்க முடியும் என அமைச்சர் அறிவித்துள்ளார். (இ-7-10)

# பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுத்தப்போவதில்லை



பூகோள காலநிலை உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிரான்ஸ் தலைநகர் பாரீஸை சென்றடைந்துள்ளார். நேற்று முன்தினம் காலை பாரீஸ் சென்றடைந்த ஜனாதிபதி தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் பூகோள காலநிலை மாநாட்டில் பங்கேற்றிருந்தனர்.

## ஜனாதிபதி பாரீஸில் திட்டவட்டம்

(கொழும்பு)

**நாட்டை மிகவும் நேசிக்கும் தான் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் வகையில் எவ்வித மான நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸில் வசிக்கும் இலங்கையர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் பிரான்ஸ் வாழ் இலங்கையர்களுக்கும் இடையிலான சந்திப்பு பாதுகாப்பு காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி இருந்த நிலையில், நேற்று முன்தினம் பாரீஸில் இந்த சந்திப்பு நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடுவதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடுவோருக்கென விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் தளர்த்தப்பட்டுள்ளன.



இதில் நோயாளர்களை பார்வையிட வருவோர் அமர்ந்திருப்பதற்கென ஆசனங்களும் கடந்த வாரம் முதல் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களை பார்வையிடுவதற்கென வருவோர்கள் பாஸ் நடைமுறையின் படியே கடந்த சில வருடங்களாக அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

இதேபோல் பார்வையிட வருவோர் உள்ளே அனுமதிக்கப்படும் வரையில் வைத்தியசாலைக்குவெளியே வெயிலிலும் மழையிலும் நீண்ட நேரம் காத்துநிற்க வேண்டிய நிலைமை இருந்தது. இந்நிலைமை தற்போது மாற்றியமைக்கப்பட்டு பாஸ் நடைமுறை நீக்கப்பட்டு பார்வையாளர்கள் வெளியே காத்திருக்காமல் உள்ளே அமர்ந்திருப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சாலையில்உணவுகொண்டு செல்வதற்கு 6 மணி முதல் 6.30 மணிவரையிலும் நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 6 மணிவரையிலும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு நோயாளர்களை பார்வையிட வருவோரில் வெற்றிலை மென்றுகொண்டும் மதுபோதையில் வருவோரும் நோயாளர்களை பார்வையிட பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வைத்தியசாலைக்கு வருவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நோயாளர்களை பார்வையிட வருவோர் வைத்தியசாலையின் எந்த வாயிலினூடாகவும் உள்ளே வரவும் செல்லவும் முடியும். இவ்வாறு வருவோர்பொலித்தீன் பைகள் மற்றும் கழிவுப் பொருட்களை வைத்தியசாலை வளாகத்தினுள் வீசாது இயன்றளவு தம்முடனேயேகொண்டுசெல்லு மாறும் அல்லது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் போடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-4)

## கோத்தாவை கைதுசெய்ய ஆலோசனை வழங்கவும்

அவன்கார்ட்மிதக்கும்ஆயுத களஞ்சியசாலை விவகாரம் தொடர்பாக முன்னாள்பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 5 பேரை கைது செய்ய குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு ஆலோசனை வழங்குமாறு மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் சட்டமா அதிபருக்கு அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆயுத களஞ்சியம் தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் அந்த விடயத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 5 பேரை கைது செய்ய முடியுமெனஅந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## 10 இலட்சம் தீயால் நாசம்

சாவகச்சேரி மீசாலை சந்தியில் அமைந்துள்ள பல சரக்கு வியாபார நிலையம் தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியது. நேற்று அதிகாலை ஒருமணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கடையின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இச்சம்பவத்தினால் கடையில் உள்ள சுமார் பத்து இலடசத்திற்கும் அதிக பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக வர்த்தக நிலைய உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தீவிபத்தா? அல்லது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவமா? என சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்குசுமார் எட்டு மாதத்திற்கு முன்னர் இவ் உரிமையாளரின் இன்னொரு வியாபார நிலையம் தீயினால முற்றாக எரிந்து நாசமாகியது குறிப்பிடத்தக்கது. (இ)

## சோபித தேரர் நினைவையொட்டி மாதுளுவாவே சோபித கிராமம்

மறைந்த சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரரின் நினைவையொட்டி "மாதுளுவாவே சோபித கிராமம்" என்ற பெயரில் உதாகம்மான வீடமைப்பு திட்டம் ஒன்றை அமைச்சர் சஜித் பிரேமதாச நேற்று ஆரம்பித்து வைத்தார். அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுணுகம் வெகர பிரதேச செயலக பிரிவிலேயே இந்த வீடமைப்பு திட்டத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 150 வீடுகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேவேளை குறித்த வீடமைப்பு திட்டம் அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின கீழ் ஒதுக்கிடப்படவில்லை. பிரத்தியேக அன்பளிப்புகளின் அடிப்படையிலேயே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.(இ-7-10)

# ஜெயவர்த்தன அதிரடி சென்ரல் அணி வெற்றி





நியூசிலாந்தில் நடந்து வரும் உள்ளூர் இருபது-20 போட்டியில் ஜெயவர்த்தனவின் அதிரடியால் சென்ரல் டிஸ்டிக் அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

நியூசிலாந்தில் ஜோர்ஜி பை சுப்பர் ஸ்மாஷ் இருபது-20 போட்டிகள் நடைபெற்று வருகிறது.

இதில் சென்ரல் மற்றும் நோர்த்தன் டிஸ்டிக் அணிகள் மோதியது. நாணய சுழற்சியில் வென்ற நோர்த்தன் டிஸ்டிக் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

கோரி அண்டர்சனின் அதிரடியால் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 152 ஓட்டங்கள் எடுத்தது.

அண்டர்சன் 35 பந்தில் 47 ஓட்டங்கள் (ஒரு பவுண்டரி, 5 சிக்சர்) எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பின்னர் 153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய சென்ரல் அணிக்கு தொடக்க வீரர்கள் ஜோர்ஜ் வொர்கர், ஜெயவர்த்தன அதிரடி தொடக்கம கொடுத்தனர்.

வொர்கர் 39 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மறுமுனையில் அசத்திய ஜெயவர்த்தன அரைசதம் கடந்தார். அவர் 59 பந்தில் 17 பவுண்டரி 2 சிக்சர் உட்பட 97 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வில் எங் 9 பந்தில் 2 சிக்சருடன் 19 ஓட்டங்கள் குவித்து அணியை வெற்றி பெறச் செய்தார்.

இதனால் 20 ஓவர்களில் 2 விக்கெட் மட்டும் இழந்து சென்ரல் 158 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

97 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதத்தை தவறவிட்ட ஜெயவர்த்தன தொடர்ச்சியாக 2-வது முறை அரைசதம் கடந்து அசத்தியுள்ளார்.

8 போட்டிகளில் பங்கேற்ற சென்ரல் அணிக்கு இது 3-வது வெற்றியாகும். (க)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශිය සභාව

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

My No :Np/14/41(15)/03/Tender/2016 Date: 2015.12.01

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

## 2016-ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2016 தொடக்கம் 31.12.2016 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 7878150.00 | |
| 02 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 172305.00 | |
| 03 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 2835825.30 | 250.00 |
| 04 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 150000.00 | 250.00 |
| 05 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 57487.50 | 250.00 |
| 06 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 255150.00 | 250.00 |
| 07 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 42000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 01 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 16088415.00 | |
| 02 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 53025.00 | 250.00 |
| 03 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 50000.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 01.12.2015 - 10.12.2015 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 11.12.2015 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 11.12.2015 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2015.11.12ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. தியாகராசா தியாகச்சந்திரன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(சி-2834)

# பாலிவுட் நடிகையுடன் கோவாவில் சானியா



இந்திய டென்னிஸ் வீராங்கனை தனது விடுமுறையை கோவாவில் செலவிட்டு வருகிறார். இவருடன் பாலிவுட் நடிகை பரினிட்டி சோப்ரா மற்றும் நண்பர்கள் இணைந்துள்ளனர்.

அங்குள்ள கடற்கரையில் விளையாடியும், விதவிதமான உணவுகளை ருசித்தும் நேரத்தை செலவிட்டு வருகின்றனர். இது தொடர்பான புகைப்படங்களை சானியா மிர்சா மற்றும் பரினிட்டி சோப்ரா தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர். (க)

**யா/ பரமேஸ்வரா வித்தியாலயம்**
**திருநெல்வேலி**

## பரிசளிப்பு விழா - 2015

காலம் : 02.12.2015 (புதன் கிழமை)
நேரம் : காலை 9.00 மணி
இடம் : சிவகாமி மஹால், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

தலைவர் : திரு.ந.விஜயசுந்தரம் (வித்தியாலய அதிபர்)

பிரதம விருந்தினர் : கௌரவ பொ.ஐங்கரநேசன் விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர், வடமாகாணம்

சிறப்பு விருந்தினர்கள் : கௌரவ பா.கஜதீபன் (கௌரவ மாகாணசபை உறுப்பினர், வடக்கு மாகாணம்)
உயர்திரு.அ.அகிலதாஸ் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)

கௌரவ விருந்தினர் : உயர்திரு த. பகீரதன் (இயக்குநர், சிவகாமி மஹால் - திருநெல்வேலி)

**தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
SDS, SDC, OSA

(க)

# காலணிகளை வைத்து பாரிஸில் நூதனப் போராட்டம்






பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இரண்டு நாட்கள் பருவநிலை உச்சி மாநாடு நடைபெறுகிறது. இதில் 150இறகும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்கிறாரகள்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ரஷ்யா ஜனாதிபதி புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் போன்ற முக்கிய தலைவர்களும் கலந்து கொண்டுள்ளனர். கடந்த 13 ஆம் திகதி பாரிஸில் தீவிரவாதிகள் தொடர் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 100 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் பலியானார்கள்.

இந்த சம்பவம் நடைபெற்று சில தினங்களுககுள் உலகத் தலைவர்கள் பாரிஸில் கூடுவதால் வரலாறு காணாத அளவில் பொலிஸார் குவிக்கப்பட்டு அந்தப் பகுதியை தங்கள் பாதுகாப்பு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்நிலையில் பருவநிலை உச்சி மாநாடு நடக்கும் இடத்தில் இரண்டு போராட்டங்களை நடத்த பொதுமக்கள் முடிவு செய்தனர். இதற்கு பொலிஸார் அனுமதி கொடுக்க மறுத்து விடடனர்.

இதனால் பொதுமக்கள் தங்கள் போராட்டத்தை நூதன முறையில் நடத்த திட்டமிட்டனர். இதற்காக அவர்கள் ஆயிரத் திற்கும் மேற்பட்ட வெற்றுக் காலணிகளை அந்த இடத்தில் வைத்து தங்கள் எதிர்ப்பு கடிதங்களை அதன்மீது வைத்து நூதன முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்தினார் கள். பெரும்பாலான கடிதங்களில் சிரியா மோதல் மற்றும் பருவநிலை குறித்து வாசகங் கள் இடம் பெற்றிருந்தன.

ஏனைய இடங்களில் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு மனித சங்கிலி போராட்டம் நடத்தினார்கள். (இ-7-10)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது? என்று
எண்ணுகின்றீர்களா...

(2276)

எம்முடன் பேசுங்கள்

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்

021 222 8117, 077 900 8776

Sponsored By Enlightnment Circle, UK


## அரச ஊழியர்களுக்கான வாகன கொடுப்பனவு ஒரே தவணையில்

அரச ஊழியர்களுக்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட 5 வருடத்திற்கான கொடுப்பனவை ஒரே தவணையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கொடுப்பனவு அடுத்த வருட முற்பகுதியில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டம் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர்களைத்தெளிவுபடுத்தும் கூட்டத்தில் விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்திற்குப் பதிலாக மாதாந்தம் 15.000 வாகனக் கொடுப்பனவை வழங்க இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.(இ)


## வாழ்வக அனுமதி-2016

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியல் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வைவற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிள்ளைகளுக்கான உணவு, உடை உப்பட அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

இவ்விதமான பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 20.12.2015 இற்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழி சமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்பு: தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம், தொலைபேசி:- 021 224 0146**

(சி-2832)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:25<br>தகைமை/தொழில்:A/L/ லண்டன்PR<br>தொ.இ: B/5274 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 10<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/3168 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSC/QS<br>தொ.இ: B/5275 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 14சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3170 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 31செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/கணக்காளர்<br>தொ.இ: B/5276 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 41செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3181 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 36<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSCIT லண்டன் PR<br>தொ.இ: B/5278 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 26செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3183 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

01.12.2015
(கார்த்திகை 15, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிவரை
சஷ்டி பின்னிரவு 1.59 மணிவரை
பூசம் காலை 6.20 மணிவரை
இராகுகாலம் 3.14-4.44 மணிவரை
சுபநேரம் 10.44-12.14 மணிவரை
ஆறுமுக நாவலர் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூராடம் | | சந் |
| | | | குரு |
| | சூரி,சனி புதன் | சுக் | ராகு செவ் |

**மீனம்:** நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியமொன்று இன்று கைகூடும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமையடைவீர்கள்.

**மேடம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்:** கடினமான வேலைகளை கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், திருமண முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு.

**கும்பம்:** உறவினர்கள் மத்தியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், தொழில் மேன்மையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** நண்பர்களின் யோசனைகள் நல்லதாகத் தெரியும், சிந்தனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**மகரம்:** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்பங்களிடையே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, எடுத்த கருமங்கள் எளிதில் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், விருந்தினர் வருகையால் கூடுதல் செலவுகள் ஏற்படலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு தேவை.

**விருச்சிகம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய திட்டங்கள் வெற்றி தரும், ஆன்றோர் சந்திப்புண்டு, தந்தை வழி உறவில் நன்மையுண்டு.

**துலாம்:** செய்தொழில் மேன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் ஏற்படும், காரிய அனுகூலமுண்டு, ஆரோக்கியமான நாள்.

# ஈழத்து சபரிமலையில் மஹோற்சவ பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்ப தேவஸ் தானத்தில் கடந்த 17.11.2015 (கார்த்திகை முதலாவது நாள்) செவ் வாய்க்கிழமை தொடக்கம் 14.01.2016 வியாழக்கிழமை வரை மகரஜோதி மண்டல விரத மகர மஹோற்சவ பெருவிழா நடை பெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கி ழமை முற்பகல் 11 மணிக்கு துவஜா ரோகணம் (கொடியேற்றம்) இடம் பெற்று தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவங்கள் நடைபெறவுள் ளது. எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடை பெறவு ள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட அபிஷேக பூஜையைத் தொடர்ந்து ஏக தின இலட்சார்ச்சனை, இலட்ச ஹோமம் ஆகிய வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

27.12.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் நட ராஜா பரமேஸ்வரி திருமண மண்ட பத்திலிருந்து ஐயப்ப பக்தர்கள் இரு முடி கட்டி ஐயப்பனை தென்னிலங் கையிலிருநது வரவழைக்கப்பட்ட யானைமேல் ஆரோகணிக்கச் செய்து யாழ்ப்பாணத் திருநகர வீதிகள் வழி யாக திருப்பவனி விழா இடம்பெற்று திருப்பவனி வந்து 18ஆம் படி ஏறி சிறப்பு மண்டல படிப்பூஜையும் இடம் பெறும்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன் றிலில் இருந்து ஆரம்பமாகும். இருமுடி யாத்திரை திருப்பவனி வைப வங்களை வழமைபோல் இவ்வாண் டும் வானொலி, தொலைக்காட்சிக ளூடாக நேர்முகவர்ணனைகளை நேர் முக வர்ணனையாளர் வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை. எம்.பி. அரு ளானந்தன் வழங்கவுள்ளார். (இ




# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மூவருக்கெதிராக சட்ட நடவடிக்கை

## யாழ்.நீதிமன்றம் அதிரடி உத்தரவு

யாழ். பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மூவருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகர சபை ஆணையாள ருக்கு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதி பதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.நகரப் பகுதியில் இயங்கி வந்த உணவு விடுதி ஒன்றுக்கு கடந்த வருடம் ஜூலை மாதம் 31ஆம் திகதி 3 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சென்று 3 கிலோ நிறையுடைய சோஸ் பைகள் மற்றும் 200 கிராம் நிறை யுடைய 11 ஒடியல்மா பைகளையும் கைப்பற்றி காலாவதியான பொருட் களைப் பயன்படுத்தியதாக கூறி குறித்த விடுதி முகாமையாளருக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு ஒன்றரை வருட காலமாக நடைபெற்று வ ரும் நிலை யில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மூவரும் மன்றில் சாட்சியமளிக்கும் போது தாம் குறித்த தினத்தில் அந்த விடுதிக்கு சாப்பிடப் போனதாகவும் அப்போது விடுதி முகாமையாளர் தான் விடுதிக்கான அனுமதி பெற வேண்டி இருப்பதால் விடுதியை பரிசோதித்து ஆலோசனை வழங்கு மாறு தம்மைக் கோரியிருந்தார். அதற்கமைய விடுதியின் களஞ்சிய சாலையை பரிசோதனை செய்த போது அங்கு பயன்படுத்த முடியாத பொருட்கள் பல இருந்ததுடன் பாவ னைக்குதவாத தளபாடங்களும் இருந் தமையால் அவற்றைக் கைப்பற்ற வில்லை எனவும் கட்ட அமைப்பில் பல குறைபாடுகள் காணப்பட்ட போது அவற்றைத் திருத்துமாறும் அங்கு வேலை செய்பவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளுமா றும் கூறிவிட்டு அடுத்த அறைக்கு சென்றபோது காலாவதியான பொரு ட்கள் பயன்படுத் தப்பட்டுக்கொண் டிருந்ததனால் அவற்றைக் கைப்பற் றியதாகவும் கூறினார்கள்.

இது தொடர்பாக சுகாதார வைத் திய அதிகாரி சாட்சியமளிக்கும் போது குறித்த பொதுச்சுகாதார பரிசோத கர்கள் தமக்கு கீழ் பணியாற்றுவ தாகவும் அவர்கள் செய்யும் பணிக ளுக்கு அறிக்கை சமர்ப்பித்து அனு மதி பெறவேண்டும் என்றும் திடீ ரென பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருப்பின் தன்னிடம் அனு மதி பெறவேண்டும் என்றும் அல் லது மாநகரசபை ஆணையாள ருக்கு அறிவிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார். அத்துடன் குறித்த விடுதி தொடர்பாக தனக்கும் ஆணையா ளருக்கும் அறிவிக்கவில்லை எனவும் சாட்சியமளித்தார்.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி கடந்த காலத்தில் குறித்த விடுதியில் நடைபெற்ற சம்பவம் ஒன்றுக்கு பழிவாங்கும் நிகழ்வாக இச்செயற்பாடு இடம்பெற்றதாக தெரியவருவதால் குறித்த வழக்கில் இருந்து முகாமையாளரை விடுவிப் பதுடன் பொதுச்சுகாதார பரிசோத கர்கள் மூவரும் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனிப்பட்ட குரோதத்துக்கு பழிவாங்கும் முகமாக செயற்பட்டதாக சாட்சியங்கள் தென் படுவதால் பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டியவர்கள் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடாது எனக்கூறி குறித்த மூவரு க்கும் எதிராக நடவடிக்கை எடுக்கு மாறு யாழ்.மாநகரசபை ஆணையாள ருக்கு உத்தரவிட் டுள்ளார். (இ-9)

# பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடலியடைப்பு சைவப்பி ரகாச வித்தியாசாலை பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும் திறப்பு விழாவும் இன்று செவ்வாய்க் கிழமை அருணாசல சாஸ்திரிகள் மண்ட பத்தில் முற்பகல் 10 மணிக்கு நடை பெறவுள்ளது.

அதிபர் ந.இரவீந்திரன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜ தீபன் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் வ.அம்பலநாதன், வடலி யடைப்பு கிராமசேவையாளர் சா.அருள் ஞானானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வட லியடைப்பு கிராம அபிவிருத்தி உத் தியோகத்தர் எஸ்.பத்மநாதன், சுழி புரம் றோட்டறக்ற் கழகத் தலைவர் அ.யோ.இன்பராஜா ஆகியோர் கல ந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையினை யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல் லூரி ஆசிரியர் இ.பிரதாபசர்மா நிகழ்த்தவுள்ளதுடன் நினைவுப் பேருரையினை ஓய்வு நிலை அதிபர் பா.பாலச்சந்திரன் நிகழ்த்தவுள் ளார். (இ-5)

# எச்சரிக்கை

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு தரப் பினரிடையே எயிட்ஸ் (எச்.ஐ.வி) தொற்று ஏற்படுவதற்கான அபாயம் காணப் படுவதாக யாழ். போதனா வைத்திய சாலையின் பாலியல் தொற்று நோய்த் தடுப்பு பிரிவின் பொறுப்ப திகாரி திருமதி தாரணி குருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச ரீதியில் இன்றே பரி சோதியுங்கள் (Test Today) எனும் தொனிப்பொருளில் எயிட்ஸ் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள் ளது. அந்த வகையில் அனைத்து தரப் பினரும் விழிப்புடன் இருப்பதற்கு உடனடியாக பரிசோதனை மேற் கொள்ளப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு அனை த்துதரப்பினரிடையேயும் இருக்கவேண் டும். பல்வேறு காரணிகளால் யாழ். மாவட்டத்தில் எச்.ஐ.வி. தொற்று அதிகரி ப்பதற்கான அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் குறிப்பாக இளம் சமுதா யத்தினர் விழிப்புடன் இருக்கவேண் டியது அவசியம் ஆகும்.

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான ஒருவர் 10 வருடங்களுக்கு சுகதேகி யாக தோற்றமளிப்பார். பரிசோ தனை மேற்கொள்ளாமல் இருக்கும் பட்சத்தில் எச்.ஐ.வி. தொடர்பான விழிப்புணர்வு இன்மையால் உயிரை இழக்க வேண்டிய நிலை ஏற்படு வதோடு அவரால் சமூகத்திலும் எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதற்கான சந்தர் ப்பங்கள் அதிகரித்து காணப்படும்.

உலகளாவிய ரீதியில் கிழமைக்கு 4 பேர் வீதம் எச்.ஐ.வி.தொற்றுக்கு உள்ளவர்களாக இனம் காணப்படு கின்றார்கள். அதிலும் துணைக்கு அப்பாற்பட்ட பாலியல் தொடர்புகள், திருமணத்துக்கு முன்னரான பாலி யல் தொடர்புகள் மற்றும் ஓரினச் சேர்க்கையால் இந்த எச்.ஐ.வி. தொற்று அதிகமாக ஏற்படுகின்றது.

வெளி நாடுகள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து எமது பிர தேசத்துக்கு வருபவர்களால் மட்டும் எச்.ஐ.வி.தொற்று ஏற்படுவதில்லை. உள்ளூரிலேயும் எச்.ஐ.வி. தொற்று உள்ளானவர்கள் இருப்பதற்கான அபாயம் இருப்பதால் அது தொடர் பாக விழிப்புடன் இருக்க வேண்டி யது அவசியம் ஆகும்.

மேலும் ஒரு நபர் எச்.ஐ.வி. தொற் றுக்கு உள்ளாகி அவர் சிகிச்சை பெற்று வருபவராயின் அவரால் எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதற்கான சந்தர்ப் பங்கள் குறைவாகவே காணப்படும். ஏனெனில் அவருக்கு விழிப்புணர்வு போதியளவு வழங்கப்பட்டிருக்கும். அத்துடன் சிகிச்சை பெறுவதால் கிருமியை கட்டுப்பாட்டில் வைத்திருக் கும். எனவே தொற்று ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் குறைவாகவே காண ப்படும். ஆனால் நோய் தொற்று ஏற்பட்ட பின்னர் அதை அறியாமல் இருப்பவர்கள் மூலமாகத்தான் அதி களவில் இந்த எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதி கரித்துள்ளன.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் குறிப்பாக 15,16 வயதினரிடையே மிக முக்கியமாக எச்.ஐ.வி. தொற்று தொடர்பான விழிப்புணர்வு அவசி யமாகும். ஏனெனில் இவர்கள் சிறு வயதிலேயே தமது வாழ்க்கைதுணையை எத்தனிக்கும் சந்தர்ப்பம் காணப்படு வதால் அவர்களுக்கு விழிப்புணர்வு அவசியமாகும். ஆகவே எமது எதிர்கால சமூகத்தை பாதுகாப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம் .

மேலும் யாழ்.போதனா வைத்திய சாலையில் 33 ஆம் இலக்க விடு தியில் பாலியல் தொற்று நோய்த் தடுப்பு பிரிவில் இலவசமான சிகிச் சைகள், பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதால் நேரடி யாக வந்து பரிசோதனைகளை மேற் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# க.பொ.த(சா/த) பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

க.பொ.த (சா/த) பரீட்சையில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், மேற்பார்வை யாளர்கள், உதவி மேற்பார்வையாளர் களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற வுள்ளது. இதில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத் தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டால் மாத்திரமே பரீட்சைக்கடமைகளில் கடமையாற்ற முடியும் என்பதனால் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# இன்று தேர்தல்

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்றத் தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற வுள்ளது. (இ-5)

# ஞானச் சுடர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சந்நிதியான் ஆச்சி ரம சைவ கலை பண்பாட்டுப் பேர வையின் வெளியீடான ஞானச் சுடர் இதழின் 215 ஆவது கார்த்திகை மாத மலர் வெளிவந்துள்ளது. (இ-5)




இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தினால் பல்வேறு துறைகளில் ஒரு வருடகால கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவ கற்கை நெறி, ஆங்கிலக் கற்கை நெறி, அழகுக் கலை கற்கை நெறி உட்பட்ட பல்வேறு துறைகளில் கற்கை நெறியை பூர்த்தி செய்த 250 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இலங்கை திறந்த பல்கலைக்கழக எந்திரவியல் துறை பீடாதிபதி கலாநிதி கே.ஏ.சி. உதயகுமார தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார். (படங்கள்:பொ.சோபிகா)

# தாக்குதல்களால் 12,259 பேர் பலி!

**பாகிஸ்தானில் கடந்த 5 ஆண்டுகளில் பொது மக்கள் மற்றும் பாதுகாப்புப் படை வர்ர்கள் உட்பட மொத்தம் 8 ஆயிரத்து 500 பேர் தீவ்ர வாத தாக்குதலுக்கு பலியாகியுள்ளனர். இதுபோல இராணுவத்தின் பதில் தாக்குதலுக்கு 3 ஆயிரத்து 759 தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்.**

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது, அந்நாட்டு உள்துறை அமைச்சகம் பகிர்ந்து கொண்ட தகவல்கள் வருமாறு,

கடந்த 5 ஆண்டுகளில் நிகழ்ந்த த்விரவாத தாக்குதலில் 5 ஆயிரத்து 532 பொதுமக்கள் பலியாகினர். 10 ஆயிரத்து 195 பேர் காயமடைந்தனர். இதுபோல பாது காப்புப் படையைச் சேர்ந்த 3 ஆயிரத்து 157 பேர் பலியாகினர். 5 ஆயிரத்து 988 வீரர்கள் காயமடைந்தனர்.

தீவிரவாதிகளின் புகலிடமாக கருதப்படும், அந்நாட்டு மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வரும் பழங்குடியினர் பகுதியில் (எப்ஏடிஏ) பாதுகாப்புப் படையினர் அதிக அளவில் கொல்லப்பட்டுள்ளனர்.

இங்கு மட்டும் ஆயிரத்து 487 வீரர்கள் தீவிரவாதத்துக்கு பலியாகியுள்ளனர். 2 ஆயிரத்து 224 பேர் காயமடைந்தனர். இதே பகுதியில் பொதுமககளில் ஆயிரத்து 470 பேர் பலியானதுடன், 2ஆயிரத்து 761 பேர் காயமடைந்தனர்.

இதே காலகட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 759. இதில் பழங்குடியினர் பகுதிகளில் மட்டும் 2 ஆயிரத்து 530 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 5 ஆண்டுகளில் தீவிரவாத குற்றங்களுக்காக 173 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, இப்போது 200 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் மரண தண்டனையை எதிர்நோக்கி காத்திருக்கிறார்கள்.

கடந்த 2001 ஆம் ஆண்டு அமெரிக்கா வின் உலக வர்த்தக மையத்தை தீவிரவாதிகள் தகர்த்தனர். இதையடுத்து, தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா போரை தொடங்கியதிலிருந்து இதுவரை 55 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் பலியாகியுள்ளனர். பாகிஸ்தான் பொருளாதாரம் 10ஆயிரம் கோடி டொலர் இழப்பை சந்தித்துள் ளது. இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# எதிர்வரும் 2020ம் ஆண்டுக்குள் வறுமையை ஒழிக்க சீனா சபதம்

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுககுள் வறுமையை முற்றிலும் ஒழிக்க சீன அரசு உறுதி பூண்டுள்ளது.

வறுமை ஒழிப்பு தொடர்பான இரண்டு நாள் மாநாடு சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றது. இதில், சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில்,

வறுமை ஒழிப்பு என்பது நீண்ட நெடிய பயணம். வறுமையின் கோரப்பிடியிலிருந்து அனைவரையும் விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு துரித கதியில் மேற்கொண்டு வருகிறது.

அதன் விளைவாக, அடுத்த ஐந்து ஆண்டுகளில் வறுமையில் வாடும் மக்கள் அனைவருக்கும் போதுமான உணவு, உடை, இருப்பிடம், கல்வி மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித்தர சபதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறினார். சீன வறுமை ஒழிப்பு குழுவின் புள்ளி விபரங்களின் படி, அந்நாட்டில் கடந்த 15 ஆண்டுகளில் 60 கோடிக்கும் அதிகமானோர் வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது, உலகளவில் வறுமையில் சிக்கியுள்ளவர்களில் 70 சதவீதமாகும் இன்னும், 7 கோடி பேர் ஆண்டு வருவாய் 2 ஆயிரத்து 300 யுவானுக்கும் (ரூ.24ஆயிரத்து440)குறைவாகப்பெற்று வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளனர்.



இந்நிலையில், எதிர்வரும் 2020ஆம் ஆண்டிற்குள், எஞ்சிய 7 கோடி பேரையும் வறுமையிலிருந்து மீட்டு, வளம்பெறச் செய்ய சீன ஜனாதிபதி சூளுரைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாக்குதலில் பலியானோருக்கு அமெ.ஜனாதிபதி ஒபாமா அஞ்சலி



(பாரீஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 13 ஆம் திகதி ஐ.எஸ். தீவிரவாதிகள் 6 இடங்களில் தொடர் தாக்குதல் நடத்தினர். அதில் 130 பேர் பலியாகினர். 352 பேர் காயம் அடைந்தனர். இதற்கு அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்நிலையில் நேற்று பாரீஸில் பருவநிலை மாற்றம் குறித்த மாநாடு ஆரம்பமானது. இதில் 150 நாடுகளை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா விமானம் மூலம் பாரீஸ் சென்றார். ஓர்லி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட அவர் நேராக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய படாக்லன் தியேட்டருக்கு சென்றார்.

அங்கு தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் தாக்குதலில் பலியானோருக்கு அஞ்சலி செலுத்தினார். அப்போது அந்த நினைவிடத்தில் ரோஜா மலர் வைத்தார்.

மிகவும் மௌனமாக தலை குனிந்து நின்ற அவர் தனது இரு கைகளையும் முன்புறம் கட்டியபடி இருந்தார். அவருடன் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹோலண்டேவும், பாரீஸ் நகர மேயர் ஆன்னி ஹிடால கோவும் உடன் இருந்தனர்.

ஒபாமா அஞ்சலி செலுத்த வந்ததை தொடர்ந்து அப்பகுதி முழுவதும் 'சீல்' வைக்கப்பட்டிருந்தது. வானத்தின் மீது ஹெலிகொப்டர்கள் வட்டமடித்து பறந்தபடி இருந்த நிலையில் பாதுகாப்பு பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். (இ-7)

# பிரிட்டன் கடற்கரையில் ஆயுதங்கள் கண்டெடுப்பு

## தீவிரவாத அச்சுறுத்தலா?



பிரிட்டன் கடற்கரையில் இருந்து கைவிடப்பட்ட நிலையில் நேற்றுக் காலை ஆயுதக் குவியல் கண்டெடுத்துள்ளமை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் வடக்கு யோர்க்ஷயர் பகுதியில் அமைந்துள்ள கடற்கரையில் ஒருவர் தமது நாயுடன் நடந்து சென்றபோது, அங்கு கைவிடப்பட்ட நிலையில் குவியலாக துப்பாக்கி தோட்டாக்களை கண்டெடுத்துள்ளார்.

இதனையடுத்து அவர் அளித்த தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு விரைந்து வந்த பொலிஸார் அப்பகுதியை முழுமையாக தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர்.

மேலும் அப்பகுதி வழியாக செல்லும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளை அப்புறப்படுத்தியுள்ள பொலிஸார், தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

கண்டெடுக்கப்பட்டுள்ள தோட்டாகள் சுமார் 300 சுற்றுகள் பயன்படுத்தலாம் எனவும் 5.56mm வகை எனவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்கரையில் தோட்டாக்கள் கண்டெடுத்துள்ளதை அடுத்து அப்பகுதி மக்கள் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெடிபொருட்களை கண்டுபிடித்துள்ள நபரை பாராட்டியுள்ள அப்பகுதி மக்கள், பாரீஸ் தாக்குதல் போன்று பிரித்தானியாவில் நிகழாது காக்க பொதுமக்களும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து உறுதுணையாக செயற்பட வேண்டும் என்றனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணையை ஆரம்பித்துள்ள பொலிஸார், மேலதிக தகவல்கள் தெரியவரும் போது பொது மக்கள் உடனடியாக விசாரணை அதிகாரிகளை தொடர்புகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (இ-7)




# ரஷ்ய விமானங்கள் குண்டுமழை சிரியாவில் 40 பேர் உயிரிழப்பு

சிரியாவில், பயங்கரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது ரஷ்ய விமானங்கள் நேற்று முன்தினம் பயங்கர தாக்குதல் நடத்தின. இதில், அப்பாவி பொது மக்கள், 40 பேர் கொல்லப்பட்டனர் ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

ரஷ்யா நாட்டு போர் விமானம், இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள வான்வெளியில் நுழைந்ததாக, இஸ்ரேல் நாட்டு இராணுவ அமைச்சர் மோஷி யாலோன் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த வாரம், தன் நாட்டு எல்லைக்குள் அத்துமீறியதாக, ரஷ்ய நாட்டு விமானத்தை, துருக்கி இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தியது, பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

அதனால், இருநாட்டு உறவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இஸ்ரேல் நாட்டு வான்வெளியில் ரஷ்ய விமானங்கள் நுழைந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (இ-7)

# விசவாயு தாக்கியதில் சீனாவில் 10 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் ஷாண்டோங் மாகாணத்தில் உள்ள எஃகு நிறுவனம் ஒன்றில் நேற்று முன்தினம் வழக்கம் போல் ஊழியர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தனர். அப்போது உள்ளூர் நேரப்படி 5.50 மணியளவில் திடீரென விசவாயு கிளம்பியது.

இதில் 10 பேர் பலியாகினர். மேலும் 17 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் ஏற்பட்டதற்கான காரணம் குறித்து உள்ளூர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-7)

# செட்டிகுளம் குடாத்தரை வயல்வெளியில் 10 ஏக்கரில் இயந்திர நெல் நாற்று நடுகை

## விவசாய போதனாசிரியர் கு.கஜரூபன் தெரிவிப்பு





(வவுனியா)

PSDG-2015-2016 காலபோக செய்கையின் போது இயந்திரத்தின் மூலம் நெல் நாற்று நடுகை செய்யப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் 2015-2016 ஆம் ஆண்டு காலபோகத்தின் வவுனியா, வெங்கல செட்டிகுளம் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவின் கீழ் செட்டிகுளம் குடாத்தரை வயல்வெளியில் சுமார் 10ஏக்கரில் இம்முறை நெல் நாற்று நடும் இயந்திரம் மூலம்நெல் நாற்று நடுகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கையாக கடந்த மாதம் 27ஆம் திகதி இயந்திரம் மூலம் நாற்று நடுகை செய்வதற்கான நாற்று மேடைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேடையானது 2அடி அகலமும் 100அடி நீளமானதுமான மேடை அமைக்கப்படும். இம்மேடைக்கு ஒரு புசல் நெல் (20.5 கிலோ கிராம்) போதுமானதாகும்.

இது ஒரு ஏக்கர் வயல் நிலத்தில் நாற்று நடுகை செய்வதற்கு போதுமானதாகும்.

இம்மேடையில் இருந்து 16 தொடக்கம்20 நாட்களினுள் நாற்று நடுகை செய்யப்படும்.

இதன்மூலம் செய்கை பண்ணப்படும் போது விவசாயிகளுக்கு விதைநெல் செலவு குறைவாக இருக்கும்.

சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 2.5தொடக்கம் 3புசல் நெல் தேவைப்படும்.

இந்நிலையில் நாற்று நடுகைக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு புசல் நெல் போதுமானதாகும்.

அத்துடன் நாற்று நடுகை இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு 3தொடக்கம்4ஏக்கர் அளவில் நாற்றுக்களை நடுகை செய்ய முடியும்.

இத்திட்டத்தின் ஊடாக இலங்கையின் தேசிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதோடு எதிர்காலத்தில் ஏற்படும் இயந்திரம் மூலமான நாற்று நடுகையை ஊக்குவித்து இளம் விவசாயிகளையும் ஆர்வப்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியுமென செட்டிகுளம் விவசாய போதனாசிரியர் கு.கஜரூபன் தெரிவித்துள்ளார். (2)

# பள்ளிவாசலுக்கு இருமாடிக்கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு நகரிலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த மஹ்பூப் சுபுஹானி ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு புதிய இருமாடிக்கட்டடம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி ஜும்ஆத் தொழுகையின் பின்னர் இடம்பெற்றது.

மஹ்பூப் சுபுஹானி ஜும்ஆப்பள்ளிவாசலின் நிர்வாக சபைத் தலைவர் அப்துல் சலாம் மஹ்ரூபின் தலைமையில் இடம் பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் யாசின் ஜவாஹிர் கலந்து கொணடதுடன், மஹ்பூப் சுபுஹானி ஜும்ஆப்பள்ளிவாசலின் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊர் ஜமா ஆத்தினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

1896ஆம் ஆண்டு முல்லைத்தீவு நகரில் ஓலைக் கொட்டிலால் அமைக்கப்பட்டு பின் கல்லால் கட்டப்பட்ட மஹ்பூப் சுபுஹானி ஜும்ஆப்பள்ளிவாசலில் மிக நீண்டகாலமாக இடப்பற்றாக்குறை காணப்பட்டு வருகிறது.

காணப்படும் இடப்பற்றாக்குறையினால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பிலும், புதிய கட்டடம் அமைப்பதன் அவசியம் பற்றியும் பள்ளி நிர்வாக சபைத் தலைவர் அப்துல் சலாம் மஹ்ரூப் மற்றும் செயலாளர் அபுபக்கர் சதிக்கீன் தலைமையிலான நிர்வாக சபையினர், அமைச்சர் றிசாத் பதியுதீன் உள்ளிட்ட பலரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவ்வாறு பள்ளி நிர்வாகத்தினரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சர்,கட்டார் நாட்டின் தனவந்தர் ஒருவரின் நிதியொதுக்கீட்டின் ஊடாக குறித்த ஜும்ஆப்பள்ளிக்கு புதிய இருமாடிக்கட்டடம் நிர்மாணிக்கவே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வவுனியா நகரசபைக்கு புதிய செயலர் நியமனம்

## இன்று கடமைகளைப் பொறுப்பேற்பார்

(குருமன்காடு)

வவுனியா நகரசபைச் செயலாளராக தர்மலிங்கம் தர்மேந்திரா நியமிக்கப்பட்டு தனது கடமையை இன்று செவ்வாய்க கிழமை பொறுப்பேற்கவுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்த வவுனியா தெற்கு பிரதேச செயலக சமூகசேவைகள் உத்தியோகத்தர் த.தர்மேந்திரா வவுனியா நகரசபைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நகரசபையின் செயலாளராக கடமையாற்றிய க.சத்தியசீலன் வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் நகரசபைச் செயலாளரின் பொறுப்பற்ற செயற்பாட்டுக்கு எதிராக விளையாட்டு வீரர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)




# கடும் மழையால் வீதிகள் சேதம் போக்குவரத்துக்கு மக்கள் அவதி



(முள்ளியவளை)

முள்ளியவளையில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக பல உள்ளூர் கிரவல் வீதிகள்,பாலங்கள் என்பன சேதமடைந்துள்ளன.

இதற்கமைய முள்ளியவளை துரைவீதி, நாவலர்வீதியிலுள்ள நாலு சந்திப் பாலம் என்பன கடுமையாக சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

இதனூடாக போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள், வாகனங்கள் என்பன விபத்துக்களை சந்திக்க வேண்டியுள்ளது.எனவே சம்பந்தப்பட்ட அதிகாரி கள் தற்காலிகமாவது உடனடிநடவடிக்கையாக சேத மடைந்து காணப்படும் பாலங்களைத் திருத்துவதற்கு முன்வர வேண்டுமென பொது மக்கள் கோருகின்றனர்.

மேற்படி வீதிகள் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது. (2-302)

## மன்னார் மாவட்டத்தில்

# ஏற்பட்ட வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக மன்னார் மாவட்டத்திலுள்ள மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளான மன்னார்,மாந்தை,நானாட்டான் ஆகிய பகுதிகளில் 4ஆயிரத்து 40 குடும்பங்களைச் சேர்ந்த 16ஆயிரத்து 23 பேர் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் அதிகமானோர் நலன்புரி நிலையங்களை விட்டு வெளியேறி சென்றுள்ளபோதும் தற்பொழுது 6 நிலையங்களில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 165 பேர் தங்கியிருக்கின்றனர்.

எமில் நகரில் 2 நிலையங்களில் 26 குடும்பங்களில் 119 பேரும் சவுத்பாரில் 2 நிலையங்களில் 2குடும்பங்களில் 7பேரும் பனங்கட்டுக்கொட்டு பகுதியில் ஒரு நிலையத்தில் 19 பேரும் பனங்கட்டுக்கொட்டு கிழக்கில் ஒரு நிலையத்தில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 20பேரும் மன்னார் மாவட்டத்தில் கடந்த 21ஆம் திகதி வரை 39 குடும்பங்களைச் சேர்ந்த 165 பேர் மட்டும் தங்கியிருப்பதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. (2)

# தமிழ் மாமன்றத்தின் வாசிப்பும் அனுபவப்பகிர்வும்

இன்றைய இளம் சமுதாயத்திற்கு, வாசிப்பு மீதான ஆர்வத்ததை ஏற்படுத்தும் பொருட்டும்,வாசிக்கும் திறனைவிருத்தி செய்யும் நோக்குடன் வாசிப்பு தொடர்பான தொடர் நிகழ்வுகளை தமிழ் மாமன்றம் நடத்தி வருகின்றது. அந்நிகழ்வின் தொடர்ச்சியாக,நூலக பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில்,வவுனியாபொதுசனநூலகத்தின் கேட்போர் கூடத்தில் சனி,ஞாயிறுமற்றும் விடுமுறைதினங்களைகருத்திற்கொண்டு, மாதம் இருமுறை தொடர்ச்சியாக'வாசிப்பும் அனுபவப்பகிர்வும்'எனும் நிகழ்வினை நடத்த தமிழ்மாமன்றம் உத்தேசித்துள்ளது.

ஒருநிகழ்வில், இரு படைப்புக்கள் தொடர்பானபகிர்வுகள் இடம்பெறும்.

அதனடிப்படையில், டிசெம்பர் மாதத்திற்கான முதல் நிகழ்வு,எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு, வவு னியா பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில், "செம்மீன்" எனும் நாவலும் மலையாள திரைப்படம் பற்றியபகிர்வும் இடம் பெறவிருக்கின் றது. அத்துடன் சுட்டுவிரல் எனும் கவிதைத தொகுப்பும் பகிரப்பட விருக்கின்றது. (2)

# நாடார் நிறுவன பிரதிநிதிகள் விவசாயிகளுடன் சந்திப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நாடார் நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் காகிள்ஸ் நிறுவனம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் பசன் புரூட், நீத்துப்பூசணி, தக்காளி ஆகிய பயிர் வகைகளை பயிரிட்ட விவசாயிகளுக்கு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் சங்கம் அமைக்கப் பட்டு அங்கத்தவர்களுக்கு விவசாய செய்கைக்கான கிணறு, குழாய்க்கிணறு, நீர்ப்பாசன. வசதிக்கான நீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டம் எவ்வளவு தூரம் விவசாயிகளுக்கு பயன்பட்டுள்ளது. வழங்கப் படவேண்டிய உதவிகள் எவை என்பதை விவசாயிகளிடமிருந்து நேரடியாக வினவி, அறிந்து கொள்வதற்கு நாடார் நிறுவன பிரதிநிதிகள், மேற்படி அமைச்சின் பிரதிநிதிகள், காகிள்ஸ் நிறுவனத்தினர் ஆகியோர் பங்கேற்று இதற்கான ஆய்வுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு மலையாளபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு மலையாளபுரம், செல்வா நகர், கிருஷ்ணபுரம், விசுவமடு, உடையார் கட்டு, நெடுங்கேணி ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றிருந்ததுடன் இத்தகைய உதவித் திட்டங்களினால் தமது வாழ்வாதாரம் உயர்வடைய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். (2-254)

# தேசிய கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைப்பு

## முல்லைத்தீவு மாவட்டத்திலும் நேற்று ஆரம்பம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற துருணு சிரம சக்தி தேசிய கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலக பிரிவுகளிலும் 12 அபிவிருத்தி திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் குமுழமுனை கிராமத்தில் சனசமூகநிலையம் ஒன்றை புனரமைப்பதற்கான ஆரம்ப பணிபாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ் கந்தராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடக்குமாகாண பணிப்பாளர் சரத்சந்திரபால, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், கிராம அலுவலர் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)




# மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்பு

## பெற்றோர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி கணேசபுரம்,திருநகர் ஆகிய கிராமங்களுக்கான ஒரு பகுதி மின்சார விநியோகம் அடிக்கடி மாலை நேரங்களில் தடைப்படுவதால் மாணவர்களின் கல்வி தேவை பாதிக்கப்படுவதோடு மின்குமிழ்கள், நீர் இறை க்கும் இயந்திரங்கள் என்பன பழுதடையும் வகையில் குறைந்தளவிலான மின்சாரம் கிடைப்பதாலும் மிகவும் கஷ்டமடையவேண்டியுள்ளதாக அப்பகுதிமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பாக மின்சார சபைக்கு பல தடவைகள் முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் இதுவரையில் ஏற்ற ஒழுங்கமைப்புக்கள் செய்யப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களினதும் மின் பாவனையாளர்களினதும் விடயத்தில் கூடிய கவனமெடுத்து மின்சார வசதி ஒழுங்காக கிடைக்க ஆவன செய்யவேண்டுமென அக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-254)



100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் 15 ஆயிரம் கிராமங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஐயன்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட சனசமூக நிலையத்தின் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதைப் படத்தில் காணலாம். (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# பாடப்புத்தகங்கள் வழங்கல்



விமானப்படைத்தளபதியின் பணிப்புரைக்கமைய விமானப் படைசேவாலங்கா மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். வயாவிளான் குட்டியபுலம் மகாவித்தியாலயம் மற்றும் புன்னாலைக் கட்டுவன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட் டுள்ளன. அத்துடன் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 150 மாணவர்க ளுக்கு தலா 1000 ரூபா வழங்க ப்பட்டது. இந் நிகழ்வில் விமானப்படை சேவா லங்கா மன்றத்தின் தலைவி சமந்த புலத்சிங்கள, விமா னப்படையின் யாழ்.மாவட்ட தளபதி கொமா ண்டர் சமிந்த ஹேரத் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

இலங்கை விமானப் படைத் தலைமையகத்தினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள பின் தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாடப்புத்தகங்கள், கற்றல் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் குட்டியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

# பணம் பெற்று ஏமாற்றியவருக்கு பரு.நீதிமன்றம் கடும் தண்டனை

பருத்தித்துறை தும்பளை பகுதியில் 2 இலட்சம் ரூபாவை கடனாக பெற்று திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிய நபருக்கெதிரான 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார். பருத்தித்துறை தும்பளை பகுதியில் ஒரு நபரிடம் இருந்து 2 இலட்சம் ரூபாவை கடனாக பெற்று அதை திருப்பி கொடுக்காமல் ஏமாற் றியதாக கடந்த 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அதே இடத்தை சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார். இரண்டரை வருட காலமாக நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றவாளியாக இனம் காணப்பட்டதையடுத்து 5 வருட ஒத்திவைக் கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண் டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். இந்தவழக்கின் முறைப்பாட்டாளருக்கு குற்றவாளி 2 இலட்சம் ரூபாய் பணத்தை திரும்பச் செலுத்தியமை குறிப்பிடத் தக்கது. (இ-9-60)

# வவுனியா முல்லைத்தீவில் காடழிப்பு தொடர்கின்றது

வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள காடுகளிற்குரிய பிரதேசங்களில் பல பகுதிகள் அழிக்கப்பட்டு வருவதாக சுற்று சூழல் பாதுகாப்பு அறக்கட்டளை அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

முன்னைய அரசாங்கத்தில் ஆரம்பித்த காடழிப்பு தற்போதும் இடம்பெறுகின்றது.

இதற்கு அமைச்சர்களும் ஆதரவு வழங்குவதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அறக்கட்டளை குற்றம் சாட்டியுள்ளது என இலங்கையின் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் காடழித்தல் ஒரு குற்றமாகவே கருதப்படுகின்றது. (இ-10)

## திருவாசக விழாவையொட்டி மாணவர்களுக்கிடையில் போட்டி

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையானது வருடந்தோறும் நடத்திவரும் திருவாசக விழாவையொட்டி மாணவர்களிடையே இவ்வருடமும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கமையதரம் 5, 6 மாணவர்களிடையே சிவபுராணத்திலும்தரம் 7, 8 மாணவர்களிடையே திருவெம்பாவையிலும் தரம் 9, 10 மாணவர்களிடையே திருப்பள்ளியெழுச்சியும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி சந்நி தியான் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளன. போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தமது பெயர்விபரங்களை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

# வடக்கிலுள்ள புகையிரதக் கடவைகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடி அவசியம்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

வடக்கு மாகாணத்தில் உள்ள புகையிரதக் கடவைகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.) யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா மற்றும் புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், மேற்படி புகையிரதப் பாதை மீள அமைக்கப்பட்டபோது உரிய தரப்பினர் என்னிடம் கலந்தாலோசிக்காத நிலையில், பல தவறுகள் இடம்பெற்றிருந்தன. இதனை அறிந்து, அப்போதைய போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடி அவ்வப்போது பல திருத்தங்களை மேற்கொண்டிருந்தேன்.

குறிப்பாக, புகையிரதக் கடவைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள், குறுக்கு வீதிகளுக்கான புகையிரதக் கடவைகள் மற்றும் புகையிரதப் பாதை அதிகளவில் உயர்த்தப்பட்டமை காரணமாக அண்டிய குடியிருப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இதனால் புகையிரதக் கடவைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் உட்பட பல தேவைகள் கைவிடப்பட்டுள்ளன. இவற்றை உடனடியாக நிறைவேற்ற உடனடி நடவடிக்கைகள் தேவை. குறிப்பாக, புகையிரதக் கடவைகளின் பாதுகாப்பின்மை காரணமாக நாளுக்கு நாள் பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளும்படி போக்குவரத்து அமைச்சரிடமும், புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளரிடமும் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கை

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடமாகாணத்தில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின் அதிகூடிய மாற்றங்களையும் அபிவிருத்திப் பெறுபேறுகளையும் வழங்கக்கூடியதும் மீள் குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தையும் வருமான மட்டத்தையும் உயர்த்தி அவர்களின் தரமான வாழ்கைக்கு பங்களிப்புச் செய்யக் கூடியதுமான முன்னுரிமைப்படுத்தப்பட்ட 10 விசேட கருத் திட்டங்கள் இனங்காணப்பட்டதாக சிறைச்சாலைகள மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக இலகு படுத்தப்பட்ட இவ்விசேட கருத் திட்டங்கள் தொடர்பான அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் 18.11.2015 இல் அங்கீகரிக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் வடமாகாண ஆளுநர், முதலமைச்சர்மற்றும்சிரேஷ்ட அலுவலர்கள் மக்களுடனான கலந்துரையாடல் மூலமான தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் முன்னுரிமைப் படுத்தப்பட்டு இனங்காணப்பட்டதுடன் இதற்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சுக்கு மத்தியகால வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பத்து விசேட கருத் திட்டங்களையும் வழிப் படுத்தி கண்காணிப்பதற்காக மத்திய அரசுடன் வடமாகாணசபை இணைந்த ஒரு விசேட பொறிமுறை உருவாக கப்பட்டுள்ளதுடன் இப்பொறிமுறையில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் மற்றும் வடமாகாண சபையின் பிரதம செயலாளரினதும் இணைத்தலைமையில்மாகாணமாவட்ட அலுவலர்களையும் உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்படுவது சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

வடமாகாணத்திற்கான 10 விசேட முன்னுரிமைக் கருத்திட்டங்களில் ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் நகர்களுக்கு இடையேபாலம் மற்றும் கூடப்பு வழி என்பவற்றின் நிர்மாணம், நெடுந்தீவுக்கான பயணிகள் படகு (100 பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான வசதிகள்) நிர்மாணம் (குமுதினிபடகு போல), நெடுந்தீவுக்கான இறங்குதுறை நிர்மாணம், எழுவைதீவு, ஊர்காவற்றுறை இறங்குதுறை நிர்மாணம், வேலணை - ஊர்காவற்றுறை வீதி புனரமைப்பு, அரச சுகாதாரதுறைக்கான மருத்துவ கழிவுமுகாமைத்துவ முறை ஒன்றை வடமாகாணத்தில்தாபித்தல் (5 மாவட்டங்கள்),யாழ் மாவட்டத்தில் மனிதகழிவுக்கான முறையான அகற்றல் முறையை தாபித்தல் (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி), யாழ். மாவட்ட மாநகர பகுதியில் திண்மக் கழிவு சேகரித்தல் மற்றும் நீக்கத்திற்கான முறைமையினை தாபித்தல், வடமாகாண கரையோரப் பகுதிகளில் கடற்பாசி வளர்த்தல், வாழ்வாதார வருமானம் ஈட்டல் திட்டங்களான பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்திகளும் சந்தைப்படுத்தலும், வதிரி தோல் பொருட்கள் உற்பத்தி, கரவெட்டி, காமாட்சி அம்பாள் மென்பொருளியல் கைத்தொழில், கோப்பாய் போன்ற அதியுயர் பெறுபேறுகளை ஏற்படுத்தக் கூடிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் அடங்கும்.

யாழ்.குடாநாடானது பிரதானமாக ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, மண்டைதீவு ஆகிய தீவுகள் உள்ளடங்கலாக 15 இற்கும் மேற்பட்ட தீவுகளினால் சூழப்பட்டுள்ளது. இத்தீவுகளில் வசிக்கும் சுமார் 75 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் கடற்றொழில், விவசாயம், கால்நடை மற்றும் பனை சார்ந்த உற்பத்திகள் போன்றவற்றில் தமது வாழ்வாதாரங்களில் ஈடுபட்டுள்ளனர். வினைத்திறனற்ற போக்குவரத்து முறைமை காரணமாக பிரதான நிலத்துக்கான போக்குவரத்திற்காக அதிக நேரத்தையும் பணத்தையும் மக்கள் செலவிட வேண்டியிருக்கின்றது.

இதனால் தீவுகளில் வசிக்கின்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் "வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் வடமாகாண பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதில் வரையறை காணப்படுகின்றது.

மேலே இனங்காணப்பட்ட 10 விசேட கருத்திட்டங்கள் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுடன் கற்றுக் கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் நிரந்தரமான சமாதானத்திற்கு பங்களிப்புச் செய்யும் பரிந்துரைகளாக அமைவதுடன் மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் ஒருங்கிணைந்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஒருபொறிமுறைக்கான அடிப்படையாக அமையும் என சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# வடக்கு மாகாணத்திற்கு வருவதற்கு இந்திய இராணுவத் தளபதி ஆர்வம்



ஐந்து நாட்கள் அதிகார பூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹக், வடக்கிலுள்ள படைத்தளங்கள் மற்றும் இராணுவப் பயிற்சித் தளங்களுக்குச் செல்வதில் தீவிர ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹக் நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கையை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவரை கொழும்பிலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் அரிந்தம் பக்சி, இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க உள்ளிட்டோர் வரவேற்றனர்.



இந்திய இராணுவத் தளபதிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

கொழும்பு வந்து சேர்ந்ததும், இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹக், முதலாவதாக, பத்தரமுல்லையில் அமைக்கப்பட்டுள்ள இந்திய அமைதிப் படையினருக்கான நினைவிடத்துக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அதேவேளை, இலங்கைக்கு வந்துள்ள இந்திய இராணுவத் தளபதி, ஜெனரல் தல்பீர் சிங் சுஹக், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன் அவர் வடக்கில் உள்ள இலங்கை படைத்தளங்கள் மற்றும் பயிற்சி முகாம்களுக்கும் செல்லவுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளுக்கும் செல்லவுள்ள இந்திய இராணுவத் தளபதி, பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படையினரின் நினைவிடத்திலும் அஞ்சலி செலுத்தவுள்ளார்.

1987ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய அமைதிப் படையில் கொம்பனி தளபதியாக ஜெனரல் தல்பீர் சிங் சுஹக் பணியாற்றியிருந்தார் எனபதுகுறிப்பிடத்தக்கது.(இ-7-10)

## லலித், குகன் காணாமற்போன விவகாரம்

# நீதிமன்ற பிடியாணை உத்தரவு இன்னும் கெஹலியவிடம் கையளிக்கப்படவில்லை



லலித்-குகன்

(கொழும்பு)

லலித் மற்றும் குகன் கடத்தல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நீதிமன்ற பிடியாணை இது வரை அவரிடம் வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் மர்ம நபர்களால் கடத்தப்பட்டிருந்தனர். அவர்களைப் பற்றி இதுவரை எதுவித தகவலும் இல்லை.

இந்நிலையில் அன்றைய கால கட்டத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் லலித் மற்றும் குகன் ஆகியோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கபபட்டுள்ளதாக முன்னாள் அமைச்சரும், மகிந்த அரசின் ஊடகப பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே லலித் மற்றும் குகன் ஆகியோரைக் கண்டு பிடித்துத் தருமாறு அவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். குறித்த வழக்கிலும் கெஹலிய தெரிவித்திருந்த தகவலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சாட்சியமளிப்பதற்காக யாழ். நீதிமன்றத்தல் ஆஜராகுமாறு மூன்று தடவைகள் முன்னாள் அமைச்சர் கெஹலியவுக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. எனினும் அவர் அதனை உதாசீனம் செய்துள்ளார். இதனையடுத்து கடந்த நவம்பர் 13 ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது கெஹலியவை கண்ட இடத்தில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும்முன்னாள் அமைச்சர கெஹலிய ரம்புக்வெல இதுவரை கைது செய்யப்படவில்லை. மேலும் கெஹலியவுக்கு எதிரான பிடியாணை வழங்கப்பட்ட பொலிஸ் நிலையம் எது என்பது குறித்தும் தகவல்கள் இல்லை என்று பொலிஸ, ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அத்து டன் பிடியாணைக்கு ஒரு கால எல்லை விதிக்கப்பட்டிருக்கும் என்றும் அதற்குள்ளாக பொலிஸார் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

## Subject- English    Part-I    Time: 01 Hour

Important
* Write your Name/ Index Number clearly * The paper I consists of 8 questions *The paper II consists of 8 questions ( Q.No.9-15)
*Answer all the questions *Each question contains 5 marks.

### Test I

Complete the dialogue between Upili and Kalum. Select the most suitable word from the box and write it in the blank given. *The first one is done for you.*

(a) famous
(b) photographs
(c)~~sugar~~
(d) surprise
(e)interesting
(f)morning

Upuli: Hi, Kalum Here's your cup of tea
You don't take (1) ..Sugar... do you?
Kalum: No. I don't. Thanks Upuli. So, what's new?
Is there anything (2)..........................?
Upuli: Oh, I met Kalpa this (3)...............
He was with Mohan Perera, our (4)............... cricketer
Kalum: Oh, what a (5) ...................! Was he happy?
Upuli: Yes, he has taken some (6).............. too.
They are in his mobile phone and he showed them to me.

### Test 02

You need to go to the places given in boxes to get some actions done. Match the places with the actions in 1-6 and write the relevant letter in the blank. *The first one is done for you.*

Places

(a) MAIN AUDITORIUM (b) SANCTURY
(c) STUDENT LOUNGE (d) JOGGING PATH
(e) ARRIVALS LOUNGE (f) PRIMARY CARE UNIT

1. You exercise to reduce your weight ...d...
2. You are waiting to welcome your friend to Sri Lanka ........
3. You spend some time under medication and observation ........
4. You are listening to a speech on "Prevantion of Dengue" ........
5. You are meeting your lecturer to hand over the project ........
6. You are watching animals in their habitats ........

### Test 03

Look at the pictures. Write what each person is doing.Each sentence should have atleast five words. *The first one is done for you.*







1. Nimal is carrying a heap of books. 2.......................................













### Test 04

Fill in the blanks in the following letter using the words given in the box. *The first one is done for you.*

our, ~~his~~, its, her, my, their

19, Samagi Mawatha,
Kelaniya.
12.09.2015

Dear Mom,

I have just moved to a new house, The owner, Mr.Perera, is also here with (1) ....his.... wife .they are really kind and innocent. (2)........... two sons are in Canada.This is a big old house and it has (3) ............. own beauty. I came here with four of (4) ........... friends because there are two large bed rooms. Mrs. Perera cooks meals and (5) ................. husband always helps her. We ourselves cook (6) .............. meals. Mom, we are going our for a walk now. Shall write more later.Give my love to Dad.

Your loving daughter
Amanda

### Test 05

Read what the office bearers of the Youth Club say.Match them with the members responses. *The first one is done for you.*




| | |
|---|---|
| d. | 1.We can get together and visit all the homes |
| | 2.My uncle is working there and I can talk to him |
| | 3.You have to go there before 3 o' clock |
| | 4.We will bring them from home |
| | 5.We have plenty of time, the post office closes at 5.30 |
| | 6.We like all the tasks.It's the result of team sprit. |

### Test 06

Write a short paragraph on one of the following. Use about 50 to 60 words.
1. Places where we shop
2. Grandparents are kind and lovable.

### Test 07

Read the following text and answer the questions given.

**Evening**

Evening is here. The sun has just set behind the green hills to the west of us. The sky is still red around the point it disappeared. but this brightness soon fades. All around us we can see that farm works walking slowly home from the fields because they were tired after a hard day's work. The heavy cart horses which have been pulling ploughs and carts during most of the hot day pass us while a ringing of bells on their way to the stables and well -earned rest, from the village we can hear the voices of the women and children quite early.A girl is singing an old song which her mother and grandmother and their mothers and grandmothers have been singing ever since the village came in to existence.

Suddenly a bell in the village church begins to ring hurriedly and with great noise. To a stranger this would seem ugly, modern idea, distrubing the peace of a country evening just as the loud and unmusical homs of motor- cars have ruined the peace and quiet of the town. But this evening bell is actually as old as the girl's song. probably older, for it has been ringing for nearly 900 years now.Originally this bell was rung every evening to warn people that if they. were found outside their houses at night. They would be punished.This law was made because the night is the time when theives and murderers are at their busiest. For many years now people have been allowed to go out at night.But the bell still continues to ring. joining past to resent in the same way that the girl's song does.

1. Why did the farmers walk slowly home?
2. Who had pulled ploughs during the day?
3. What was older than the girl's song?
4. Why has ringing of the bell became a law?
5. Write the sentence which says the people in the village do not like the song and the ringing of the bell?

### Test 08

Your school is going to celebrate " The World Health Day" which falls on the 7th of April. Write a notice to be put up on the school notice board.Mention the time, date, venue and activities you hope to do.

# நல்லாட்சி அரசின் பட்ஜெட் மு

## ஓய்வூதியக்காரர்களுக்கு உயர்ச்சி

(தொடர்ச்சி...)

### இலங்கையின் செயற்கைக் கோள் விண்வெளி

இதுவரை பயன்படுத்தப்படாத எமது செயற்கைக் கோள் விண்வெளியானது, வெளிப்படையான செயன்முறையொன்றின் ஊடாக சர்வதேச ரீதியாக ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்.

### இயற்கை அனர்த்தங்களுக்கு எதிரான காப்புறுதி

கடந்த 12 மாத காலப்பகுதியில், புயல்களிலிருந்து வெள்ளங்கள். வெள்ளங்களிலிருந்து நிலச்சரிவுகள் என இயற்கை அனர்த்தங்களை மாத்திரமே நாம் கொண்டிருந்தோம். உயிர்களின் இழப்புக்கள், சொத்துக்களின் சேதங்கள் போன்றன குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்டன. அரசாங்கம் அவ்வாறான இழப்புக்களுக்கான நட்டஈடாகவும், இம்முயற்சிகளை மீள்கட்டமைப்பதற்கான ஆதரவாகவும், வருடாந்தம் சராசரி ரூபா 500 மில்லியன்களுக்கும் அதிகமான தொகையை செலவளித்துள்ளது. ஆயினும், இப்பொறிமுறையில, அவ்வனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நட்டஈடுகள் இன்னும் செலுத்தப்படாமலும் மற்றும் அவ்வாறான நட்டஈடுகளை வழங்கும் செயன்முறைகளிலிருந்த தாமதங்கள் போன்றனவற்றிற்கு வழி வகுத்தன. இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுறாவளிகள், புயல்கள், கொந்தளிப்புக்கள், வெள்ளம், நிலச்சரிவுகள், நிலநடுக்கம், சுனாமி மற்றும் ஏனைய இயற்கை அழிவுகள் போன்ற இன்னோரன்ன இயற்கை அனர்த்தங்களுக்கு எதிராக முழு நாட்டையும்பாதுகாப்பதற்கு நான முன்மொழிகின்றேன். இவ்வியற்கை அனர்த்தக் காப்புறுதி மொத்தமாக கூடியது ரூபா 10 ஆயிரம் மில்லியன்கள் வரையிலான சேதங்களை உள்ளடக்குவதோடு, தனிப்பட்டவைகள் கூடியது ரூபா 2.5 மில்லியன்களையும், ஆயுள் காப்புறுதியானது ரூபா ஒரு மில்லியனையும் உள்ள டக்குகின்றது.

### விலையின் ஸ்திரத்தன்மையை பேணுதல்

2015 ஆம்ஆண்டுஜனவரி மாதம் 9 ஆம் திகதியிலிருந்து இலங்கையின் வரலாற்றில் இதுவரை வழங்கப்படாத மட்டங்களிலான நிவாரணங்களை வழங்குவதன் மூலம் வாழ்க்கைச் செலவுச் சுமையிலிருந்து பாதிப்புக்குள்ளாகிய அநேகமானோருக்கு நிவாரணம் அளித்து அவர்களுக்கு புதிய ஒரு வாழ்வை அளிக்கக் கூடியதாக இருந்தது. இக் குறுகிய காலப்பகுதியில், பால்மா, கோதுமைமா, சீனி உள ளடங்கலாக 13 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் முன்னர் ஒருபோதும் இல்லாத மட்டத்தற்குக் குறைவடைந்ததோடு, தீர்வையைக் குறைத்ததனால், ஒரு குடும்பத்திற்குப் பொருத்தமான வாகனங்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்தன. இந்நிவாரணங்களை காரணமாகக் கொண்டு நெடுஞ் சாலைகள் வாகனங்களினால் நிரம்பி வழிந்ததனால் சிரமங்களுக்கு முகங்கொடுத்தாலும் கூட, இலங்கையின் குடும்பமொன்றிற்கு வாகனமொன்றினை கொள்வனவு செய்வதற்காக மகத்தானதொரு வாய்ப்புக் கிடைதத்து. வரலாற்றில் பதியக் கூடிய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுகளும் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய நிவாரணங்கள் இலங்கையர்கள் கைகளில் புழங்கக் கூடியபணத்தின் அளவினை அதிகரிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும், பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கமொன்றாக மக்களுக்கு வாக்குக் கொடுத்தபடி, தெரிவு செய்யப்பட்ட 11 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக குறைப்பதற்கு நான் முன் மொழிகின்றேன்.

அநேகமான உணவுப் பொருட்களின் விலைகள் ஒவ்வொரு வருடமும் ஏனைய மாதங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் நவம்பர் - டிசெம்பர் மாதங்களில் உச்ச மட்டமொன்றிற்கு காணப்படுகின்றது. இவ்விலை ஏற்றத்தாழ்வுகளை முகாமை செய்வதற்காக கடந்த ஆட்சிக்காலத்தில் ஒழுங்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தாமையினால் இன்று சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் துரித வேகத்தில் உயர்வடைந்துள்ளது.

இந் நிலைமையை முகாமை செய்வதன் மூலம் நுகர்வோருக்கு நியாயமான விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதோடு, உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் உருளைக் கிழங்கிற்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள ஒரு கிலோ உருளைக் கிழங்கிற்கான விசேட வர்த்தகப் பண்டங்களுக்கான வரி 75 ரூபாவிற்கும் 85 ரூபாவிற்கும் இடையிலான விலையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அதேபோல, ஒரு கிலோ பெரிய வெங்காயத்திற்கு விதிக்கப்பட்டுள்ள விசேட வரியை 25 ரூபாவினால் குறைப்பதன் மூலம் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தினை 85 ரூபா விற்கும், 95 ரூபாவிற்கும் இடையிலான விலையொன்றுக்கு நுகர்வோருக்கு வழங்குவதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

மேலும், பிரதான நுகர்வுப் பண்டமொன்றான உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் பால்மா பக்கெறறொன்றின் விலை 295 ரூபா வரை குறைப்பதற்கும், அதன் மூலம் உள் நாட்டு பால்மா உற்பத்தியாளருக்கு ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்வதற்காக அரசாங்கத்தினால் 30 ரூபா மானியமொன்றினை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, குழந்தைகளின் போசாக்குத் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஒரு கிலோ பால் மாவை 100 ரூபாவினால் குறைப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

425 கிராம் தகரத்தில டைக்கப்பட்ட மீன் தகரம் ஒன்றின் விலையை 125 ரூபா வரை குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். அதன்பிரகாரம், உள்நாட்டு தகரத்திலடைக்கப்பட்ட மீன் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்காக 425 கிராம் தகரத்திலடைக்கப்பட்ட மீன் தகரமொன்றிற்கு 15 ரூபா மானியமொன்றினை உள்நாட்டு தகரத்திலடைக்கப்பட்ட மீன் தயாரிப்பாளர்களுக்கு வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன். இதன் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் அளிப்பதோடு, உள்நாட்டு தகரத்திலடைக்கப்பட்ட மீன் கைத்தொழிலை விருத்தி செய்வதனால் உள்நாட்டு மீனவர்களின் மீன் வளங்களுக்கு உயர்ந்த விலையொன்றினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

மற்றுமொரு அத்தியாவசியமான உணவுப் பொருளான நெத்தலிக் கருவாடுகளை தனிப்பட்ட வர்த்தகர்களினால் பெரிய விலை வீச்சொன்றிற்குள் விற்பனை செய்யாததனால் நுகர்வோரினால் உயர்வான விலையொன்றினைச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. லங்கா சதொச நிறுவனத்தினால் நெத்தலிக் கருவாடு ஒருகிலோ 380 ரூபாவிற்கு விற்பனை செய்யும் போது, தனிப்பட்ட சில்லறை வியாபாரிகள் நெத்தலிக் கருவாடு ஒரு கிலோவை 800 ரூபா உயர்ந்த விலையொன்றுக்கு விற்பனை செய்கிறார்கள். இவ்வாறு பாரிய அளவிலான இடைத்தரகர்கள் இலாபத்தினை அனுபவிப்பதன் மூலம் நுகர்வோரை கஷ்டத்துக்குள்ளாக்குவதை தடுப்பதற்காக ஒரு கிலோ நெத்தலிக் கருவாட்டுக்கு 410 ரூபாவான உச்ச சில்லறை விலையொன்றினை நிர்ணயிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

சாதாரண மக்களின் மறறுமொரு அடிப்படை உணவுப் பொருட்களில் ஒன்றான பருப்புக்கும் இடைத்தரகர்கள் பெரிய ஒரு இலாபத்தினை வைத்திருப்பதனால் நுகர்வோர் உயர்வான விலையொன்றினை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது. தற்போது ஒரு கிலோ பருப்பின் இறக்குமதிச் செலவு 130 ரூபா மட்டத்தில் காணப்பட்டாலும் திறந்த சந்தையில் ஒரு கிலோ பருப்பு 220 ரூபா அளவிலான உயர்ந்த விலையொன்றுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதன்படி, நுகர்வோருக்கு நியாயமான விலையொன்றுக்கு பருப்பை பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு கிலோ பருப்பை 169 ரூபாவாக உச்ச சில்லறை விலையொன்றை நிர்ணயிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன. அதற்காக பருப்பு மீது விதிக்கப்பட்டுள்ள விசேட வர்த்தகப் பண்டங்களுக்கான வரியை முழுமையாக நீக்குவதற்கும் நான் நடவடிக்கையெடுப்பேன்.

கருவாடு வகைகளில் அதிகளவிலான கேள்வியொன்று காணப்படும் ஒரு கிலோ கட்டாக் கருவாடு ஆயிரத்து 100 ரூபா உச்ச சில்லறை விலையொன்றுக்கும், ஒரு கிலோ சாலக் கருவாடு 425 ரூபா உச்ச சில்லறை விலையொன்றுக்கும் நிர்ணயிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். அதன் மூலம் உள்நாட்டு கருவாட்டுத் தயாரிப்பாளர்களை பாதுகாப்பதற்காக நுகர்வோருக்கு சலுகை அடிப்படையிலான விலையொன்றுக்கு கருவாட்டினை வழங்குவதற்கும் எதிர்பார்க்கின்றேன்.

தற்போது சிறந்த சந்தையில் ஒரு கிலோ கடலையின் சில்லறைவிலை 220 ரூபாவாக உயர்வான ஒரு வலை மட்டத்தைக் கொண்டிருந்தாலும், அதன் இறக்கு மதிச் செலவு 160 ரூபாவாக குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. அதன்படி, நுகர்வோருக்கு நிவாரணத்தினை அளிக்கும் நோக்குடன் ஒரு கிலோ கடலையை 169 ரூபா உச்ச சில்லறை விலையொன்றினை நிர்ணயிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கு மேலதிகமாக, 12.5 கிலோ கிராம் வீட்டு எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை உடன் அமுல்படுத்தும் வகையில் 150 ரூபாவினால் குறைப்பதற்கு முன்மொழிவதோடு, வறிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன் ஒரு லற்றர் மண்ணெண்ணெயின் விலையை 10 ரூபாவினாலும குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இவ்வாறு வறிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன குறைக்கப்பட்ட ஏனைய எண்ணெய் வகைகளுடன் கலந்து விற்கும் முறையற்ற கதைகளை தடுப்பதற்கு அவசியமான சட்டரீதியான செயற்பாடுகளை எடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்காக அரசாங்கத்திற்கு ரூபா 3 ஆயிரம் மில்லியன்களை செலவு செய்ய வேண்டியேற்படுவதோடு, அதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கும் நான் முன்மொழிகின்றேன். அதேபோல அரசாங்கத்தினால், இவ்வாறு வரியைக் குறைத்தல் மற்றும் உயர்ந்த சில்லறை விலையொன்றினை விதிப்பதன் மூலம் நுகர்வோருக்கு வழங்க எதிர்பார்க்கும் நிவாரணத்தினை அவர்களுக்கு அதேமாதிரி பெற்றுக் கொடுப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான தமது கடமைகளையும் வினைத்திறனான முறையிலும், உற்பத்தித்திறனுள்ள வகையிலும் நிறை ஒரு கிலோ கட்டாக் கருவாடு ஆயிரத்து 100 ரூபா உச்ச சில்லறை விலைக்கு மாறற வேண்டியுள்ளதாகவும் இச்சபையில் நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

நான் எண்ணுகின்றேன் நீங்கள் என்னுடன் இணாங்குவதற்குக் காரணம் இறக்குமதி உணவுப் பொருட்களின விலை அதிகரிப்பதற்குக் காரணமாக இருப்பது கொள்கை ரீதியற்ற இடைத்தரகர்களும் மற்றும் நிரம்பல சங்கிலியில் மோசமான போக்குமாகும். இந்நிலைமையினை தீர்ப்பதற்காக சதொச மொத்த விற்பனை பிரிவின் ஊடாக தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தகங்களின் இறக்குமதியாளராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் முன்மொழிகின்றேன். அத்தியாவசியமான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வது மாத்திரமல்லாமல் நாட்டிற்கு அவசியமான தொகையைக் களஞ்சியப்படுத்துவதும் சதொச நிறுவனத்தின் பொறுப்பாக உள்ளது. சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான களஞ்சியக் கட்டடத் தொகுதியில் களஞ்சியப்படுத்தியுள்ள இருப்பை இலாபமான முறையில் தனியார் வர்த்தகர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை அத்தியாவசியமான பொருட்க ளின் விலைகளை 20 சதவீதத்தினால் குறைப்பதற்கு பங்களிப்புச் செலுத்தலாம் என நான் நம்புகின்றே

### செ

எமது அரசாங றான, அரச துறை கூடிய மாதாந்தக் ஆயிரம் ஓய்வுதி பீட்டின் போது க இந்தக் கொடுப்பன பட்ட இரண்டு இ ஓய்வுபெறும்போது வுக்குக் கருத்திற்

### வரிக்கொ ந

எமது கன்னி முக்கியமான விட குறிப்பிட விரும்ப செலவுத்திட்ட உ முன்வைத்த முன் தேவையான வரு கொள்வதற்கான நீங்கள் அறிந்தது மையானது காலா கொள்ள முடியாத மாகும். மேலும் அ அபிவிருத்திக்குப் தேவையான வரு வதற்கோ மக்களின் தாகவோ இல்லை. புகளுடன் கூடிய குவிப்பானது வரி நிர்வாகத்தினையும் ளது. வரி செலுத்துந கப்பாடு இதன்மூலம் டுகின்றது. கடந்த வருமானத்தின் ஆண்டுகளின் ஆரம் யில் 20 சதவீதமாக மொ.உ. உற்பத்திய கதியில் குறைந்துள் அதிகரிப்பதற்கான அரசாங்கத்தினால் பட்டுள்ளதுடன் 20 வருமானத்தினை சதவீதமாக அதிகரி இலக்காகக் கொண்டு இந்த அரசாங்கம் வரி யானதொரு மறுசீரமை உணர்ந்துள்ளது.

### வரி முறைமை

தற்பொழுது வரி லாக்கியுள்ள பல்வே வரிகள் மற்றும் அற மானம் சேகரிக்கப்ப பார்க்கப்பட்ட வருமா முடியாத சில வரிகளின் நாட்டின் வரி வருமா வதற்கு நான் முன்மெ தற்பொழுது நடைமு தொடர்புமற்ற மக்கள கொடுக்கும் சில வரிக செலுத்துநர்களுக்கும் சமூகத்திற்கும் நன் தற்கு நான் முன்மெ வகையல் வரி முறை வதற்காக பின்வரும் நான் முன்மொழிகின்

பங்கு கொடுக்கல் -

நிர்மாண கைத்தொ அறவீடு

சொகுசு மற்றும் அ வாகன வரி

# உ முன்மொழிவுகள்

ான் நம்புகின்றேன்.

### கொடுப்பனவுகள்

எமது அரசாங்கத்தின் வாக்குறுதியொன் ான, அரச துறை ஊழியர்களுக்குக் கிடைக்கக் டிய மாதா ந்தக் கொடுப்பனவான ரூபா 10 ஆயிரம் ஓய்வுதியக் கொடுப்பனவுக் கணிப் டின் போது கவனத்தில் கொள்ளப்படும். ந்தக் கொடுப்பனவு மற்றும் முன்பு வழங்கப் ட இரண்டு இடைக்காலக் கொடுப்பனவுகளும் ப்வுபெறும்போது ஓய்வூதியக் கொடுப்பன க்குக் கருத்திற்கொள்ளப்படும்.

### வரிக்கொள்கை மற்றும வரி நிர்வாகம்

எமது கன்னி வரவு செலவுத்திட்டத்தில் மிக க்கியமான விடயங்களை இதன்பின்னர் றிப்பிட விரும்புகின்றேன். எனது வரவு லவுத்திட்ட உரையில் நான் இதுவரை ன்வைத்த முன்மொழிவுகளில் நிதித்துறைக்கு வையான வருமானத்தினை பெற்றுக் ாள்வதற்கான உபாயமுறை அதுவாகும். ங்கள் அறிந்தது போன்று, எமது வரி திற மயானது காலாவதியானதுடன் விளங்கிக் ாள்ள முடியாதளவு சிக்கல்கள் நிறைந்தது கும். மேலும் அது முதலீடு மற்றும் வியாபார ிவிருத்திக்குப் பொருத்தமற்றதாகும். இவை வையான வருமானத்தினை உருவாக்கு ற்கோ மக்களின் சேமிப்பினை தூண்டுவ கவோ இல்லை. பல்வேறு வரிக்கட்டமைப் ளுடன் கூடிய அளவுக்கதிகமான வரிக் விப்பானது வரி முறைமையினையும் வரி வாகத்தினையும் மேலும் சிக்கலாக்கியுள் ு. வரி செலுத்துநர்களின் தன்னார்வ இணக் பாடு இதன்மூலம் ஆர்வமிழக்கச் செய்யப்ப ின்றது. கடந்த வருடங்களில் அரசாங்க ுமானத்தின் அபிவிருத்தி 1990 ஆம் ண்டுகளின் ஆரம்பத்தில் மொ.உ. உற்பத்தி 20 சதவீதமாக இருந்ததுடன் 2014 இல் ா.உ. உற்பத்தியில் 11.3 சதவீதமாக துரித யில் குறைந்துள்ளது. இந்த விகிதத்தினை கரிப்பதற்கான அவசரத் தேவைப்பாடானது சாங்கத்தினால் தெளிவாக இனங்காணப் டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டளவில் ுமானத்தினை மொ.உ. உற்பத்தியில் 17 வீதமாக அதிகரிப்பது என்பதனை நாம் க்காகக் கொண்டுள்ளோம். இந்தவகையில், த அரசாங்கம் வரி முறைமையில் முழுமை னதொரு மறுசீரமைப்பு அவசியமென்பதனை ணர்ந்துள்ளது.

### வரி முறைமையினை இலகுபடுத்தல்

தற்பொழுது வரி முறைமையினை சிக்க க்கியுள்ள பல்வேறுபட்ட 35 வகையான கள் மற்றும் அறவீடுகளின் மூலம் வரி வரு னம் சேகரிக்கப்படுகின்றது. எனவே எதிர் க்கப்பட்ட வருமானத்தினை சேகரிப்பதற்கு பாத சில வரிகளினை ஒன்றாக இணைத்து டின் வரி வருமானத்தினை மேம்படுத்து ற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் பொழுது நடைமுறையிலுள்ள எவ்வித டர்புமற்ற மக்களுக்கு தொல்லையினைக் டுக்கும் சில வரிகளை இல்லாதாக்கி வரி ுத்துநர்களுக்கும் அதேபோன்று வியாபார கத்திற்கும் நன்மையினை வழங்குவ த நான் முன்மொழிகின் றேன். இந்த கயல் வரி முறைமையினை இலகுபடுத்து ாக பின்வரும் வரிகளை நீக்குவதற்கு ் முன்மொழிகின்றேன்.

ங்கு கொடுக்கல் -வாங்கல் அறவீடு

ிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய வீடு

சாகுசு மற்றும் அரைச் சொகுசு மோட்டார் ன வரி

சுற்றுலா அபிவிருத்தி அறவீடு

வருமான வரி

நிறுவன வருமான வரி

பல்வேறு மூலங்கள் மற்றும் பல்வேறு துறைகளுக்கான விலக்களிப்புகளை அடிப்படையாகக் கொண்ட பகிரப்படும் ஆகக் குறைந்த பங்குலாபம் பகிர முடியுமான இலாபத்தில் 15 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

### புகையிலை, மதுபானம் மற்றும் கசினோ மீதான மிகைவரி

யனாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகினறேன். இம் மட்டத்திற்கு அதிகமான உ.பொ.செ வரி 15 சதவீத ஒரு சீரானதாக அறவிடப்ப டுவதுடன் வரி விதிக்கப் படக்கூடிய வருமானம் எவ் வித விலக்களிப்புகளு முன்மொழிகின்றேன்.

### பொருளாதார சேவைக் கட்டணம்

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்துவதற்கான அறவீடாக பொருளாதார சேவைக் கட்டணம் அறவிடப்படுகின்றது. தற்பொழுது பொ.சே. கட்டணம் நட்டத்தில் இயங்கும் அல்லது விலக்களிக்கப்பட்ட வியபாரங்களுக்கு மாத்திரம் விதிக்கப்படுகின்றது. வரி சேகரிப்பினை உறுதிப்படுத்தும் வகையிலும் பொ.சே. சேர் வரிக்கான ஆகக் குறைந்த மட்டம் வருடமொன்றுக்கு ரூபா 12 மில்லியனாக இருக்கும். மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் பெறுமதி சேர் வரியிலிருந்து நீக்கப்படும்.

### தேசக கட்டுமான வரி

பெறுமதி சேர் வரிக்கேற்ப தேசக் கட்டுமான வரி மட்டத்தினை குறைப்பதறகும் வரி விதிப்பு விகிதத்தினை 4 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் சில விலக்களிப்புகளை நீக்குவதற்கும் நான முன்மொழிகின்றேன். விகித அதிகரிப்பின் மூலம் பெறப்படும் வருமானம் திரட்டு நிதியத்திற்கு மாற்றப்படு தல் வேண்டும்.

### பந்தய மற்றும் சூதாட்டம்

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் விதிக்கப்பட்ட கசினோ அனுமதிக் கட்டணம் நீக்கப்படுவதுடன் சூதாட்ட வியாபாரத்திற்காக விதிக்கப்பட்ட வருடாந்த அறவீடு ருஜினோ வியாபாரம் தவிர்ந்த ஏனையவற்றுக்கு 400 மில்லிய



# உழைக்கும் பொழுது செலுத்தும் வரியில் மாற்றம்

நிறுவன மூலங்கள் மாற்றல் விலையிடலுக்கான பிரச்சினையாகக் காணப்படுவதுடன் மயக்க நிலை காணப்படுவதனால் பொருள் கோடலுக்கான வரி திட்டமிடல் மற்றும் காணப்படுகின்றது. எனவே, தற்பொழுது காணப்படும் நிறுவன வருமான வரி விகிதக் கட்டமைப்பினை 30 சதவீத உயர்ந்த மட்டமாகவும் 15 சதவீத தராதர மட்டமாகவும் இரண்டு வகித அளவுகளைக் கொண்டதாக மீள் கட்டமைப்புச் செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். பந்தய மற்றும் சூதாட்டம், மதுபானம, புகையிலை மற்றும் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் குத்தகை கைத்தொழில், வியாபாரச் செயற்பாடுகள் உள்ளடங்கலாக நிதிச் சேவைகள் மூலம் கிடைக்கும வருமானம் மற்றும் இலாபத்திற்கு உயர் வரி விகிதம் ஏற்புடையதாகும். ஏனைய துறைகள் சாதாரணதர விகிதமான 15 சதவீதத்திற்கு உட்படும். எவ்வித கொள்கையுமின்றி வழங்கப்பட்ட நிறுவன, நானாவித மற்றும் ஏனைய விலக்களிப்புகள் போன்ற நீண்ட கால வரிச்சலுகைகள் இனங்காணப்பட்டு திருத்தப்படும்.

பங்குடைமையாளர்கள் அவர்களது முதலீட்டுக்கான நியாயமான பங்குலாபங்களை பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால நிறுவன வரி திருத்தங்களின் மூலம் புகையிலை, லிக்கர் மற்றும் கசினோ கைத்தொழில்கள் பெற்றுக் கொள்ளும் எல்லையற்ற பயனைத் தவிர்ப்பதற்கும் புகையிலை, மதுபானம் மற்றும் சூதாட்டம், பந்தய நடவடிக்கைகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கமைவாகவும் இத்துறைக்கான வருமான வரியினை 25 சதவீத மிகை வரியாக விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### ஆளுக்குரிய வருமான வரி

வருடாந்தம் ரூபா 7 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு. அதிக வருமானத்தினைப் பெறும் ஊழியர்கள் முன்னேற்றகரமான வரியொன்றாக உழைக்கும் பொழுது செலுத்தும் வரியினை செலுத்த வேண்டியுள்ளனர். ஆகக் கூடிய வரி விகிதம் 16 சதவீதமாகும். உ.பொ.செ. வரியினை மேலும இலகுபடுத்தும் நோக்கத்துடன் சிறந்த இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கும் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கும் வகையிலும் உ.பொ.செ. வரிக்கு ஏற்புடையதான சட்டத்தினை திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். ஊழியர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு வரி விடுவிப்பு வருடாந்த மட்டத்தினை ரூபா 2.4 மில்லிமின்றி அனைத்து சம்பாத்தியங்களையும் உள்ளடக்கியிருக்கும். இந்த வரி விகித முறையானது தற்பொழுது 24 சதவீதமான முன்னேற்றகரமான விகிதமாக காணப்பட்ட போதிலும் தனியாள் வருமானம் உழைப்பவர்களுக்கு இயலுமான வகையில் ஏற்புடையதாக இருக்கும். மேலும் இரண்டாம் நிலை ஊழியத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு எவ்வித விலக்களிப்புமினறி அதே விகிதத்தில் வரி அறவிடப்படும். சிறந்த நாணய மற்றும் அரசிறைக் கொள்கைகளை பிரயோகிப்பதன் மூலம் இவ்வருடத்தின் போது குறைந்த வட்டி விகித்தை அரசாங்கத்தினால் பேணுவதற்கு முடியுமாக இருக்கும். சிறந்த பெறுபேறுகளை தரக்கூடிய வியாபாரங்களில் முதலிடுவதற்கான குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெற்றுக் கொள்வதற்கு மக்களுக்கு இது பெருமளவு உதவியாக இருக்கும். இதனால் வட்டி வருமானத்தினை எதிர்பார்த்து நீண்டகால அடிப்படையில் பணத்தினை வைப்பு செய்தவர்களின் வட்டி வருமானம் குறைவடைந்ததனால் அவர்கள் பாதிக்கப்பட்டனர். எனவே, 2016 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பண வைப்புகள் மீதான 2.5 சதவீத நிறுத்தி வைத்தல் வரியினை இல்லாதொழிப்பதற்கு நான் கடடண விதிப்பனவை நியாயப்படுத்துவதற்கும் இலாப மீட்டுகின்ற வியாபாரங்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்படும். அதேவேளை, ஆணடொன்றுக்கான ரூபா 120 மில்லியன் ஆகக் குறைந்த வரி விதிப்பனவு மட்டம் நீக்கப்படும். விதிக்கப்படும் வரி விதிப்பானது 0.5 விகிதமாக அமையும். மேலும், முன் கொண்டு வரப்பட்ட மீதிகளுக்கான காலம் 3 வருடங்களாக வரையறுக்கப்படும்.

### பெறுமதி சேர் வரி

இலங்கையில் கடந்த வருடங்களில் அவ்வப்போது எடுக்கப்பட்ட எழுந்தமான கொள்கைகள் பின்பற்றப்பட்டதனால் பெறுமதி சேர் வரி வருமானம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இறக்குமதிகளுக்கு குறை பெறுமதி விலையிடுதல், பெறுமதி சேர்ப்பில் கையாடல்கள் மற்றும் நீண்ட விலக்களிப்பு பட்டியல் என்பவற்றினால் எதிர்பார்க்கப்பட்டதனை விட குறைந்த வருமானம் பெறப்பட்டது. கௌரவ சபா நாயகர் அவர்களே, வரு மானத்தினை அதிகரிக் கும் நோக்கத்துடன் சில விலக்களிப்புகளை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். தற்பொழுது காணப்படும் ஒற்றை வரி விகிதம் 3 மட்டங்களில் 0 சதவீதமாகவும், நிலையான விகிதம் 8 சதவீதமாகவும் சேவைகள் துறை 12.5 சதவீதமாகவும் பெறுமதி னாக அதிகரிக்கப்படும்.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கசினோ கைத்தொழில் அறவீட்டுக் கொடுப்பனவை செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் பணிப்பாளர்களும், பங்குடைமையாளர்களும் அதற்கான பொறுப்பை ஏற்கும் வகையில் நிதிச்சட்டத்தினைத் திருத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

### வரி ஊக்குவிப்பு

பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட எழுந்தமானதும் உற்பத்தி தறனற்ற வரிச் சலுகைகளை அவை, தொழில் முயற்சியாளர்களுக்கிடையில் போட்டித் தன்மையற்ற நிலையொன்றினை உருவாக்கியுள்ளது என்றவகையில் அவற்றை நீக்கி விடுவதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. அரசாங்கத்தின் பொதுவான அரசிறைக் கொள்கைக்கு பொருத்தமற்றதான வரிச் சூழலொன்றினை இது உருவாக்கியுள்ளது.

எனவே, ஏதேனும் முதலீட்டுக்காக வழங்கப்பட்ட சலுகைகள் நிதி அமைச்சின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டுமென்பதுடன் அமைச்சினால் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளினால் நிர்வகிக்கப்படுதலும் வேண்டும்.

(தொடரும்...)

# கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

## Subject- English Part-II Time: 2 Hours

### Test 09

Read the following account of a visit to a factory by Grade 11 students of your school. There is a mistake in each sentence. Re write the sentences correcting the mistake. *The first one is done for you.*

Last week, we went to a steel factory as part of a study project we have been doing for the last six months.

1.None of the students in my class had visit any where like this before.
None of the students in my class had visited any where like this before
2.So we interested to see what it was like.
3.When we arrived at the factory at 7 a.m. a guide was waiting to show them around
4.I asked lot of questions that day.
5.After the visit I wrote a long report for a study project
6.I not received the grade yet, but I hope it will be good.

### Test 10

Select a word from the box which has a similar meaning to the phrase given within brackets. Write it in the space given. There are two extra words given in the box. *The first one is done for you.*

| | | | |
|---|---|---|---|
| idea, | manufactured, | technology, | dream, |
| problems, | left, | inspections, | inventor |

**New Inventions**

How would you use a radio or a telephone if you have no electricity or batteries? These (1)..Problems... (things that are difficult to deal with or understand) bothered British (2).................... (a person who has produced something that has not existed before) Trevor Baylis. So in 1990, he invented a wind up radio. It doesn't need electricity or batteries. You wind it up by hand , it plays for about an hour. Then you wind it up again. Today it is (3) ......................... (to make goods in large quantities) in South Africa .Baylis does not have a university degree in engineering. In fact, be (4)............(went away from a place) high school before graduating. He just loves making things to help people. He never knows when thoughts will come to him. He got the (5) ................. (an opinion about something) for the radio while watching TV. The thought for the telephone came to him in a (6) ............. (series of events that happen in your mind while you are a sleep)

### Test 11

Underline the correct word within the brackets to fill in the blank. *The first one is done for you.*

Sanduni: Guess who I met when I stopped at the bakery (1) ......... (to, for,with) your favourite chocolate cake? Vindya perera.
Dilini: Vindya perera? The last time we saw her was (2).......... (at, on, for) a wedding? Where is she now and what's she doing?
Sanduni: She's heading an international organization aimed (3)............ (in,with, by) improving the literacy rate (4) .............. (in,from,to) developing countries. She's now based in England.
Dilini: Wow! Is the back on holiday?
Sanduni: She's here (5) ........... (of, for, in) a conference (6) ...........(in, at ,on) education. She's going to present a paper on computer literacy.
Dilini: I remember in school she often talked (7) .......... (with, about, from) her wish to study and work overseas. She worked very hard (8) ........ (on, against, at) winning a scholarship and we were all happy when she got a place at a university there. Did you get her phone number?
Sanduni: I did more than that. I invited her over (9) ......... (for, with,in) dinner on saturday night.
Dilini: Oh no! Saturday night I am out because (10) ......... (of, in, on) the fund raising committee's meeting.
Sanduni: Can't you miss it? She's leaving on Sunday morning and Satur day's the only time she's free.
Dilini: I know what we can do. Both of you can have dinner at my place without me and talk about old times (11)............ (because, for , until). I get back from the meeting.
Sanduni: That's fine with me.

### Test 12

Fill in the blanks in the following text. Use The most suitable word from the box. There are two. extra works.

| | | | | |
|---|---|---|---|---|
| it, in, | Indian, | language, | many, most, | more, |
| of, on, | periodicals, | pop, | stations, | stayed, |
| technology, | varieties, | world's | | |

**ENGLISH TODAY**

Approximatelely 350 million people speak English as their first language. About the same number use it as a second language. It is the language (1) ....... aviation, internati onal sport and (2) ........ music. 75% of the (3) .......... mail is in English. (4).......... of the world's radio (5) .......... broadcast in English and (6)....... than half of the (7) .......... are printed in English. (8)......... is an official language (9).............. fourty four count ries. In (10)........ others it is the (11) ......... of business, commerce and (12)......... There are so many (13) ........... of English, but Scottish (14) ............Australian and Jamaican speakers of English, in spite of the differences in pronunciation. structure and vocabulary, would recognize that they are all speaking the same basic language.

### Test 13

Read the interview with Saman Dasanayake, an engineer who works in Colombo but lives in a village near Gampaha. Match the questions given in the box with the answer of the interview. Write the number of the question in the approxiate box.

1.Have you ever tried going by car?
2.How long have you lived there?
3.Why did you select Gampaha?
4.Why did you decide to live in the country?
5.Why have you decided to move back to the city?

(a) I was born and bred in village. Well partly because living is so much cheaper and the other reason is I thought, I could get the best of the city and the village. I love to be surrounded by trees and there is peace all around. ☐

(b) May be reason was, Iam from that area, and you get good drinking water. It's only an hour's journey from there to colombo. Most important face is having access to good schools for my children. ☐

(c) Let mee see, closer to ten years. But I think it's high time for me to leave Gampaha. I am planning to sell my house. I hope to move to colombo. to be as close to my office as I can. ☐

(d) Travelling. Having to commite there every day. Usually. I travel by train. Trains are too crowded and they are never on time. Sometimes it's very late when I reach home after work. ☐

(e) Right now. it's even worse than travelling by train. There's a big traffic congestion between Kiribathgoda and Kelaniya. Getting thro ugh the bridge is nightmare. But when they construct the outer circle express way from Kadawatha, everything will be fine. The big questi on is when. ☐

### Test 14

You are the secretary of the Social Services Club of your school. The club is interested in developing class libraries. Write a letter to The Director, The Department of Social Services of you area asking for support.

Include
- the value if reading
- explain the necessary of class libraries
- the type of books and magazines you need

Use about 100 words.

**OR**

THe following graph shows how Lions Club of Ganemuulla has allocated money in percentage under different projects. Study the graph and write a description about how the money was distributed. Use about 100 words.




### Test 15

**Read the following passage and answer the questions.**

To study to become a State Registered Nurse, in Sri Lanka, one has to go thro ugh an admission test and follow a two year course successfully. It is a quite extensive course of practical and theoratical study, where one has to pass more examination.

Hesith Gunatilaka, whose parents were both doctors, had always wanted to work in medicine. When be was a small boy. he had persuaded his parents to buy him a toy nurse's outfit. It had a white plastic apron, a while plastic cap for tyi ng around your head. A toy thermometer to see whether you had fever, wooden thing for pressing a patient's tongue down so that you could see her or this throat, some real bandages and so on.

Later at school. Hesith was particularly interested in science, especially bio logy. Seeing that he was more interested in practical things, he was always tho ught to be like to become a nurse. He was gentle, be believed that people shou ld help one another, and he was not afraid of blood or dirt or danger, so he was a boy whose teachers all agreed would make an excellent nurse.

Hesith did quite well in his science examinations at school at least well enough to get into a school of nursing, so after searching around, he found himself applying to the one in his town for a lace. He soon met with success. The next thing to do was to get the clothes he would need for the practical work.

The first day of term arrived. Hesith was so excited that be could hardly eat any breakfast, and he left home so early that he was at the school long before it opened.

The first thing he had to do was to attend a meeting with a head of the school, whose name was Mrs Perera, and the other students. The head, a woman who had herself been in the nursing profession for many years, congraculated the new students on entering the nursing profession, shook hands with each of them and told them what would be expected of them during their time at the school. She warened them that their work would not easy, begged them always to remain sincere and loyal to their chosen profession and wished them good luck.

When that was over, the new students went off to their first lesson. The tea cher whose class they joined always have the new students a general test on the first day, to judge how much they knew, to see how clever they were, and so on.

"Does anyone know", "he asked". "why a doctor wears a mask while he or she is doing an operation?"

"Oh, yes", Hesith answered eagerly, " because then if the operation isn't successful. the patient won't know whose fault it was."

## போர்க்குற்ற விசாரணையின் போது

# வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கவே மாட்டோம்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் அமைக்கப்படவுள்ள உள்நாட்டு பொறிமுறைக்குள் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது என்ற தீர்மானத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எடுத்துள்ளது.**

இந்த விடயம் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளக்கூடியதாக இருக்க மாட்டாது என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வார இறுதியில் கூடிய சங்கத்தின் உறுப்பினர்கள், நாட்டின் அரசியலமைப்பு, பங்காளர்களின் நம்பிக்கை என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த விடயத்தில் முடிவெடுக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இது நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கையாக இருக்காது என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் ஜெனிவா இணக்கம், உதாலகம அறிக்கை, பரணகம அறிக்கை என்பவற்றின் அடிப்படையில் நல்லிணக்கம் தொடர்பில் இன்னும் பரந்துபட்ட நடவடிக்கைகள் தேவை என்பது உணரப்படுகிறது.

இதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளை துரிதமாக விசாரணை செய்ய ஜனாதிபதியினால் முன்னாள் நீதிபதி ஜராங்கனி பெரேரா நியமிக்கப்பட்டமையை சட்டத்தரணிகள் சங்கம் ஆட்சேபித்துள்ளது.

நடைமுறையில் திறமையான நீதிபதிகள் சேவையில் உள்ள போது முன்னாள் நீதிபதியின் அவசியம் இல்லை என்றும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. (இ-7-0)

# வடக்கில் தனியார் மருத்துவக் கல்லூரி முதலீடுகளை வரவேற்கிறது அரசாங்கம்



வடக்கில் தனியார் மருத்துவ கல்லூரியை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது என பாராளுமன்ற பிரதம கொறடாவும் உயர் கல்வி அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்கான முதலீடுகள் கிடைக்கும் பட்சத்தில் மேலதிக ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்குமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது தனியார் மருத்துவக் கல்லூரியின் அவசியம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சிவமோகன் உரையாற்றுகையில்,

குறுக்கிட்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மருத்துவ கல்லூரி மாணவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பார்களா? என கேள்வி எழுப்பிய அமைச்சர் கிரியெல்ல, அந்த மாணவர்களுடன் விரிவாக கலந்து பேசி முடிவை தனக்கு அறியத் தருமாறும் கேட்டுக் கொண்டார். (இ-7-10)

# பிரபல வர்த்தகர் மொஹமட் சியாமின் தந்தைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

பிரபல வர்த்தகர் மொஹமட் சியாமின் தந்தைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

சியாம் படுகொலை தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து குணவர்தன உள்ளிட்ட ஆறு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தீர்ப்பின் பின்னர் சியாமின் தந்தை ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நீதிமன்றின் தீர்ப்பினை அவமரியாதை செய்யும் வகையில் சியாமின் தந்தை கருத்து வெளியிட்டுள்ளதாகவும் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சியாமின் தந்தை வாஸ் குணவர்தன இந்த கொலையுடன் தொடர்புபடவில்லை என தெரிவித்திருந்தார்.

முஹமட் பவுஸ்டீன் மற்றும் கிருசாந்த கோரலகே ஆகியோருக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும், இந்த இருவரும் அரச தரப்பு சாட்சியாளர்களாக மாறி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டமை அநீதியானது எனவும் தெரிவித்தார்.

எனினும் இந்த கருத்துக்களை வெளியிட்ட மறுநாள் (28 ஆம் திகதி) தவறுதலாக கருத்து வெளியிட்டதாகவும், மன அழுத்தமே இதற்கான காரணம் எனவும், நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் தாம் வெளியிட்ட கருத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாகவும் சியாமின் தந்தை ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, நீதிமன்றின் தீர்ப்பிற்கு சவால் விடுக்கும் வகையிலான கருத்துக்கள் பாரதூரமான நிலைமை எனவும் சியாமின் தந்தைக்கு எதிராக நீதிமன்ற அவதூறு செய்த குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். (இ-7-10)

# வெகுவிரைவில் அரசாங்கத்தை கவிழ்ப்போம்

## திஸ்ஸ விதாரண கூறுகிறார்

வெகுவிரைவில் தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்போம் என லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணியினால் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கிடையில் முதலாம் முன்னணியினால் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட குறித்த முன்னணியின் ஏற்பாட்டாளரும், மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சந்திர சேன விஜேசிங்க,வரவு செலவு திட்டத்தில் வெட்டப்பட்ட உரமானியங்கள் மீளவும் கிடைக்க வேண்டும என தெரிவித்தார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## இடம் எதுவானாலும்...

ஒரு அலுவலகத்தில் இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள். என்ன இது? நேற்று வரைக்கும் இவர் எங்களோடு சகஜமாகக் கதைத்துக்கொண்டிருந்தார். இன்றைய தினம் எங்களைப் பார்த்துவிட்டு பார்க்காதவாறு ஒரு மாதிரியாகப் போகிறார் என்று ஒருவர் கூறினார்.

ஒன்றுமில்லை... அவருக்கு பதவியுயர்வு கிடைத்து விட்டது. அதனால் எங்களோடு கதைத்தால் அது அவருக்கு கௌரவக் குறைவு என்று நினைக்கிறார் போலும். அதுதான் அப்படியாகப் போகிறார் என்று மற்றவர் சொன்னார்.

சராசரி மனிதர்கள் இப்படியான சபலங்களுக்கு உள்ளாவது சகஜம்.

இதுமுதொடர்பாக இஸ்ரேல் தேசத்து கதை ஒன்று உள்ளது.

அது ஒரு விசித்திரமான கதை. அதைப் பார்ப்போம்.

ஒரு காலத்திலே இந்த நாட்டிலே அரசனைத் தேர்ந்தெடுப்பது தெய்வத்தோட செயலாக அமைந்திருந்தது.

இங்கே ஒரு விசித்திரமான பறவை ஒன்று உள்ளது. அதற்கு சந்தோசப் பறவை என்று பெயர்.

ஆட்சியிலே இருக்கும் ராஜா இறந்து போனால் உடனே அந்தப் பறவை வானவெளியில் பறந்து வரும். அது அப்படி பறந்து வந்து யார் தலையிலே முதலிலே அமர்கிறதோ அவர்தான் அந்த நாட்டிற்கு ராஜா. இது அங்கு அமைந்துள்ள வழமையான செயலாகும்.

ஒரு சமயம் ராஜா இறந்து போனார். உடனே எல்லோரும் ஆகாயத்தைப் பார்த்தனர். அந்த சந்தோசப் பறவை வான் வெளியில் பறந்து வந்தது. யார் தலையில் அமரப் போகிறதோ என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பறவை நேராகப் பறந்து வந்து ஒரு அடிமையின் தலையிலே அமர்ந்து கொண்டது. அந்த அடிமை தோளிலே மத்தளம்... இடுப்பிலே ஆட்டுத்தோல்... தலையிலே இறகுகள் வைத்த தொப்பி இவ்வாறுஅவனதுதோற்றம் அமைந்தது.

யாராக இருந்தால் என்ன? சந்தோசப்பறவை அமர்ந்தால் அமர்ந்தது தான். அந்த அடிமையை உடனே மக்கள் அந்த நாட்டு ராஜாவாக ஏற்றுக் கொண்டார்கள்.

அவரை அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டு போய் அரியணையிலே அமர வைத்தார்கள். அந்த அடிமை ராஜா அரண்மனைக்கு அருகில் ஒரு குடிசை கட்டச் சொன்னார். அந்தக் குடிசைக்குள்ளே தன்னிடம் இருந்த மத்தளம், ஆட்டுத்தோல் உடை, தொப்பி அனைத்தையும் கவனமாக வைத்தார். அதற்குப் பக்கத்தில் ஒரு பெரிய நிலைக்கண்ணாடியையும் வைத்தார்.

இவரது செயலைக் கண்ட அமைச்சர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்.

இருந்தாலும் தேசத்திற்கு ராஜாவாக இருக்கின்றவர் இவ்வாறு செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

அதனால் ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ராஜாவிடம் போனார்கள்.

அரசே! நீங்கள் தனியாக இருக்கும் போது உங்களுடைய ராஜ கௌரவத்தை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள்.

அதற்கு அரசன் சொன்னான் அரசனாவதற்கு முதல் நான் அடிமையாகத்தான் இருந்தேன். இப்பொழுதும் அதை நான் அடிக்கடி நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்போது தான் எனது மனதிலேயும் அகங்காரம் ஏற்படாது என்றார்.

இதுதான் இஸ்ரேல் தேசத்துக் கதையாகும்.

அதனாலே... நம்முடைய நாற்காலிகள் மாறலாம்.

அதற்காக நமது பண்புகள் மாறிவிடக் கூடாது. மனிதர்களிடையே இருக்கவேண்டிய மரியாதை குறைந்து விடக்கூடாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

67

## ஏலத்துக்கு வந்த ஸ்டூடியோவை 86 ஆயிரத்துக்கு வாங்கினார் வாசன்

...அங்குதான் முன்பு ஜெமினி ஸ்டுடியோ இருந்தது. அதற்குமுன், டைரக்டர் கே.சுப்பிரமணியம், வேறு சிலருடன் கூட்டாக சேர்ந்து நடத்திய மோஷன் பிக்சர்ஸ் புரொடியூசர்ஸ் கம்பைன்ஸ் என்ற ஸ்டுடியோ நடந்துவந்தது.

ஸ்டுடியோவின் பங்குதாரரர்கள் இடையே தகராறு ஏற்பட்டதால் கோர்ட்டு உத்தரவுப்படி சுப்பிரமணியத்தின் ஸ்டுடியோ ஏலத்துக்கு வந்தது.

டெண்டர் மூலம் ஏலத்தொகை கோரப்பட்டது. சுவர்களைப் பிரித்துப் பார்த்தபோது வாசன்தான் அதிக தொகையை (86 ஆயிரத்து 423 ரூபாய், 11 அணா, 9 காசு) குறிப்பிட்டிருந்தார். ஸ்டுடியோ, வாசன் கைக்கு வந்தது.

ஸ்டுடியோவுக்கு ஜெமினி என்ற பெயர் சூட்டப்பட்டது.

1940 முதல் ஜெமினி ஸ்டுடியோ செயற்படத் தொடங்கியது.

**மதனகாமராஜன்**

முதலில் படத்தயாரிப்பில் இறங்காமல் ஸ்டுடியோவை வாடகைக்கு விடவே வாசன் எண்ணினார்.

ஆனால் ஜெமினி ஸ்டுடியோவில் அமிர்தம் டாக்கீஸ் என்ற வேறொரு கம்பெனி தயாரிக்கத் தொடங்கிய மதன காமராஜன் படத்தை ஜெமினியே தயாரிக்க நேர்ந்தது.

ஜெமினியின் முதல் படமான மதனகாமராஜனில் பட்டதாரி இளைஞரும் பாடகருமான வி.வி.சடகோபன் கதாநாயகனாகவும் கே.எல்.வி.வசந்தா கதாநாயகியாகவும் நடித்தனர்.

படத்தை பி.என்.ராவ் டைரக்ட் செய்தார். கதை-வசனத்தை பிரபல எழுத்தாளர் பி.எஸ்.ராமையா எழுதினார்.



பாடல்கள்: பாபநாசம் சிவன். இசை: எம்.டி.பார்த்தசாரதி, எஸ்.ராஜேஸ்வரராவ்.

மதனகாமராஜன் விறுவிறுப்பான கதை. தந்திரக் காட்சிகள் நிறைந்தது. விக்ரமாதித்தனாக சடகோபனும் மந்திரி பட்டியாக என்.கிருஷ்ணமூர்த்தியும் நன்றாக நடித்தனர். அக்கால நடிகைகளில் அழகாக இருந்த கே.எல்.வி.வசந்தாவும் ரசிகர்களைக் கவர்ந்தார்.

கொத்தமங்கலம் சுப்பு. டி.எஸ்.துரைராஜ் ஆகியோர் நகைச்சுவை வேடங்களில் நடித்தனர்.

எம்.வி.ராஜம்மா, கே.ஆர்.செல்லம், எம்.எஸ்.சுந்தரிபாய் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

1941 நவம்பர் மாதம் வெளியான மதனகாமராஜன், சூப்பர் ஹிட் படமாக அமைந்தது.

**பாலநாகம்மா**

பிறகு பாலநாகம்மா என்ற படத்தை தெலுங்கில் தயாரித்தார், வாசன்.

பாலநாகம்மாவையும் ஒரு பயங்கர மந்திரவாதியையும் சுற்றிச் சுழலும் கதை.

படம் மகத்தான வெற்றி பெற்றது.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 336

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...**சா**லையோர நடைபாதைகளில் ஒருவன் ஒரு கூண்டுக்குள் கிளியை வைத்திருப்பான்.

அந்த வழியாகச் செல்லும் மக்கள் அவனிடம் நின்று கொஞ்சம் பணம் கொடுத்து அவர்களது எதிர்காலத்தைப் பற்றி விசுவாசத்துடன் கேட்பார்கள்.

அவன் கூண்டைத் திறந்து அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் சீட்டுக்கட்டில் இருந்து ஒரு சீட்டை எடுத்துத் தரும்படி கிளிக்குக் கட்டளையிடுவான்.

கிளி கூண்டிலிருந்து வெளியே வந்து அதன் அலகால் ஒரு சீட்டை எடுத்து அவனிடம் கொடுக்கும். அவன் அதில் எழுதப்பட்டிருப்பதைப் படிப்பான். அதுதான் கேட்பவருடைய எதிர்காலத்தைப் பற்றிய கணிப்பு!

ஆறறிவுள்ள ஒரு மனிதன் நாலறிவுள்ள ஒரு கிளியிடம் தனது எதிர்காலத்தைப் பற்றி முன்கூட்டியே சொல்லும்படி கேட்கிறான்! இது எவ்வாறு சாத்தியம்?

நான் சொல்கிறேன், இதுபோன்ற முட்டாள்தனங்களையெல்லாம் விட்டுவிட்டு இசைவுடன் இருக்கத் தொடங்குங்கள்.

மைய இழையான நன்றியுணர்வை பிடித்துக் கொண்டு பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து செல்லுங்கள்.

நீங்கள் குருமார்களை கவனித்தீர்களானால் அவர்கள் மிகவும் கருணை



மயமாகவும் அற்புதமாகவும் தெய்வீகத் தன்மையுடனும் தோன்றுவார்கள்.

இதற்குக் காரணம் அவர்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து செல்வதே.

ஆனால் நீங்கள் அவர்களது நிலையைப் புரிந்துகொள்ளாமல் அந்தஸ்தை மட்டுமே பார்க்கிறீர்கள்.

நீங்கள் அவர்களது நிலையைப் புரிந்துகொண்டீர்களானால் அவர்கள் வெறுமனே பிரபஞ்ச இருப்புத் தன்மையில் கலந்துவிட்டதால்தான் எப்பொழுதும் இவ்வளவு ஆனந்தமயமாக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

இந்த நிலையை அடையத்தான் நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ஓ! அவர் ஒரு குரு: அவர் எப்பொழுதும் ஆனந்தத்தில் இருக்கிறார்.

அவருக்கு எப்படி என்னுடைய பிரச்சி னைகளைப் பற்றித் தெரியும்? நான் இங்கு ரொட்டிக்கும் வெண்ணைய்க்குமே போராடிக்கொண்டு இருக்கிறேன்; அவரோ எப்பொழுதும் நன்றியுணர்வுடன் இருக்கச் சொல்கிறார்?

நான் சொல்கிறேன்... நீங்கள் குருவின் காலடியில் இருக்கும் ரோஜா இதழ்களை மட்டும்தான் பார்க்கிறீர்கள்.

நீங்கள் அவருடைய அந்தஸ்தை மட்டுமே பார்த்து அவருக்கு உங்களுடைய தினசரி விடயங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்று எண்ணுகிறீர்கள்.

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்... நீங்கள் அவருக்குக் கொடுக்கும் மரியாதை அவரது நிலைக்காக; அந்தஸ்துக்காக அல்ல.

அந்த நிலையை அடைவதற்கு அவர் எவ்வளவு போராடியிருக்கிறார் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானும் பணிகளும் ஒரு நோக்கு

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது குருபூஜை இன்றாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

நல்லை நகர் நாவலர் அவர்களை புலமையாளர்களும் புத்திஜீவிகளும் கற்றோரும் மற்றோரும் ஐந்தாம் குரவரெனப் போற்றுவர். இதனால் மக்களெல்லோரும் நாவலர் பெருமான் என அழைக்கலாயினர். இருள் நிறைந்த காலப்பகுதியில் பிறந்தமையால் அவதார புருஷனாக எல்லோராலும் போற்றப்பட்டார்.சிறு வயது முதல் சைவ சமயததில் நிறைந்த பற்றுடன் பரிபூரண நம்பிக்கையுடையவராக மிளிர்ந்தார். சமய எழுச்சியை முன்னெடுத்த உத்தமர். காலத்தால் ஆவணப்படுத்தப்பட்ட மறைக்க முடியாத மறுக்க முடியாத அரும் பெரும் தொண்டாற்றிய மகானாவார். தமிழ், சைவம் இரண்டையும் இரு கண்கள் எனப் போற்றிய உத்தம ஒழுக்கசீலர்.

நாவலர் பெருமானது தொண்டுகளை பல வகையில் நோக்கலாம். எழுததாளர்கள், பிரசுரகர்த்தா தமிழ் சைவ நூல்களை வெளியிட்டார். முதன் முதலில் அச்சு இயந் திரத்தை யாழ்.மண்ணிற்கு கொண்டு வந்து சமய,தமிழ் எழுச்சியை ஏற்படுத்திய பெருமகனாவார்.

சைவப் பாரம்பரிய மரபைப் பேணிப் பாதுகாத்த பெருந்தகையாளர். கற்றோரும் மற்றோரும் இலகுவில் புரியக் கூடிய மாதிரி புராணங்களை வசன நடையில் தந்த வல்லாளர். எனவே வசன நடை கைவந்த வல்லாளர்-வள்ளலார் எனவும் போற்றப்பட்டார். கற்றோருக்கும் கல்லாத பாமர மக்களுக்கும் இலகுவில் புரியக் கூடிய பொருள் தெளிவாக விளங்கியறியக் கூடிய நடையாக இருந்ததெனப் போற்றினார்கள். அவர்களால் எழுதப்பட்ட வசன நூற் புராணங்கள், திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், பெரிய புராண சூசனம முதலியவையாகும்.

சிவபெருமானை முழுமுதற் பொருளாக விரித்துக் கொண்டவர். அவர் எழுதிய முதலாம் சைவ வினாவிடையில் உலகுக்கு கர்த்தா யார் என்ற கேள்விக்கு 'சிவபெருமானே' என்று தான் தொடங்கியுள்ளார்.

நூற் பதிப்புக்களில் உள்ளதை உள்ள படியே பதித்த பெருமை அவர்களுக்குண்டு. பெருந்தேவரின் பாரதத்தை பதிப்பிக்கும் போது சிலர் கிருஷ்ணர் சிவபூசை செய்ததை மறைத்தனர். உபமன்யு முனிவரிடம் கிருஷ்ணர் சிவ தீட்சை பெற்று சிவபூசை செய்த பகுதியை ஒழிக்க முற்பட்டனர். இது போன்ற சில செயல்கள் நடைபெறாது பாரதத்தை உள்ளதை உள்ளபடியே பதிப்பித்த பெருமையுடையவர். தமிழுக்குரிய எண் இலக்கங்களை தெளிவுபடத் தெரிவித்த விற்பன்னர். முன்பு இருந்த இலக்கங்கள் அதன் நடைமுறையிலிருந்தவற்றையும் ஒப்பு நோக்கிப் பதிப்பித்துத் தந்து எழுசசியை ஏற்படுத்திய அறிஞர். எண் பெறுமானங்களைத் தந்தவரும் அவரே.

ஆரம்பக் கல்வி 1827-1830 நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாரிடம் தமிழையும் நீதி நூல்களையும் கற்றுத் தெளிந்தார். 1831-1834 தனது ஒன்பதாம் அகவையில் தந்தையாரை இழந்தார்,

1834-1841 ஆங்கிலக் கல்வியைக் கற்றார். 12 ஆம் அகவையில் ஆங்கிலக் கல்வி கற்கத் தொடங்கினார். இந்நாளில் யா/மத்திய கல்லூரி என அழைக்கப்படும் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியை ஐயம்



திரபறக் கற்றுக் கொண்டார். 22 ஆம பராயத்தில் முன்மொழியிலும் பாண டித்தியம் பெற்றுக்கொண்டார் அதாவது தமழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என்பனவாகும். பேர்சிவல் பாதிரியர் இவரது நுண்மான் நுழை புலப் புலமையினை நன்கறிந்து தமக்கு தமிழ் பண்டிதராக்கிக் கொண்டார்.

1846 இல் தனது இல்லத்தில் ஊர் பிள்ளைகளுக்கு கருவி நூல்களையும் சமய நூல்களையும் இலவசமாகக் கற்பித்தார்.

1846 இல் முதன் முதல் இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். இதன்போது (பைபிளை) வேதாகமத்தை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டமை பேர்சிவல் பாதிரியாரின் தலைமைத் தமிழ் பண்டிதராக இருந்தாலும் சைவசமய சின்னாங்களை அணிந்தே போனார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1847 இல் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் சிவன் கோவிலில் முதற் பிரசங்கத்தைச் செய்தார் 31.12. 1847 இல் சைவ சமய விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களை மதம மாறாது தடுத்து நிறுத்தியமை. 1848 இல் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். 1849 இல் இரணடாவது இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். அச்சு இயந்திரத்தை வாங்கிக் கொண்டார். இவ்வாண்டு மிக முக்கியமானதாகும். திருவாவடுதுறை ஆதீன பண்டார சந்நிதானம் அவர்கள், நாவலர என்ற சிறப்புப் பட்டத்தை கொடுத்து கௌரவித்தார்கள்.

சைவப் பாடசாலைப் பிள்ளைகளுக்குரிய பாடநூல்களையும் எழுதியும் ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்தும் அச்சு ஏற்றியும் சூடாமணி நிகண்டு உரையை செய்தும் சௌந்தரிய லகரி உரை முதலானவற்றையும் அச்சேற்றினார். 1850 இல் சைவப்பிரகாச வித் தியாசாலைக்கு நிரந்தர கட்டடம் அமைத்துக் கொணடார். 1850 இல் நல்லூரில் தனது இல்லத்தில் வித்தியா நூபாலன யந்திர சாலையை நிறுவினார்.

இல்லறத்தை விரும்பாத நாவலர் பெருமான் சிவபூசையில் நாட்டம் கொண்டார். தமது வாழ்வை சமய, கல்விப் பணியுடன் சிவபூசை ஜெபம், தியானம் இவற்றில் ஈடுபட்டார். தாம் உடையவர் பூசையை யும் எழுந்தருளப் பண்ணி சிவபூஜா துரந்தரர் ஆகியுள்ளார். 1557 இல் அன்னையார் சிவாகமசுந்தரி சிவ பதமடைந்தார். 1858 இல் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு வர்த்தக சாலை வாங்கினார்.பெற்றோர் கொடுத்து வந்த பிடியரிசியைப் பணமாக்கி தாம் நடத்தி வந்த பாடசாலையை நிலைக்கச் செய்ய வர்த்தகக் கட்டடம் வாங்கினார். இதன் மூலம் வருமானத்தைப் பெருக்கி ஆசிரியர்களுககு நிரந்தர வேதனம் வழங்கினார்

1864 இல் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவப்பட்டது. சிவாகமத்தையும் சிவதீட்சையையும் நிந்தித்தவர்களை கண்டித்தார். பிற்காலத்தில் கண்டனப் பிரசங்கமாமுனி என மக்கள் போற்றினர். 1866 இல் சேக்கிழார் பெருமானுக்குக் கோவில் அமைகக காணியைக் கொள்வனவு செய்தார்.

1868-1869 காலப் பகுதியில் பல புதிய நூல்களுக்கு உரையெழுதினார். உமாபதிச் சிவாச்சாரியார் இயறறிய அநேக நூல்களை 2ஆம் 3ஆம் 4ஆம் பதிப்பாக பதிப்பித்தார்.

மறைஞான சம்பந்த சிவாச்சாரியார் எழுதிய சைவசமய நெறிக்கு புததுரை எழுதிப் பதிப்பித்தார். தொல்காப்பியம் சேனாவரையுரையைப் பரிசோதித்து வெளியிட்ட பெருமையுடையவர். 1872 இல் வண்ணார் பண்ணையில் சைவாங்கில வித்தியாசாலையை ஸ்தாபித்தார். இந்நாளில் யாழ்.இந்துக் கல்லூரி சிறப்புடன் ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டுள்ளது. ஊர்கள் தோறும் சைவத் தமிழ் பாடசாலைகளை உருவாக்கினார். 1872 யாழ்ப்பாண சமய நிலையில் எழுச்சியை ஏற்படுத்தினார். திருக்கேதீஸ்வரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். 40 ஏக்கர் நிலத்தை அரசிடமிருந்து மீளப்பெற முனைந்தார். 1879 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ராம-அரு-பழநியப்பா செட்டியார் அவர்கள்மூலம் இலங்கைச் சைவர்கள் சார்பாக நிலத்தை ஏலத்தில் வாங்கினார்.

சைவத் தமிழ் மக்களுக்கு நாவலர் பெருமான் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தார். அவரது குருபூசைத் தினத்தில் அவரது பணிகளையும் அவரால் மேற்கொள்ளப்பட்ட அறநெறிகளையும் போற்றிக் கடைப்பிடிப்பது சைவத் தமிழ் மக்களின் கடப்பாடாகும். நாமும் அவ்வழி நின்று சைவத் தையும் தமிழையும் போற்றிப் பாதுகாப்போமாக. வளர்ப்போமாக.

வாழ்க வளர்க்க சைவமும் தமிழும்

**கலாபூஷணம்**
**நாகரத்தினம்**
**கணேசலிங்கநாதன்**
**சித்த மருத்துவர்**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 561

**வினு**




**தீபன் வினு**



**தர்மனன்**




**சிவமகன்**

ஹலோ... இது டாக்டர் உங்களுடன்
நிகழ்ச்சி.. நீங்க யார் பேசுறது சார்..?
மேடம் நான் கொட்டாம்பட்டியிலிருந்து
கோவிந்தசாமி பேசுறன்
சொல்லுங்க சார் உங்களுக்கு என்ன பிரச்சினை?
மூன்று நாளா ஒரே வயிற்றுவலி மேடம்
அப்படியா!.. கொஞ்சம் உங்க டிவி
வாலிமை கம்மி பண்ணுங்க சார்...
டிவி வாலிமை கம்மி பண்ணா வயிற்றுவலி
நின்னுருமா மேடம்
நிகழ்ச்சி தொகுப்பாளர்?????

**நதீபன்**




**சிவா சுஜி**



**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.**
**அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# சுகாதார சீர்கேட்டைத் தடுக்க யாழில் திடீர் சோதனைகள்

யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்களில் சுகாதார சீர்கேட்டினை தடுப்பதற்கு திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்களில் அண்மைக்காலமாக பெரும் சுகாதார சீரழிவுகளும் பொதி செய்யப்படும் உணவிற்குள் கம்பிகள், பூச்சிகள் என பல ஆபத்தான சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் நேற்றைய தினம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணவகங்களில் இவ்வாறான சீர்கேடுகள் காணப்படுவதாக பத்திரிகைகள் மூலம் நான் அறிந்துக் கொண்டேன். எனினும் எழுத்து மூலமான முறைப்பாடுகள் எவையும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. கிடைக்கப்பெற்றால் நடவடிக்கை எடுப்போம்.

எனினும் இவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

குறிப்பாக உணவகங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் தனது உணவகங்களில் உணவுண்ண வருபவர்களிற்கு சுத்தமான சுகாதாரமான உணவினை வழங்க வேண்டிய பொறுப்பு உணவக உரிமையாளர்களுக்கு உண்டு என்றார் அவர்.

யாழ். நகரப் பகுதிகளில் உள்ள உணவகங்களிலேயே இவ்வாறான சுகாதார சீர்கேடுகள் அதிகளவில் நடைபெறுகின்றது. இதனை கட்டுப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்க முடியாதா? என அவரிடம் கேட்டபோது, அது யாழ். மாநகர சபையின் பிரிவிற்கு வருவதனால் யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்களே அவற்றை மேற்கொள்ள முடியும். எனினும் இருதரப்பும் கலந்து பேசி மேற்கொண்டு நடவடிக்கையெடுக்க ஆராய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 30.11.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.01 | 145.34 |
| பவுண்ட் | பிரிட்டன் | 210.97 | 219.12 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 148.11 | 154.57 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 135.75 | 141.91 |
| டொலர் | கனடா | 104.58 | 109.25 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.27 | 105.28 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.19 | 103.33 |
| ரூபா | இந்தியா | 2.1401 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.0419 |
| குவைத் | டினார் | 469.8560 |
| ஓமான் | ரியால் | 371.9576 |
| கட்டார் | ரியால் | 39.3324 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.1601 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.9913 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 170 | 150 | 160 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 100 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 600 | 800 | 700 | 700 |
| தக்காளி | 180 | 140 | 130 | 160 | 180 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 15 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 160 | 140 | 160 | 200 | 180 |
| கரட் | 200 | 120 | 140 | 160-300 | 280 | 170 |
| பூசணி | 60 | 40 | 35 | 60 | 60 | 40 |
| புடோல் | 150 | 140 | 100 | 140 | 160 | 140 |
| வாழைக்காய் | 80 | 50 | 45 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 120 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 110 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 350 | 300 | 250 | 300 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 100 | 120 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 240 | 200 | 250 |
| லீக்ஸ் | 150 | 200 | 140 | 120-160 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | — | — | — | 160 | 80 |
| கறிமிளகாய் | 400 | 250 | — | 600 | 300 | 500 |
| முருங்கைக்காய் | 350 | — | 200 | 500 | 320 | — |
| போஞ்சி | 300 | 280 | — | 280 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 130 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 40 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 250 | 250-350 | 150 | 300 | 160 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 30-45 | 50 | 30-45 | 50 |
| இராசவள்ளி | 300 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | 150 | — | — | — |
| முள்ளங்கி | 120 | — | — | 100 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | — | — | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | — | — | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | — | 40 | 50 | 80-120 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 'இலங்கையின் காந்தி' செல்வநாயகம் மரணம் 41

...அத்துடன் ஒரு ஹெலிகப்டர் விமானத்தில் நரம்பியல் வைத்தியர்கள் இருவரைக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி செல்வநாயகத்திற்குச் சிறந்த சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார்.

விசேஷ மருந்துகளைச் சிங்கப்பூரில் இருந்தும் லண்டனிலிருந்தும் தருவிக்கச் செய்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயவர்த்தனா, மலையகத் தமிழர்களின் தலைவர் தொண்டமான் மற்றும் பல எம்.பிக்கள் செல்வநாயகத்தைப் போய்ப்பார்த்தனர்.

செல்வநாயகம் தலையில் அடிபட்டு இருந்ததால் ரத்தக் கசிவு ஏற்பட்டு கட்டியாக மாறி இருந்தது.

அதை அகற்ற அறுவை சிகிச்சை நடந்தது. அதன்பின் செல்வநாயகம் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக டாக்டர்கள் கூறினர்.

### மரணம்

எனினும் பிறகு அவர் உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டது. 34 நாட்கள் மரணத்துடன் போராடிய செல்வநாயகம், ஏப்ரல் 26 ஆம் திகதி நினைவு திரும்பாமலேயே மரணம் அடைந்தார்.

செல்வநாயகத்தின் மறைவுச்செய்தி இலங்கைத் தமிழர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

தமிழகத்திலும் மற்றும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களும் செல்வநாயகத்தின் மறைவு செய்தி கேட்டுத் துயரம் அடைந்தார்.

### புகழாரம்

செல்வநாயகம் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு. அவர் தமிழ் பேசும் நல்லுலகின் வழிகாட்டி. ஈழம் வாழ் தமிழர்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கான வழி வகுத்திட்ட மாபெரும் தலைவர் என்று கலைஞர் கருணாநிதி புகழ் அஞ்சலி செலுத்தினார்.

உலகத்தில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் அனைவருக்குமாகப் போராடிய மேதை என்று எம்.ஜி.ஆர். தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டார்.



தமிழ் ஈழத்தை காட்டும் படம்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்த அனுதாப செய்தியில் செல்வநாயகம் எப்பொழுதும் நியாயமாக நடந்துகொள்பவர்.

மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பவர். அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கண்டன தீர்மானங்களைத் தயாரிக்கும் போது கடினமான வார்த்தைகளை உபயோகித்தால் அவற்றை நீக்கிவிடுமாறு கூறிவிடுவார் என்று குறிப்பிட்டிருந்தார்.

### பிரதமர் மரியாதை

செல்வநாயகத்தின் உடல் அவர் அமைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு பொதுமக்கள் இறுதி மரியாதை செலுத்துவதற்காக வைக்கப்பட்டது.

கட்சித் தொண்டர்களும் பொது மக்களும் நீண்ட வரிசையில் நின்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தனி விமானம் மூலம் யாழ்ப்பாணம் சென்று செல்வநாயகம் உடல்மீது மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். மற்றும் இலங்கை பாராளுமன்ற சபாநாயகர் ஸ்டான்லி திலக ரத்னா அமைச்சர்கள் மைத்திரி பாலசேன நாயக்கா, பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இலங்கரத்னா செல்லையா குமாரசூரியர் உட்பட பல பிரமுகர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

பின்னர் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. லட்சக்கணக்கானவர்கள் ஊர்வலத்தில் சென்றனர்.

தமிழகத்தில் இருந்து இரா.நெடுஞ்செழியன், நாஞ்சில் மனோகரன், இராசனார்த்தனம் ஆகியோர் யாழ்ப்பாணம் சென்று இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

### பிரபாகரன்

தெல்லிப்பளை என்ற இடத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் பிரார்த்தனைகள் நடந்தன. அதன்பின் செல்வநாயகத்தின் உடலை பிரபாகரன், உமா மகேஸ்வரன், சிறிசபாரத்தினம், ஈழவேந்தன், சித்தார்த்தன், கோவை மகேசன் உள்ளிட்ட பலர் சுமந்து வந்து 15 அடி உயர வெள்ளி ரதத்தில் ஏற்றினார்.

மக்கள் வெள்ளத்தில் இந்த வெள்ளி ரதம் ஊர்ந்து சென்றது.


சென்னையில் ஈ.வெ.ரா.பெரியாரைச் செல்வநாயகம் சந்தித்தபோது எடுத்த படம். உடன் அமிர்தலிங்கம் அவர் மனைவி மங்கையர்க்கரசி.

(தொடரும்)

# மனித நீர்ப்பீடணகுறைகிருமி தொற்றலும் பெற்ற நீர்ப்பீடணக்குறை பிணி நிலையும்

மனித நீர்ப்பீடண குறைகிருமி (HIV) வைரஸ் ஒருவரின் உடலினுள் சென்றதும் அவர் மனிதநீர்ப்பீடண குறைகிருமி (HIV) தொற்றுக்குள்ளாக்கி விட்டார். இந்த மனிதநீர்ப்பீடண குறைகிருமி மனிதர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை வலுவற்றதாக்கி ஏனைய நோய்க்கிருமிகளின் தாக்கத்தை அதிகரிக்கும். மனிதநீர்ப்பீடண குறைகிருமி தொற்று ஏற்பட்டதிலிருந்து 8-10 வருடங்கள் சென்ற பின்னரே நோய் அறிகுறிகள் தென்படும். நோய் எதிர்ப்பாற்றல் மிகவும் குறைவடையும்போது ஏனைய நோய்களுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கும் நிலையானது பெற்ற நீர்ப்பீடணக் குறைபிணி (AIDS) என்று அழைக்கப்படும். மனித நீர்ப்பீடண குறைகிருமி தொற்றுதலானது மனித நீர்ப்பீடண குறைகிருமி தொற்றிய ஒருவரிடமிருந்தும் பெற்ற நீர்ப்பீடணக் குறை பிணி நிலையிலுள்ள ஒரு வரிடமிருந்தும் தொற்றிக் கொள்ளலாம்.

மனித நீர்ப்பீடண குறை கிருமி தொற்றுதலுக்குள்ளான ஒருவருடன் பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு (குதவழி, யோனிவழி மற்றும் வாய் வழி) மனித நீர்ப்பீடண குறை கிருமி தொற்றேற்பட்ட குருதி அல்லது குருதியின் பகுதி உடம்பினுள் செலுத்தப்படல். மனித நீர்ப்பீடண குறை கிருமி தொற்றுக்குள்ளான தாயிலிருந்து குழந்தைக்கு,

கர்ப்ப காலத்தின் போதும்

பிரசவத்தின் போதும்

தாய்ப் பால் ஊட்டலின் போதும் தொற்றுதல் ஏற்படலாம்.

பாலுறவு கொள்வதை (திருமணம் செய்யும் வரை அல்லது தற்காலிகமாக பிரிந்திருக்கும் காலங்களில்) தவிர்த்திருத்தல். நம்பிக்கையான வாழ்க்கைத் துணை ஒருவருடன் மாத்திரம் பாலுறவில் ஈடுபடல். நம்பிக்கையான வாழ்க்கைத் துணையற்ற வேறு ஒருவருடன் பாலுறவில் ஈடுபடும் போது எப்போதும் சரியான முறையில் ஆணுறையை உபயோகித்தல். தொற்றுடையவர்கள் சிகிச்சைக்கு உட்படுவதனால் பரவுவதைத் தடுக்கலாம்.

தொற்று நீக்காமல் உபயோகித்த ஊசிகளை மற்றும் சுவராயுதங்களை பாவிப்பதைத் தடுத்தல். இயலுமானவரை குருதி ஏற்றுவதை தடுத்தல். நீங்கள் பாதுகாப்பற்ற பாலுறவில் ஈடுபட்டிருந்தால் குருதி தானம் செய்யாது தவிர்த்துக் கொள்ளலாம். குருதி தானம் செய்ய முன்பு மனித நீர்ப்பீடண குறை கிருமி தொற்றுண்டா என்பதை உறுதிப்படுத்தல்.

குழந்தைப்பேறு வயதிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் மனித நீர்ப்பீடணகுறை கிருமி பரவுவதை தடுத்தல். குழந்தைப் பேற்றை திட்டமிட முதல் பாதுகாப்பற்ற பாலுறவில் ஈடுபட்டவர்களை மனிதநீர்ப்பீடண குறை கிருமி பரிசோதனைக் குட்படுத்தல். மனிதநீர்ப்பீடண குற்ற கிருமி தொற்றுக்குள்ளான பெண்களில் தேவையில்லாத கர்ப்பங்களைத் தடுத்தல். மனிதநீர்ப்பீடண குறை கிருமிதொற்றுக்குள்ளான கர்ப்பிணிப் பெண்கள் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாடல். அவ்வாறு ஆலோசனை பெறுவதுடன் வழங்கப்படும் மனித நீர்ப்பீடண குறை கிருமி எதிர் மருந்துகளை ஒழுங்காக பாவிப்பதன் மூலம் குழந்தைக்கு மனிதநீர்ப்பீடண குறை கிருமி தொற்றுவதை தடுக்க முடியும். வாலிப பருவத்தில் பல்வேறு உணர்வுகள் எங்கள் உள்ளத்தில் தோன்றலாம். இந்த உணர்வுகள் இன்பமானவையாகவோ அல்லது துன்பம் தரும் ஒன்றாகவோ இருக்கலாம். எனினும் மனதில் ஏற்படும் எண்ணங்கள் எல்லாவற்றையும் அப்படியே செயற்படுத்த முடியாது. எமது பொறுப் புக்கள் வரம்பெல்லைகள் என்பவற்றுக்கு அமைவாகவே இவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

எங்கள் உணர்வுகளின் காரணமாக நாங்கள் மேற்கொள்ளும் ஒரு செயல் ஒரு போதும் மற்றவருக்குத் தீங்கு விளைவிப்பதாக அமையக் கூடாது. அவ்வாறே அச்செயல் உங்களுக்கு அவமானத்தையோ அல்லது இருண்ட எதிர் காலத்தையோ ஏற்படுவதாகவும் இருக்க கூடாது.

எங்கள் பொழுது போக்கு என்ன? எங்கள் உள்ளத்தை நாங்களே கேட்க வேண்டும். ஓவியம், இசை, நடனம், விளையாட்டு, இலக்கியம், நாடகம், கணனி பாவனை, வானியல்... போன்ற எங்களுக்குப் பிடித்தமான ஒரு துறையில் ஈடுபடலாம். அதன் மூலம் எங்களுக்கு மனநிறைவு கிடைக்கும். அன்றாடம் நாங்கள் செய்யவேண்டியவேலைகளை நெறிப்படுத்துவதோடு பொழுதுபோக்கிற்கும் ஒரு நேரத்தை ஒதுக்க வேண்டும்

**உலக எயட்ஸ் தடுப்பு தினம் இன்று இதனை முன்னிட்டு இக்கட்டுரை இ;கு பிரசுரமாகின்றது**

மனிதநீர்ப்பீடண குறை கிருமித் தொற்று
பெற்ற நீர்ப்பீடண குறை பிணியின் தொற்று
ஒழுக்கமே இதன் முதல் ஒழுக்கு- எனவே
வழுவாது வாழ்ந்திடுவோம் பாரில்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் - ஆங்கே
கற்பே திண்மை - அதனை
கற்றலே உண்மை - இங்கு
வாய்மையே அகத்தூய்மை -அதனால்
நோயின்மையே புறத்தூய்மை.

தொலை நட்பு தொலைபேசி நட்பு
தொழில் நட்பு தொழில்நுட்ப நட்பு
முக நட்பு முகநூல் நட்பு
கல்லூரி நட்பு யான்றும் கலவி நட்பாகாது.

கைமாறு அல்ல உடல் நட்பிற்கு கேளீர்
கைமாறு அல்ல உடல் பணத்திற்கு கேளீர்
கைமாறு அல்ல உடல் பொருளிற்கு கேளீர்
கைமாறு அல்ல உடல் போகத்திற்கு கேளீர்.

தீயொழுக்கம் இடும்பைத் தரும் - அஃததனால்
பெற்றிடும் நோய் - பெற்ற மனிதநீர்ப்பீடண குறை பிணி
முற்றிலும் தடுத்திடவே விரைந்திடுவீர்
தொற்றினை அறி குருதிப் பரிசோதனைக்கு

மருத்துவ சிகிச்சையினால் பிணியினைக் குறைத்திடலாம்
மருத்துவச் சிகிச்சையினால் தொற்றலைக் குறைத்திடலாம்
மருத்துவச் சிகிச்சையினால் ஆயுளைக் கூட்டிடலாம்
மருத்துவச் சிகிச்சையினால் அச்சத்தை அகற்றிடலாம்.
அற்றகுளப் பறவைபோல் அல்லாது
முற்றத்தில் உதவுவோம் பிணியுற்றோர்க்கு
பெற்ற நீர்ப்பீடணக் குறை பிணியினை
நற்றமிழ் மண்ணில் துரத்திட உழைத்திடுவோம்

பிணியுற்றோருக்கு உண்டு மருந்துகள்
அணிசெய்வோம் அனைவர்க்கும்- சிகிச்சை
துணிவுடனே முன்வருவீர் சிகிச்சைக்கு
பணி செய்யக் காத்திருப்போம் நலத்தொண்டர் நாம்

மருத்துவர்
சி.யமுனாநந்தா

# செய்தித் துளிகள்

## தடைசெய்யப்பட்ட கிருமிநாசினி விற்பனை

கிளைபோஸ்ட் எனும் தடை செய்யப்பட்ட கிருமிநாசினி விற்பனை செய்யப்படுவதாக தெரியவருகிறது.

குறித்த கிருமி நாசினியால் சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதன் காரணமாக அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது.

விவசாயிகள் இயற்கைக்கு சாதகமான கிருமி நாசினிப் பயன்பாட்டையே விரும்புகின்ற போதும் அதற்கு சாதகமான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப் படவில்லை எனவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கிளைபோஸ்ட் கிருமிநாசினி தடைசெய்யப்பட்ட போதும் சந்தையில் ஒரு போத்தல் 3 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக தெரியவருகிறது. (இ-10)

## மருந்தாளர்(வெளிவாரி) பரீட்சை

இலங்கை வைத்திய சபையால் நடத்தப்படும் வெளிவாரி மருந்தாளர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர் வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி நடைபெறும்.

இதில்விண்ணப்பிக்கவிரும்புபவர்கள் இருவருட மருந்தாளர் பயிலுநராக கடமையாற்றியிருப்பது கட்டாயமாகும்.(டிசெம்பர்23 ஆம் திகதி 2015இற்கு முன்)

மேலதிக தகவல்களுக்கு மருந்தியலாளர் கற்கை நெறி இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி,469 ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியை நாடவும். (இ-10)

## தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடம் மூடப்படாது



தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட எந்தவொரு கற்கை நெறிகளும் நிறுத்தப்பட மாட்டாது எனவும், அங்கு நிலவும் குறைபாடுகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

தென்கிழக்கு பல் கலைக் கழகத்தின் பொறியியல் பீடம் சம்பந்தமாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவுடன் நடத்திய பேச்சுவார்த்தையினை தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் மேற்படி விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். (இ-7-10)

## போலிச் சான்றிதழ்கள்

வாகன புகைப்பரிசோதனை சம்பந்தமான போலிச் சான்றிதழ்கள் வழங்கிய 11 பரிசோதனை நிலையங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்கள் பழுதடைந்த தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தியதோடு போலியான சான்றிதழ்களையும் வழங்கியுள்ளன.

இவ்வாறான போலியான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மக்கள் புகார் செய்துள்ளனர்.இதனையடுத்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-10)

## கற்கோவளம் பகுதியில் மோட்டார் செல் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கற்கோவளம் புனித நகர்ப்பகுதியில் இருந்து மோட்டார் செல் ஒன்று மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை பொது மக்களால் பொலிஸ் நிலையத்திற்கு கொடுக்கப்பட்ட தகவலையடுத்தே பொலிஸார் அவ்விடத்திற்குசென்றுகுறித்த செல்லை மீட்டுள்ளனர்.

மிகவும் பாழடைந்த அச்செல்லின் எடை 160 மில்லிமீற்றர் என பருத்தித்துறைப் பொலிஸார் இதன் போது தெரிவித்துள்ளனர்.(இ-5-60)

## மனைவியை தாக்கியவருக்கு சிறை

மனைவியை தாக்கிய கணவனுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத் தண்டனையும் 1000 ரூபா தண்டப் பணமும் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா நேற்றையதினம் தீர்ப்பளித்தார்.பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக 03.08.2015 அன்று குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கான வழக்கு விசாரணை நேற்றையதினம் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது.

தனக்கு தெரியாமல் தனது மனைவி தங்க நகைகளை வங்கியில் அடகு வைத்தார் என்ற காரணத்தினாலேயே மனைவியை தாக்கியுள்ளேன் என அவர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5-60)

## நாவல ஆற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு - நாவல திறந்த பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள ஆற்றில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஆற்றில் மிதந்து கொண்டிருந்த சடலம் தொடர்பாக பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த சடலத்தை நேற்றுக் காலை 7.55 மணியளவில் வெலிக்கடை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இறந்த நபர் யார் என்பது இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வெலிக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

## சாட்சியமளிப்பவர்களை பாதுகாப்பதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு சாட்சியங்களை வழங்கும் தரப்பினை பாதுகாப்பதற்கு விசேட ஏற்பாடுகள்செய்யப்பட டுள்ளன.

சாட்சியாளர்களை பாதுகாக்கும் நோக்கில் விசேட பாதுகாப்பு இல்லங்கள் நிறுவப்பட உள்ளன.

ஊழல் மோசடிகள் தொடரபில் முறைப்பாடு செய்யும் மற்றும் சாட்சியங்களை வழங்கும் நபர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கினால், அவர்களை இந்த விசேட பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

ஆணைக்குழுவிடம்முறைப்பாடு செய்யும் மற்றும் சாட்சியமளிக்கும் நபர்களின் பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

நம்பகமான முறையில் முறைப்பாடுகளையும் சாட்சியங்களையும் பெற்றுக்கொள்ள இந்த பதிய நடைமுறை வழிவகுக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவினால் புதிய இணையத்தளமொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளதாகவும் இந்த இணையத்தளத்தின் ஊடாக முறைப்பாடு செய்ய முடியும் எனவும் ஆணைக்குழு கொழும்பு ஊடகங்களுக்கு அறிவித்துள்ளது. (இ-7-10)



# சிறுவர் அரங்கம்

1297

## புலவரே இல்லை!



முன்னொரு காலத்தில் வைரபுரி நாட்டை இளந் திரையன் என்ற அரசர் மிக சிறப்பாக ஆட்சி செய்து வந்தார்.

ஒருநாள்-

"அமைச்சரே! இன்னும் சில தினங்களில் எனது பிறந்தநாள் விழா வரப் போகிறது. அறிஞர்களுக்கு, என் பிறந்தநாள் விழாவில் பரிசுகள் வழங்க வேண்டும். யார் யாருக்கு வழங்கலாம்?" என்று கேட்டார் அரசர்.

"அரசே! துருபத், கலாதர் இருவருமே பெரும் புலவர்கள். தங்கள் பாடல்களால் நம் நாட்டிற்குப் பெருமை சேர்த்தவர்கள். அறிவிலும், ஆற்றலிலும் ஒருவருக்கு ஒருவர் இணையானவர்கள். அவர்கள் இருவருக்கும் பரிசு வழங்கலாம் என்பது என் கருத்து." என்றார் அமைச்சர்.

இரண்டு புலவர்களுக்கும் அரசர் அழைப்பு அனுப்பினார். இருவரும் மகிழ்ச்சியுடன் அரசவைக்கு வந்தனர். அவர்களைச் சிறப்புடன் வரவேற்றார் அரசர்.

இவர்களின் திறமையையும், சிறப்பையும் அவையில் உள்ளவர்கள் அறிய வேண்டும். அதன் பிறகு இவர்களுக்கு பெரும் பரிசு வழங்க வேண்டும் என்று நினைத்தான் அரசர்.

"அவையோர்களே... இவர்தான் பெரும் புலவர் துருபத். அடுத்து இருப்பவர் பெரும் புலவர் கலாதர். இவர்களுடைய புலமைச் சிறப்பை உலகமே அறியும்," என்று தொடங்கினார் அரசர்.

"பெரும் புலவர் துருபத் அவர்களே! உங்கள் நண்பர் கலாதர் பற்றி இந்த அவைக்கு அறிமுகம் செய்து வையுங்கள்," என்று சொல்லி அமர்ந்தார் அரசர்.

'சிந்தனையில் ஆழ்ந்த துருபத், "நான் இப்போது கவனமாகப் பேசவேண்டும். கலாதரைப் பற்றி உயர்வாகப் பேசினால், அரசர் அதை நம்பினாலும் நம்புவார். எனக்கு கிடைப்பதை விட அவருக்கு அதிகப் பரிசு கிடைக்கும். அதற்கு நானே காரணம் ஆவதா?" என்று நினைத்தார்.

"அரசே! நண்பர் கலாதரைப் பற்றி பேச சொல்லி விட்டீர்கள். உங்கள் உள்ளம் வருந்தும் என்றாலும், அவரைப் பற்றிய உண்மையைச் சொல்வது என் கடமை.

"கலாதர் புலவரே அல்ல. யாப்பு இலக்கணம் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது. எந்தத் தகுதியும் இல்லாத அவரை நான் ஒரு கழுதையாகத்தான் மதிக்கிறேன். (தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1420 - இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் பாரிசை முற்றுகையிட்டான்.
- 1822 - முதலாம் பீட்டர் பிரேசிலின் பேரரசன் ஆனான்.
- 1875 - வேல்ஸ் இளவரசர் (இங்கிலாந்தின் ஏழாம் எட்வேர்ட் மன்னர்) கொழும்பு வந்தார்.
- 1918 - ஐஸ்லாந்து டென்மார்க் முடியாட்சியின் கீழ் சுயாட்சி உரிமை பெற்றது.
- 1934 - சோவியத் ஒன்றியத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீட உறுப்பினர் செர்கே கீரொவ் கட்சித் தலைமையகத்தில் வைத்து லியொனீட் நிக்கொலாயெவ் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1958 - பிரான்சிடம் இருந்து மத்திய ஆபிரிக்கக் குடியரசு விடுதலை பெற்றது.
- 1959 - பனிப்போர்: அண்டார்டிக்கா கண்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவும் அக்கண்டத்தை அறிவியல் ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.
- 1961 - இந்தோனீசியாவின் மேற்கு நியூ கினியில் மேற்கு பப்புவா குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1963 - நாகாலாந்து இந்தியாவின் 16வது மாநிலமானது.
- 1965 - இந்தியாவில் எல்லைக் காவற்படை அமைக்கப்பட்டது.
- 1971 - இந்திய இராணுவம் காஷ்மீரின் ஒரு பகுதியைப் பிடித்தது.
- 1973 - பப்புவா நியூ கினி ஆஸ்திரேலியாவிடம் இருந்து சுயாட்சி பெற்றது.
- 1981 - எயிட்ஸ் நோக்கொல்லி அதிகாரபூர்வமாக கண்டறியப்பட்டது.
- 1982 - முதலாவது செயற்கை இருதயம் யூட்டா பல்கலைக்கழகத்தில் பார்னி கிளார்க் என்பவருக்குப் பொருத்தப்பட்டது.
- 1989 - பனிப்போர்: கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக அதிகாரத்தை அகற்ற கிழக்கு ஜேர்மனி நாடாளுமன்றம் அதன் அரசியலமைப்பைத் திருத்தியது.
- 1989 - பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரசோன் அக்கீனோவை பதவியில் இருந்து அகற்ற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- 1991 - பனிப்போர்: உக்ரேன் வாக்காளர்கள் சோவியத்திலிருந்து உக்ரேன் முற்றாக வெளியேற வாக்களித்தனர்.

பிறப்புகள்

- 1954 - மேதா பட்கர், இந்திய சமூக ஆர்வலர்.

இறப்புகள்

- 1825 - முதலாம் அலெக்சாண்டர், ரஷ்ய சார் மன்னன் (பி. 1777)
- 1973 - டேவிட் பென்-குரியன், இஸ்ரேலின் முதல் பிரதமர் (பி. 1886)
- 1990 - விஜயலட்சுமி பண்டிட் (பி. 1900)

சிறப்பு நாள்

- உலக எய்ட்ஸ் நாள்

### உலக எயிட்ஸ் தினம்




உலக எயிட்ஸ் நாள் ஆண்டு தோறும் டிசெம்பர் 1 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. ஜெனிவாவில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பில் எயிட்ஸிற்கான உலகளாவிய நிகழ்ச்சியின் பொது தகவல் அதிகாரிகளான ஜேம்ஸ் பன்ஸ் மற்றும் தோமஸ் நெட்டேர் எனும் இருவரால் 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்டதே உலக எய்ட்ஸ் தினம். தங்கள் யோசனையை உலகளாவிய நிகழ்ச்சியின் இயக்குனர் முனைவர் ஜோனதன் மன்னிடம் கொண்டு சென்றனர் இருவரும். அவர் இதை அங்கீகரித்து 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் ஒன்றாம் நாளை உலக எய்ட்ஸ் தினமாக கடைபிடிக்க பரிந்துரை செய்தார்.

எயிட்சு மேலும் பரவாமல் தடுக்கவும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிவு காட்டவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் உலகளாவிய இந்த தினத்தின் நோக்கமாகும். எயிட்ஸ் பாதிப்புகுள்ளானவர்களின் உணர்வுகளை மதிக்கவும் அவர்களின் உரிமைகளை மதிக்கவும் மக்களை பழக்குவதும் இதன் முக்கிய குறிக்கோளாகும்.

"கல்வி மற்றும் விழிப்புணர்வு" மட்டுமே எயிட்ஸ் தடுப்பிற்கான சிறந்த மற்றும் சரியான சமூக மருந்து என்பதை உணர்ந்து விழாக்கள், நாடகங்கள், நாட்டியங்கள் ஆகியவற்றில் எயிட்ஸ் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு அம்சங்களை இடம்பெற செய்து மக்களுக்கு விழிப்புணர்வு கருத்துகளை பரப்ப செய்வதே இந்நாளின் நோக்கமாகும்.

பாதுகாப்பற்ற உறவின் மூலமாகவும், எச் ஐ வி தொற்று உள்ள கர்ப்பிணிகளின் மூலமாகவும், சரியாக சுத்தம் செய்யப்படாத ஊசிகளை பயன்படுத்துவதின் மூலமும், பரிசோதனை செய்யப்படாத ரத்தத்தின் வழியாகவும், பிற காரணங்களாலும் இந்நோய் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

முடியாது என்னால் இயலாது என்றுமட்டும் சொல்லாதீர்கள். நீங்கள் எல்லாம் வல்லவர்கள். – சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாவலர் போன்ற பெருமக்கள் நம் மண்ணுக்குத் தேவை

நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எங்கள் மண்ணில் சைவமும் தமிழும் காத்து வளர்த்த பெருமகன். தனி ஒரு துறவியாக இருந்து அவர் ஆற்றிய பணிகளை ஈழத்தமிழ் மண் மறந்து விட்டதோ என்று எண்ணும் அளவில் நிலைமை உள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்ற பெருந்தகை நம் மண்ணில் அவதரிக்காமல் இருந்திருந்தால், எங்கள் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை கூடச் செய்ய முடியாத அளவிலேயே சூழமைவு இருந்திருக்கும்.

தமிழ் மக்களின் கல்வி குறித்துச் சிந்தித்த ஆறுமுகநாவலரே இலங்கையின் முதலாவது இலவச கல்வியின் தந்தை என்றால் அதில் மிகைப்படுத்தல் எதுவும் இருக்க முடியாது.

நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடங்களும் பிரசங்கங்களும் பட்டிதொட்டி எங்கும் பரவின. அந்நியர் ஆட்சியில், அந்நியமொழியில் பாடசாலைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, சுதேசிகளுக்கும் பாடசாலைகள் தேவை என்றுணர்ந்த ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் முதலாவது சைவத்தமிழ் பள்ளிக் கூடத்தை ஆரம்பித்தார்.

இலங்கையில் சுதேசிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலை இது என்று கூறுவதில் ஈழத்தமிழ் மக்கள் பெருமை அடைய முடியும்.

வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயம் என்ற பெயரோடு இன்றும் உயிரோட்டத்துடன் இருக்கின்ற அந்தப் பாடசாலை மிகப்பெரியதொரு கல்விக் கலாபீடமாக உருவாக்கப்பட வேண்டும். இதுவே ஆறுமுகநாவலரின் கல்விச் சிந்தனைக்கு தமிழினம் செய்யும் தலையாய நன்றிக் கடனாகும்.

ஈழத்தமிழ் மண்ணில் தனி ஒரு மனிதராக நின்று சைவத்தையும் தமிழையும் காப்பாற்றிய ஆறுமுக நாவலர் தமிழ் நாட்டில் உள்ள சிதம்பரத்துக்குச் சென்று அங்கு பாடசாலையை நிறுவினார் என்றால் நாவலரின் பணியை எங்ஙனம், எப்படி போற்றுவது?

1864ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆம் திகதி சிதம்பரத்தில் நாவலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. இற்றைக்கு 150ஆண்டுகளுக்கு முன்னர் சிதம்பரத்தில் நிறுவப்பட்ட நாவலர் பாடசாலை இந்த வருடம் 150ஆவது ஆண்டு நிறைவை கோலாகலமாகக் கொண்டாடுகிறது எனும் போது ஈழத்தமிழ் மக்கள் எத்துணை பெருமை அடைமுடியும் என்பதை நாம் சிந்தித்தாக வேண்டும்.

உ.வே சாமிநாதையர் போன்ற மிகப்பெரும் சான்றோர் பெருமக்கள் நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை தம் குருநாதராகப் போற்றி யுள்ளனர் எனும் போது, நாவலர் பெருமானால் ஈழத்தமிழினம் அடையும் பெருமை அளப்பரியது அன்றோ!

ஈழத்தமிழ் மண்ணில் பாடசாலைகளை அமைத்து சைவமும் தமிழும் காத்த ஆறுமுகநாவலரின் அறைகூவலின் பெரும்சொத்தாக நம் மண்ணில் விளைந்ததே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாகும். எங்கள் சைவத்தமிழ் வாழ்வதற்கு அடித்தளமாக–காவலரணாக இருந்தவர் நாவலர் என்ற பேருண்மையை நாம் அறிய முடியும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியப் பணியை ஆற்றிய ஆறுமுகநாவலர் அக் கல்லூரியின் முதலாவது அதிபராக விளங்கிய பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளுக்கு அமைவாக விவி லியத்தை தமிழில் மொழி பெயர்த்து அளித்தார். இதன்மூலம் சமய சமரசத்தை பேணுவதில் நாவலர் பெருவிருப்பம் கொண்டிருந்தார் என்பதும் புரியப்படும்.

ஆக, நல்லைநகர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத்தினத்தை சமயம் கடந்து அனுஷ்டிக்க வேண்டும். ஏனெனில் அவர் வளர்த்த தமிழால் நாம் வாழ்கிறோம்.

நாவலர் பெருமானின் இன்றைய குருபூசை நாளில் அவரின் பணிகளை பரிணாம வளர்ச்சியோடு தொடர திடசங்கற்பம் கொள்வோமாக.

# குடிநீர் விநியோகம் திடீரென நிறுத்தம்

## மக்கள் பெரும் அவதி

வலி.வடக்கில் கழிவொயில் நீரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனியார் நிறுவனம் ஒன்று செய்துவந்த குடிதண்ணீர் விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதனால் அப்பகுதி மக்கள் பெரும் அவதியுறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக்குடிதண்ணீர் விநியோக இடைநிறுத்தம் குறித்து தமது பிரதேச செயலகத்திற்கும் மாவட்டச் செயலகத்திற்கும் சம்பந்தப்பட்ட நிறுவனம் அறிவிக்கவில்லை என வலி.வடக்கு பிரதேச சபையின் உபதவிசாளர் எஸ்.சுஜீவன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கில் நிலத்தடி நீரில் கழிவெண்ணெய் கலந்ததனையடுத்து சுன்னாகம் பிரதேச சபை, வடக்கு விவசாய அமைச்சு மற்றும் தனியார் நிறுவனமொன்று குடிதண்ணீர் விநியோகத்தினை மேற்கொண்டு வந்தது.

இதில் குறித்த தனியார் நிறுவனம் எதுவித முன்னறிவித்தலுமின்றி குடிதண்ணீர் விநியோகத்தினை நிறுத்தியுள்ளதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்தப்பட்டமையால் மாற்று ஏற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்க முடியாதிருப்பதாகவும் சுஜீவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-4)

## நாளை முதல் வகுப்புகளுக்கு தடை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், மாதிரி வினாப்பத்திரங்களை அச்சிடல் மற்றும் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் நாளை முதல் தடைசெய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி 2ஆம் திகதி நள்ளிரவு முதல் டிசம்பர் 17ஆம் திகதி வரை இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வருடத்திற்கான சாதாரண தரப் பரீட்சைகள் டிசம்பர் 8 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 17ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## எலும்புக் கூடுகள் பகுப்பாய்வுக்கு

(திருகோணமலை)

திருகோணமலை கடற்படை முகாமில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பில் இரசாயனப் பகுப்பாய்வு பரிசோதனை மேற்கொள்ளுமாறு கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் ஐ.நா சபையின் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

அவர்களின் விஜயத்தின் ஒரு கட்டமாக, திருகோணமலை கடற்படை முகாமிலும் கண்காணிப்பை மேற்கொண்டிருந்தனர். இதன்போது கண்டுபிடிக்கப்பட்ட சித்திரவதைக் கூடங்களில் இருந்து மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார், பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்திருந்ததுடன், எலும்புக் கூடுகளையும் தமது பொறுப்பில் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## தவணைப் பரீட்சைகள் இன்று இடம்பெறும்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூன்றாம் தவணைப்பரீட்சையில் 27.11.2015 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவிருந்த வடக்கு மாகாண பாடசாலைகளுக்கான தவணைப் பரீட்சைகள் அனைத்தும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் என வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி அன்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ரயில் முன் பாய்ந்து உயிர்த்தியாகம் செய்து கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனை நினைவு கூரும் முகமாக மறுநாள் 27 ஆம் திகதி வடக்கு மாகாண பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

அன்றையதினம் நடக்க விருந்த பரீட்சைகள் யாவும் இன்று இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாடசாலைகளுக்கு வகுப்பறை பாடப்பதிவு புத்தகம் அறிமுகம்

2016 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சு இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் பொதுவான பாடப்பதிவுப் புத்தகத்தினை அறிமுகம் செய்யவுள்ளது. இதற்கான மாதிரிப் புத்தகங்கள் இறுவெட்டு வடிவில் கல்வி அமைச்சினால் மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அச்சடிக்கப்பட்டு வலயங்களினுடைய சகல பாடசாலைகளுக்கும் அடுத்த வருடம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் விநியோகிக்கப்படவுள்ளன.

எனினும் பாட வேலைத்திட்டப் பதிவேடுகளை முன்னர் போலவே பாடசாலைகளே தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும் என வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார். (இ

## பந்துலவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தனவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்டம் தொடர்பில் விவாதம் நடத்த வருமாறு பந்துல குணவர்தன சவால் விடுத்திருந்தார்.

கல்வித்துறை தொடர்பில் பிழையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பந்துல குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் ஏற்கெனவே நிதி அமைச்சர் பாராளுமன்றில் விளக்கம் அளித்துள்ளதாக பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

கல்வித்துறைக்காக மொத்த தேசிய உற்பத்தியில் 5.41 வீதம் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

எனினும் இவ்வளவு தொகை ஒதுக்கப்படவில்லை என பந்துல குணவர்தன உள்ளிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் பந்துல குணவர்தன கல்வி அமைச்சராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் விவாதம் நடத்தப்பட முடியாது என திலங்க சுமதிபால கூறியதனைத் தொடர்ந்து அவையில் பதற்ற நிலைமை ஏற்பட்டது. (எ-11)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
16
2015
ஆரோக்கியமான பெண்கள்தான் ஆரோக்கியமான சமூகத்தின் அடித்தளம். பாரபட்சமின்றி வலுவூட்டுவோம் குடும்பத்தில் பெண்களை

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



பிரார்த்தனையால் நுண்ணிய ஆற்றல்கள் எளிதாக விழிப்படைகின்றன. தன்னுணர்வுடன் பிரார்த்தனை செய்தால் எல்லா விருப்பங்களும் நிறைவேறும்.

நல்லொழுக்கம் நம் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. தீயொழுக்கம் நம்மைச் சீரழிக்கிறது. மிருகத்தனம், மானுடம், தெய்வீகம் என்று மூன்று பண்புகளால் ஆனவன் மனிதன். உன்னுள் உள்ள தெய்வீகத்தை வளர்க்கக்கூடியது நல்லொழுக்கம், மிருகத்தனத்தை வளர்ப்பது தீயொழுக்கம். மிருகத்தனத்தை அழித்து மனிதனாக வேண்டும். அதாவது அன்பும் அறச் சிந்தனையும் உள்ளவனாக வேண்டும். பின்னர் அந்தக் கட்டத்தையும் தாண்டி தூய ஆனந்தமாக, ஸத்–சித்– ஆனந்தமாக ஆக வேண்டும்.

வீழ்ந்த அலை எழுவதில்லை. எனவே மனிதா, இறந்து போன பழங் கதையை வணங்காதே. வா இன்று வாழ்கின்ற நிகழ்காலத்தை வணங்கு. சென்றதை நினைத்துப் புலம்பாதே, இன்றுள்ளதைக் கண்டு அதில் முயற்சியுடன் ஈடுபடு.

இன்று நான் எதுவாக இருக்கிறேனோ, அது என் குருதேவர் ஸ்ரீராம கிருஷ்ணரால் தான். உலகமே அவரால் ஒருநாள் உன்னதம் பெறும். அவர் அவதரித்து அனைத்திலும் நிலவும் அற்புத ஒருமையை அனுபவித்தார். இந்துமதம், இஸ்லாம், கிறிஸ்தவம் அனைத்திலும் அந்த ஒருமையைக் கண்டார். அதையே போதித்தார்.

# வெளிக்கொண்டுவரப்படும் ஓர் இருண்ட வரலாறு










**"வெளிக்கொண்டுவரப்படும் ஓர் இருண்ட வரலாறு!" எனும் தலைப்பில் சண்டேலீடருக்கு ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் மொழியாக்கம்...**

....இவ்வித குற்றச்சாட்டுக்களில் அநேகமானவை அரச புலனாய்வாளர்களையே (CID) நேரடியாக சுட்டிக்காட்டுவதாக குழுவினர் கூறுகின்றனர். இவ்விதமான சந்திப்புக்கள் பலவற்றிலும், சம்பந்தப்பட்ட உறவினர்களை சந்திக்கும் ஏனையோர் யார், யாரென்றும் அவர்களது செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் கேள்விகள் கேட்கப்படுவது வழக்கம். காணாமற்போனவர்களது உறவினர்களது உண்மைக்கும் நீதிக்குமான தேடல்களில் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் சிவில் சமூக அமைப்புகளுங்கூட (CSO) இதுமட்டில் வெளிப்படையான அச்சுறுத்தல்களுக்கும் உயிராபத்துகளுக்கும் உட்படுத்தப்பட்டிருப்பதுடன் அவர்களது முயற்சிகளுக்கு பெருமளவு இடையூறுகளுங்கூட ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

ஜனநாயக சமூகமொன்றில் இவ்விதமான துன்புறுத்தல்கள், தீவிர கட்டுப்பாடுகள், நிர்ப்பந்தங்கள் போன்றவை முற்றிலும் அனுமதிக்கப்பட முடியாதவையாகும். இவை மனித உரிமை மீறல்கள் என்ற மேலதிக குற்றங்களையும் கூடவே கூட்டிச் சேர்த்துக் கொள்வதுடன் ஆட்கள் காணாமற்போகச் செய்யப்படுவதை மறைப்பதற்கான முயற்சியென்ற விதத்தில் கடுமையான தண்டனைக்குரிய குற்றமுமாகிறது.

### தெளிவான வாக்குமூலம்

மேற்கூறப்பட்டது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் உடனடியாகவே முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்பதுடன் காணாமற் போனோர், பாதிக்கப்பட்டோரது உறவினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு இருக்கும் சட்டப்படியான உரிமைகளுடன் உண்மைக்கும் நீதிக்குமான அவர்களது தேடல்களை, நட்ட ஈடுகள் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் போன்ற செயற்பாடுகளை ஏற்று– மதித்து நடக்கவேண்டிய அரசின் கடப்பாடுகளையிட்டு நாட்டின் உயர் தலைமைத்துவம் அரசுக்கு அறிவுறுத்துவதுடன் இப்படியான தவறுகள் மீண்டும் இடம் பெறக்கூடாதென எச்சரித்து உத்தரவாதப்படுத்தவும் வேண்டும். இவையனைத்தும் உயர் அதிகாரத்தின் தெளிவான ஒரு வாக்குமூலமாக பகிரங்கமாக அறிவிக்கப்படவும் வேண்டுமென்பதே ஐ.நா. செயற்பாட்டுக்குழுவினது கருத்தாகும்.

புதிய அரசாங்கம் இதுமட்டிலான தனது கடப்பாடுகளில் வெளிப்படுத்திக் காட்டியிருக்கும் முயற்சிகளிலிருந்து காணாமற் போனவர்கள் பற்றிய ஒட்டுமொத்தப் பிரச்சினைகளாலும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் அனைத்து இலங்கை மக்களது மனங்களிலும் நம்பிக்கை துளிர் விடுவதாக ஏரியல் டியுலிற்ஸ்கி என்ற மற்றுமொரு குழு நிபுணர் கூறுகிறார். காணாமற் போனோருக்கான ஜனாதிபதி ஆணைக்குழு மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லையென்பது தெளிவாக இருக்கும் காரணத்தினால் காணாமற்போனோர் மட்டிலான நடவடிக்கைகளுக்கென ஒரு அலுவலகமும், உண்மைகளுக்கான ஒரு ஆணைக்குழுவும் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் மேலும் கூறுகிறார்.

எடுத்துக்காட்டாக காணப்படக் கூடிய சில சம்பவங்களை மட்டுமே தெரிந்தெடுத்து வழக்குத் தாக்கல் செய்து விசாரிப்பது சர்வதேசத்திற்கான இலங்கையின் கடப்பாடுகளுக்கு அமைவானதாகவோ அல்லது பாதிக்கப்பட்டவர்களதும் இலங்கையின் முக்கிய சமூகப் பிரிவுகளை சார்ந்த மக்களதும் எதிர்பார்ப்புகளை திருப்திப்படுத்துவதாகவோ இருக்கப்போவதில்லை.

எனவே, பலவந்தமான முறையில் காணாமற் போனவர்கள் பற்றிய அனைத்துச் சம்பவங்களும் பதியப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

கூடுதல் எண்ணிக்கையிலான வழக்காளிகள் தரப்பு கோரிக்கைகளுக்கு ஈடு செய்யக்கூடிய அளவில் ஆற்றல் கொண்ட சட்டவாளர்கள் நீதிமன்றங்கள் போன்றவையும் இதற்குத் தேவைப்படும். அனைத்து வழக்குகளிலும் குற்றமிழைப்ப தற்கு கருவியாகப் பயன்படுத்தப்பட்டவர்கள் குற்றத்திற்கான நேரடி அறிவாற்றலைப் பயன்படுத்தி நடத்திய காரணகர்த்தாக்கள் மற்றும் கட்டளையிடும் அதிகாரப் பொறுப்பினை பயன்படுத்தி இழைக்கப்பட்ட குற்றங்கள் என்ற விதத்தில் ஆராய்ந்தே அவை கண்டறியப்பட வேண்டும்.

### விளக்கவிரிவான கொள்கை

ஆட்கள் பலவந்தமான முறையில் காணாமற் போகச் செய்யப்பட்ட காரணங்களால் பாதிக்கப்பட்டவர்கள் விடயத்தில் புலன் விசாரணைகள் மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது, நட்ட ஈடுகள் வழங்குவது மற்றும் மீளவும் குற்றங்கள் இடம்பெறாது தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கும் விதத்தில் அவ்விடயங்களை கையாள்வதற்கான தெளிவானதும் விரிவானதுமான பகிரங்கமான கொள்கையொன்றை புதிய அரசு பரிந்துரை செய்வது ஊக்கமளிப்பதாக ஐ.நா.குழு கூறுகிறது.

தமது இனிய உறவுகள் பலவந்தமான முறையில் காணாமற்போகச் செய்யப்பட்ட காரணத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கையின் நீதி ஒழுங்கு நடைமுறைகள், வளக்காடு சேவைகள், பொலிஸ் அல்லது ஆயுதப்படை போன்ற அனைத்திலுமே ஒட்டுமொத்த நம்பிக்கை இழந்து போனவர்களாகவே உள்ளனர். காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் விடயத்தில் குற்றவாளிகள் குற்றவிலக்கு (Inpunity) ப் பெற்ற விதமாக செயற்படும் முன்னைய நடைமுறையே முற்றிய நோய் போன்று தொடர்ந்துமுள்ளது. எனவே இவ்விதம் காணாமல் மறைந்துபோனவர்கள் இருக்குமிடத்தையோ, அவர்களது தலைவிதியையோதானும் நேர்மையான முறையில் தீர்மானித்து அதற்கேற்ப தண்டனையையோ நட்டஈட்டினையோ உரியவர்களுக்குப் பெற்றுக்கொடுத்து உண்மைக்கும் நீதிக்குமான மானிட தேடல் உரிமைகளை இலங்கையில் உத்தரவாதப்படுத்துவதற்கு போதியளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையே இப்போது உள்ளது.

இவ்விதமாக, பரந்துபட்டதும் ஆழ்ந்த உள் ஈடுபாட்டுடனும் கனிவான பேச்சு மற்றும் பண்புடன்கூடிய மதியூக ஆலோசனையுமே எந்தவிதமான காரியங்களையும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உதவும் என்பதே ஐ.நா. குழுவினரது கருத்தாகும். இந்த பலவந்தமான, காணாமற் போதல்கள் நாட்டின் எந்தப் பகுதியில், எந்தக் காலகட்டத்தில் இடம்பெற்றதாயிருந்தாலும் எந்தவிதமான பாரபட்சமுமற்ற விதமாக அவையனைத்தும் விரிவானதொரு கொள்கைத் திட்டத்தின் கீழ் கையாளப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கும் பொருட்டு நெருக்கமான முறையில் அவர்களை அனுதாபத்துடன் அணுகிச் செயற்படுவதற்குரிய துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உள்ளது.

இலங்கை அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கான தனது விருப்பத்தினை குழு மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதுடன் விடயங்கள் மட்டில் அரசாங்கம் வெளியிடும் நல்லிணக்கப்பாட்டிற்கான இக்கொள்கைப் பிரகடனத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தனது தடையற்ற ஆதரவை வழங்குவதற்கு தயாராகவுமிருப்பதாகவே குழு அறிவித்துள்ளது.

பலவந்தமான முறையில் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்குமான தனது உறுதியான ஒருமித்த ஆதரவினை வழங்குவதாக ஐ.நா. குழு மீண்டும் உறுதிபடக் கூறுகிறது. பலவந்தமான முறையில் காணாமற் போகச் செய்யப்பட்டவர்களது தலைவிதி அல்லது அவர்கள் எங்குதான் உள்ளனர் என்ற விபரங்கள் தெளிவுபடுத்தப்படாதவரை அவர்களது மனித உரிமைகளுக்கெதிரான ஒரு நிரந்தர குற்றச் செயலாகவே அது தொடர்ந்துமிருப்பதுடன் அவர்களது அன்பு உறவுகளது தொடர் அவஸ்தைகளும் வேதனைகளும் தொடர்வதும் தொடரப்போவதுமான இக்குற்றச் செயலுக்குரிய உயிருள்ள சாட்சிகளாகவே இருக்கும். மனித உரிமைப் பாதுகாவலர்கள் பலரதும் சிவில் சமூக அமைப்புகள், சட்டத்தரணிகள் மற்றும் ஏனைய அனைத்து அனுதாபிகள், ஆதரவாளர்கள் போன்றவர்களும் ஒரு வழக்கமாகிப்போயிருக்கும் பயங்கரமான இந்த தீமையை ஒழித்துவிடுவதற்காக கடினமான பாதக சூழ்நிலைகளிலும் எடுத்திருந்த சகல முயற்சிகளுக்கும் சர்வதேச அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இந்த ஐ.நா. குழு அறிவிக்கிறது.

(முற்றும்)

**தமிழில்-யோகர்**

# அரசின் சலுகைகளுக்காகவே எம்.பிக்கள் ஆதரவு தெரிவிக்கின்றனர்

## பட்ஜெட் குறித்து கம்பன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு-செலவு திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என ஆளும்கட்சியே தெரிவித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் 2016ஆம் ஆணடுக்கான வரவு-செலவு திட்டத்திலேயே கல்வி துறைக்கு குறைவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீட்டில் காணப்படும் ஊழல்களை இனங்கண்ட பின்னரே நிதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் குறித்த பிரேரணைக்கு ஆதரவாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட 44 பிரதிநிதிகள் கையொப்பம் இட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் விமல் வீரவன்ச உள்ளிட்ட ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் கையொப்பம் இடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி தொடர்பில் ஏமாற்றம் அளிப்பதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

முன்னதாக கடந்த அரசாங்கத்தில் பல்கலைகழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தவில்லை என குறிப்பிட்ட அவர் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நீடித்திருப்பதை அவர்கள் விரும்பவில்லை எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி சலுகைகள் வழங்கபோவதாக தெரிவித்துள்ளமையையும் அவர் இதன் போது நினைவு கூர்ந்துள்ளார். (எ-11)

# 'நிலமும் நாங்களும்' ஆய்வறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிலமும்நாங்களும்எனும்தொனிப் பொருளில் போருக்கு பின்னரான காலப்பகுதியில் வடபகுதியில் நிலம் பற்றிய ஆய்வறிக்கை வெளியீடு நேற்றையதினம் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாற்றம் நிறுவனத்தின் ஏற்பாட்டில்மேற் கொள்ளப்பட்ட அந்த ஆய்வறிக்கையானது வடபகுதியில் போருக்கு பின்னரான காலப் பகுதியில் இருக்கின்ற காணிதொடர்பானபிரச்சினைகளின் ஆய்வறிக்கையாகும். இது வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் 2 ஆய்வாளர்களும் 18 உதவி ஆய்வாளர்களும் இணைந்து 9 மாத காலமாக மேற்கொண்ட ஆய்வாகும்.

இந்தஆய்வறிக்கையில் யுத்தத்தால் சீரழிந்த ஒரு நாட்டின் மீள் உருவாக்கம், மீள் இணக்கம் என்பவற்றில் சமூகங்கள், குடும்பங்கள், ஆண் பெண் ஆகியோரது வாழ்வாதாரத்தினதும் நல்வாழ்வினதும் மையப்பொருளாக அவ்ர்களது காணி உரிமையைஅ தாவதுகாணியைப் பயன்படுத்துதல் அல்லது அடைதல் மற்றும்காணியின்மீதான அவ்ர்களது கட்டுப்பாடு ஆகியவற்றை விளக்குகின்றன.

இந்த ஆய்வின் முடிவில் மாற்றம் நிறுவனத்தினால் 9 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் முக்கியமாக வடக்கில் காணி தொடாபாக பல பிரச்சினைகள் காணப்படுகின்றமையால் அதை ஒழுங்கமைப்பதற்காகவும் மக்கள் தமது பிரச்சினைகளை முறையிடவும் மத்திய, மாகாண அமைச்சுடன் சிவில் அமைப்புக்களை ஒன்றிணைத்து ஒரு செயலணியை உருவாக்கவேண்டும் என வட மாகாண முதலமைச்சரிடம் மாற்றம் நிறுவனத்தின் இயக்குநர் பொ.நரசிங்கத்தினால் முன் மொழியப்பட்டது.

இந்தநிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான அரசியல் முதன்மைச் செயலாளர் டேவிட், சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் வடமாகாண பொறுப்பாளர் லார்ஸ், வடமாகாண் விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சிவசக்தி ஆனந்தன், ஆய்வாளர்கள், சட்டத்தரணிகள், சிவில் அமைப்பினர் உட்படபலர் கலந்துகொண்டனர். (எ-9)

## இலங்கை இராணுவத்தை...

பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு வந்த இந்திய இராணுவத் தளபதிக்கு நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சின் மைதானத்தில் அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, இலங்கை இராணுவத் தலைமையகத்துக்கு சென்ற இந்திய இராணுவத் தளபதிக்கு, இலங்கையின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.

இதையடுத்து, இந்திய இராணுவத் தளபதிக்கும், இலங்கை இராணுவத் தளபதி தலைமையிலான உயர்மட்டக் குழுவினருக்கும் இடையிலான பேச்சுக்கள் இடம்பெற்றன.

இதன்போது, இருநாடுகளுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்புகள் குறித்தும், 1987இல் இந்திய அமைதிப்படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்தது குறித்தும் இரு நாட்டுத் தளபதிகளும நினைவுபடுத்திக் கொண்டனர்.

இலங்கையில் நிலை கொண்டிருந்த போது, ஒரு கொம்பனி தளபதியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வன்னிப் பகுதிகளில், பணியாற்றிய அனுபவங்கள் குறித்து இந்திய இராணுவத்தளபதி நினைவு கூர்ந்தார்.

இந்தச் சந்திப்பின் போது பிராந்தியத்தின்தற்போதைய நிலைவரங்கள் விவகாரங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. தகவல் பரிமாற்றம் மூலம் சுமுக மான முறையில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

சைபர் தாக்குதல் உள்ளிட்ட வளர்ந்துவரும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்க, இலங்கை இராணுவத்தை, அனைத்துலக தரங்களுக்கேற்ப நவீன மயப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இந்திய இராணுவத் தளபதி சுட்டிக் காட்டினார்.

இந்திய இராணுவத் தளபதியின் கருத்தை ஏற்றுக் கொண்ட இல்ங்கை இராணுவத் தளபதி, இந்த புதிய பரப்புகளில் இலங்கை இராணுவத்துக்கு இந்திய இராணுவம் பயிற்சிகளை அளிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து பரிசீலிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்தப் பேச்சுக்களின் போது, இரண்டு நாட்டு இராணுவங்களினதும் பயிற்சித் திட்டங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இலங்கை இராணுவத்துக்கு தொடர்ந்து பயிற்சி அளிப்பதற்கான உறுதி மொழியை அளித்த இந்திய இராணுவத் தளபதி, எதிர்காலத்தில் இதனை விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் இராணுவத் தேவைகளை தரமுயர்த்துவதற்கான தொழில்நுட்ப உதவிகளை தமது இராணுவம் வழங்கத் தயாராக இருப்பதாகவும், இந்திய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்திய இராணுவத் தளபதி நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சில், இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச்செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (எ-11)

## இந்தியத் தளபதி...

அமைச்சர் சாகல ரத்நாயக்கவும், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவும், இந்திய இராணுவத் தளபதியுடன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹாவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவுகளை சுட்டிக்காட்டிய பிரதமர், இந்த உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுக்களின்முடிவில், பிரதமரும், இந்திய இராணுவத் தளபதியும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர். (எ-11)

## அஞ்சலி செலு...

சுடரேற்றிய இரு ஊழியர்களையும் கோப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்துள்ளனர்.

விசாரணையின் போது தாம் உயிரிழந்த தமது சகோதரர்களுக்கே அஞ்சலி செலுத்தியதாக பொலிஸாரிடம் தெரிவித்ததை அடுத்து தம்மை விடுவித்ததாகவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஊழியர்கள் தெரிவித்தனர். (எ-11)

## ஆளும் கட்சி...

சிங்க தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்திற்கு ஆத்ரவளிக்கும் நோக்கில் பத்து உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள உள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆளும் கட்சியின் அனைத்து உறுப்பினர்கள் கூட வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக பிரசாரம் செய்து மக்களை பிழையாக வழிநடத்துவதே அரசாங்கத்தின் திட்டமாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியவில்லை என்பது உறுதியாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# கடனில் அரசாங்கம்

(கொழும்பு)

தற்போத்தய அரசாங்கம் 2015ஆம் ஆண்டிற்குள் பெரிய அளவில் கடன் பெற்றுகொண்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டிய அபயராமையில் வரவு செலவு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டிற்குள் தற்போதைய அரசாங்கம் பெரிய அளவில் வெளிநாட்டு கடன் பெற்றுகொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அந்த கடன் பணம் 6.5 வட்டி அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## தமிழ் அரசியல்...

தெரிவிக்கும்போதே வாசுதேவ நாணயக்கார இதனை குறிப்பிட்டார்.

இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்வதே இடதுசாரிக் கட்சிகளிடையே காணப்படும் பொதுவான கருத்து என அவர் கூறியுள்ளார்.

எனினும் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் அவர்களது நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம்மிக அவதானமாக இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை த்மிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாத கருத்தை கைவிட்டமை மகிழ்ச்சியளிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய ஐக்கியத்திற்கு அத்திபாரம் இடத் தயார் நிலையில் இருக்கின்றனரா என்ற சந்தேகம் காணப்படுவதாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (எ-11)

## சிறு பிரச்சினையை தீர்க்கா...

பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் 11 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

அந்த நிலையில், அவர்களினால் மீண்டுமொரு பிரச்சினை ஏற்படவில்லை எனவும், குறித்த 200 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதன் ஊடாக பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நல்லிணக்கத்தின் ஊடாக இனங்களுக்கு இடையில் ஒற்றுமை ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான சிறு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க மறுக்கப்படுகின்ற நிலையில், தமிழர் எதிர்நோக்கும் பாரியளவிலான பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும் எனவும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்திற்கு தமது கட்சி கால அவகாசத்தை வழங்கி செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் ஒன்றிணைந்து நாட்டில் காணப்படுகின்ற பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாக தர்மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## நம்பகத்தன்மை குறித்து...

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக மோல்டா சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போது போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கான பொறிமுறையை உருவாக்க பொதுநலவாய அமைப்பு உதவிகளை வழங்கும் என்று பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உறுதியளித்திருந்தார்.

அத்துடன், இது தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயன்கிடைப்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிப்படுத்த வேண்டும் எனவும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கோரிக்கை விடுத்தார்.

இதற்காக, இலங்கை அரசாங்கம்மேற்கொள்ளும்அனைத்து நடவடிக் கைகளுக்கும் பிரித்தானிய அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்திருந்தார.

இந்நிலையிலேயே, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இப்பயணத்தின் போது இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த இலங்கை அரசாங்கம் உருவாக்கவுள்ள விசாரணைப் பொறிமுறையின் நம்பகத் தன்மை குறித்து அவர் கூடுதல் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

## தமிழ் அரசியல்...

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன், சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோஹன புஷ்பகுமார ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போதே இந்த உறுதிமொழியை அரசாங்கம் வழங்கியிருப்பதாக ராவணா பலய அமைப்பின் இணைப்பாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச் சந்திப்பில் அண்மையில் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கேள்வி எழுப்பினேன். இதற்கு பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன், சிறு குற்றங்கள் இழைத்த 39 பேரே இவ்வாறு விடுவிக்கப்பட்டதாக கூறினார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இனியும் விடுவிக்கப்படுவார்களா? என்ற கேள்வியை எழுப்பியபோது அதற்கு பதிலளித்த அமைச்சர், இனியும் அவர்கள் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.

அத்துடன் எஞ்சியுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எதிர்வரும் 10ஆம் திகதி விசேட நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற உறுதிமொழியையும் அமைச்சர் இந்த சந்திப்பின் போது வழங்கினார்.

அதேவேளை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைபெறும் நிலையில் அதே சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும், படை அதிகாரிகளது விடுதலை தொடர்பில் கேள்வி எழுப்பனேன். அத்தோடு சிங்களப் புலி என்ற காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் கடத்தல் தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகளின் விடுதலை குறித்தும் வினா எழுப்பினேன்.

அவர்கள் சார்ந்த குற்றச்சாட்டுகள் விசாரணை செய்யப்பட்டு நிச்சயம் விடுவிக்கப்படுவார்கள் என்ற பதிலை அதிகாரிகள் வழங்கினார்கள்.

திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்ட இரகசிய முகாம் சம்பந்தமாக ஐ.நா சிறப்பு அதிகாரிகளும் கருத்து வெளியிட்டிருந்தனர். அங்கு சென்ற புலனாய்வு அதிகாரிகள் கடற்படை சிப்பாய்கள் மூவரை கைது செய்தமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதியின் செயலாளர், அப்படி ஒரு சம்பவம் இடம்பெறவில்லை என்றும், தனக்கு அதுபற்றி தெரியாது எனவும் பதிலளித்தார்.

எனினும் அவ்வாறானதொரு சித்திரவதை முகாம் அங்கு முன்னெடுக்கப்படவில்லை என்றும், நிலக்கீழ் ஆயுதக்கிடங்கு ஒன்றே அங்கு காணப்படுவதாகவும் கடற்படை பேச்சாளர் கூறியிருக்கிறார் என்றார். (எ-11)

## தமிழருக்கு...

இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் நேற்று திங்கட்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி தங்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவராகவே உள்ளார் என்று குறிப்பிட்ட தேரர், எனவே தங்களது பிரச்சினைகள் குறித்தும் அவர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் மாவீரர் தினத்தன்று பாடசாலை மாணவன் ஒருவர் புகையிரதம் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார். இது ஏன் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளான மாவீரர் தினத்தில் இடம்பெறவேண்டும்?

இந்த சம்பவத்தை அடுத்து குழப்பங்கள் நிகழக்கூடும் என்று தெரிவித்த கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், வடக்கில் பாடசாலைகள் அனைத்தையும் மூடுவதற்கு தீர்மானம் எடுத்ததாக முட்டாள்தனமாக கூறியிருந்தார்.

அப்படியென்றால் இந்த நாட்டில் பரீட்சைகளில் தோல்வியடைந்த மாணவர்கள் பலர் தற்கொலை செய்துகொள்கிறார்களே. அவர்கள் சார்பிலும் பாடசாலைகள் மூடப்பட வேண்டும் அல்லவா?

தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் குரல எழுப்பிவரும் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தொடர்ச்சியாக இனவாதத்தையும், தமிழ் தேசியத்தையுமே கூறிவருகின்றார்.

அதற்கு ஒருபக்கம் பந்தம் பிடிக்கும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன், மறுபக்கத்தில் வேறு பிரிவினரை பயன்படுத்தி வேறுபாடாக கருத்துக்களை பரப்பிவருகின்றார்.

இந்த நிலையில் இவர்களுக்கு பொலிஸ் அதிகாரம் கொடுத்துவிட்டால் என்னென்ன செய்வார்கள் என்பதை நினைத்துப் பார்க்கையில் ஜீரணிக்க முடியாது என்றார். (எ-11)

## பாக்.போர்க்கப்பல்...

வித்துள்ளது.

இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள வலுவான உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் இந்தப் பயணம் இடம்பெறுவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தின் போது பாகிஸ்தான் போர்க்கப்பலில் உள்ள அதிகாரிகள், இலங்கை கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதுடன், கூட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர்.

இந்திய இராணுவத் தளபதியும், பாகிஸ்தான் போர்க்கப்பலும் ஒரே நேரத்தில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளதானது, பாதுகாப்பு வல்லுனர்கள் மத்தியில் அதிக கவனத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-11)

## புலிகளுக்கு...

டதா என்பது குறித்து விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

2005ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பிரதான கட்சிகளின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

ஒரு இலட்சத்து 86 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியீட்டி, ஜனாதிபதியானார்.

யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்திலும் குறைந்த பட்சம் மூன்று லட்சம் வாக்குகள் புலிகளின் அழுத்தம் காரணமாக ரணில் விக்கிரமசிங்கவிற்கு கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வெற்றியை உறுதி செய்து கொள்வதற்காக மகிந்த தரப்பு 784 கோடி ரூபாய் பணத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிபத்தி சூரியாராச்சி ஆகியோர், புலிகளின் சர்வதேசத் தலைவர்களில் ஒருவரான எமில் காந்தனுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கட்சியின் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட தரப்பினர் இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு கோரியுள்ளனர். (எ-11)

## தமிழ்-முஸ்லிம்...

மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

. வரவு-செலவு திட்டத்தின் 2016 இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பிரச்சினைகள் தொடர்பில் இரு சமூகத்தினருடனும் கலந்துரையாட வேண்டும். அதன் பின்னர் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கமைய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்தோடு இம்முறை வரவு-செலவு திட்டத்தில் கண்டி, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் புற்றுநோய் வைத்தியசாலைகளை நிறுவவும், நாடு முழுவதும் ஆயிரம் சிறுநீரக மத்திய நிலையங்களை உருவாக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. இது மிகவும் பாராட்டுக்குரியது.

விவசாயிகளுக்கு வழங்க முன்மொழியப்பட்டுள்ள இரண்டரை ஏக்கருக்கான உர மானியத்தை 5 ஏக்கருக்கானதாக அதிகரித்து வழங்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

கடந்த பத்து வருடங்களாக நாம் அரசாங்கத்தை அவதானித்துக் கொண்டே இருக்கிறோம். தற்போதைய அரசின் புதிய வரவு செலவு மிகவும் மாறுபட்டதாக காணப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)


**அனுமதி**

தரம் 3,4,5,6 மாணவர்களுக்கான புதிய ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனுமதிக்கு அழையுங்கள்.

**Writing, Grammar, Spoken**

தொடர்புகளுக்கு:- 077 055 6375 (சி-2833)

**Raveens EMC - Karaveddy**

Grade 6,7, & 8 admission available for English Medium Students only with conditions. (C-2830)

P. Easwaranathan
Director 021-226-3321

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்துக்கு பின்வரும் பணிநிலைகளுக்கு ஆள் தேவை.

1. Designer (Expert in - Adobe Premier & Photoshop, CorelDRAW)
2. Direct Sales Person (நேரடி விற்பனையாளர் )

(C-2830)

தொடர்புகளுக்கு:
0775385494

**தென் இந்திய யாத்திரை**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஊடான யாத்திரை
நாட்கள் -16, யாத்திரிகர் - 10, ஆரம்பம் - 16.12.2015

**செல்லும் இடங்கள் :** மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூத தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல் மருவத்தூர், பொற்கோவில், மதுரை மீனாட்சி, குருவாயூர், மைசூர் சாமுண்டீஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமரி, ஸ்ரீரெங்கம், பிரம்மா கோவில் உட்பட 65 இற்கும் அதிகமான ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

**பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்**

இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, குடிநீர், தரமான தங்குமிடம், AC வாகன வசதி, எயார்போட் போக வர வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட மேல் விபரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும். (C-2831)

விபரங்களுக்கு :
கலாநிதி T. ஸ்ரீ ரெங்கநாதன், மகன் ராஜன்
TP. 0777680102 / 0777362154

E.mail : sriranganathan2601@gmail.com
www.sridevipilgrims.com
Facebook : sridevisriranganathan.thuraiappa

**யாழ் புத்தகசாலையின்**

**2016இன் புதிய கல்வி ஆண்டுக்கான மாபெரும் மலிவு விற்பனை**

அனைத்து புத்தகங்களுக்கும்
10% முதல் 20% வரையிலான விசேட விலைக் கழிவும்.

காகிதாதிகள், எழுதுகருவிகள், அப்பியாசக் கொப்பிகளுக்கு
10% முதல் 40% வரை விசேட விலைக்கழிவு
வாரத்தில் அனைத்து நாட்களும்
காலை 6.00-இரவு 8.00 மணி வரை திறந்திருக்கும்.

இச் சலுகை 01/12/2015 முதல் 15/01/2016 வரை மட்டுமே



**யாழ் புத்தகசாலை**

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-0212217874, 0778349507
(C-2837)

30 YEARS 1985-2015

**கொழும்பு பங்குச் சந்தையின் 30 ஆவது அகவையை முன்னிட்டு (01-12-2015) இன்றைய தினம்**

CSE COLOMBO STOCK EXCHANGE

★இலவச கருத்தரங்கு (பி.ப 3.00 முதல் பி.ப 4.00 வரை) மற்றும் ஆலோசனை
★வரவு செலவுத்திட்டம் தொடர்பான ஆய்வுக்குறிப்பு
★இணையத்தள வியாபாரம் தொடர்பான பயிற்சி

என்பன இடம் பெறவுள்ளன.

(C-2836)

மேலதிக தகவல்களுக்கு :
0777822014 / 0212221455
147 - 2/3, கே.கே.எஸ் வீதி (சத்திரச்சந்தி), யாழ்ப்பாணம்.

**அன்பொளி கல்வியகம்**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்

**2016 இல் தரம் 2 , 3 , 4**

மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

அனுமதிகளை 30.11.2015 திங்கட்கிழமையில் இருந்து 05.12.2015 வெள்ளிக்கிழமை வரை பி.ப 3.00 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே
ஊட்டிடுவோம். இயக்குநர்

(C-2829)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.